

UK£1.00 France 10FF Swiss 3.00SF, Germany 3.00DM Canada $2.50

# ஈழகேசரி

மார்ச் 99



உறவுக்குள் நயவஞ்சகம்:
கொலையும் குரூரமும்



# JAFFNA HOUSE

Sri lankan and South Indian Restaurant
90 High Street, Tooting Broadway,
London SW 17

**PHONE: 0181 767 6668/0181 672 7786**

வாடிக்கையாளரின் நிறைவான ஆதரவை
நெஞ்சில் நிறைத்து 8வது ஆண்டில்
காலடி எடுத்து வைக்கும்
எமது உணவகம் தனது இதயம் நிறைந்த
புதுவருட வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறது.



# Jaffna House

**Fully Licenced**
**TANDOORI RESTAURANT**
ENTRANCE COVERTON ROAD

**OPENING HOURS:**
**MONDAY TO SUNDAY**
**12 NOON TO MIDNIGHT**

# கொலைத் தொழிலுக்குத்தான் உனக்கு விருது!

சபாஷ் பண்டாரநாயக்க!

செம்மணி புதைகுழி விவகாரத்தை உனது அரசு கையாளும் அபாரமான திறமைக்கு பல கோடி சபாஷ்கள் போடலாம்!

'பூ இன்றி — காகிதப் பூ கூட இன்றி மாலை கட்டும்' உனது சாகசம் மிகவும் அபாரம்!

செம்மணியில் உனது ஆயுதப் படைகள் நரபலி எடுத்த நூற்றுக் கணக்கான ஈழத் தமிழ் மக்களின் சடலங்கள் இருப்பதாகக் கூறிய சிப்பாய் ராஜ பக்சவை விட்டு விட்டு மண்ணியல் நிபுணர் களையும் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை யாளர்களையும் செம்மணி மயானத்துக்கு அழைத்துச் சென்று 'சினிமா' ஒன்றை நடத்திக் காட்டி விட்டாய்.

நீதிக்கும் புதிய வரைவிலக் கணம் விதிக்கும் வகையில் முதலில் 'மற்றுமொரு' நீதிபதி யையும் தொடர்ந்து பத்திரிகை யாளர்களையும் அதிகாரிக ளையும் செம்மணிக்கு அனுப் பிய உனது திறமைக்கு என்ன பரிசு கொடுப்பது என்றே தெரிய வில்லை.



செம்மணியில் உள்ள புதைகுழி களில் உனது அடியாட்களி னால் சித்திரவதைக்குள்ளா க்கி இரத்தம் குடிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் சடலங்கள் இருந்ததாக மண்ணியல் நிபு ணர்களும் பத்திரிகையாளர் களும் ஒருபோதும் தெரிவிக்க வில்லையே?

ராஜபக்ச அம்பலப்படுத்திய அந்தப் புதை குழிகளைக் கண்டு பிடிக்க அங்கு சென்றவர்கள் என்ன மந்திரவாதிகளா?

செம்மணி புதைகுழி விவகாரம் அம்பலத்துக்கு வந்து பல மாதங்களாக 'இன்று, நாளை, நாளை மறுதினம்' விசாரணை என ஈழத் தமிழர்களை மட்டுமல்லாது உலகையே ஏமாற்றிக் கொண்டி ருந்த அம்மணி எத்தனை கோடி மக்களின் கண்களில் மண்ணைத் தூவியிருக்கிறாய்.

பாரிஸ் செர்போண் பல்கலைக்கழகம் இவ்வா றான குள்ளத் தனத்தைக் கற்றுத் தந்திருக்காது என எண்ணுகிறேன்.

"தனது பதவிக்காக நாட்டை சின்னாபின்னப் படுத்தி விட்ட அதிஉத்தம 'கிழட்டுக் குள்ள நிரி' யை விட இன்றைய 'பெண் நரி'க்கு அமபாரக் குள்ளக் குணம்" எனப் பலர் கூறக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

செம்மணி மூலம் அதனை ருசுப்படுத்தி விட்டாய்.

கொல்லப்பட்டவர்கள் நாதியில்லாத ஈழத் தமிழர்கள்.

கொன்றவர்கள் படை பலத்துடன் இருக்கும் சிங்களவர்கள்.

இந்நிலையில் நாதியில்லாத தமிழர்களுக்கு நீதி வழங்க வேண்டுமா? என்ற அளப்பரிய உணர்வு தான் உனது இரத்தத்திலும் ஊறியுள்ளது என்பதை மீண்டும் உணர்த்தியிருக்கிறாய். உனக்கு துதி பாடும் தமிழர்களும் நாதியில் லாதவர்கள் தான் என்பது இறைச்சித் துண்டை புசித் துக் கொண்டிருக்கும் குழுக் களுக்கும் அணிகளுக்கும் காலம்தான் உணர்த்த வேண்டும்.

செம்மணியில் மட்டுமல் லாது ஈழத் தமிழ் இனத்தை யே குழி தோண்டிப் புதைத் துக் கொண்டி ருக்கும் நீ— நாட்டில் ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாத்து வருவ தாக திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறாய்.

அதற்காக 'நோபல் பரிசு' வழங்க வேண்டும் என்ற கோரிக்கை விடுத்திருக் கிறாய்.

புனிதமான அரும் பெரும் சாதனை படைத்த அன்னை திரேசா, நெல்சன் மண்டேலா போன்ற வர்களுக்கு வழங்கப்பட்ட அந்தப் பரிசின் பெயரை நீ உச்சரித்ததன் மூலம் அந்தப் பெயருக்கே மாசு கற்பித்து விட்டாய்.

கொலைத் தொழிலுக்கு விருது வழங்குபவர்கள் யாராவது இருந்தால் மட்டுமே உனக்கு விருது கிடைக்க வாய்ப்புண்டு என்பது எனது தாழ்மை யான கருத்து.

அன்றே தந்தை உறுதியாகக் கூறிவிட்டார்:

**"ஈழத் தமிழ் இனத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"**

ஈழகேசரி
EELAKESARI
ஆசிரியர்:
ஈ.கே. ராஜகோபால்
முகவரி: 38, Moffat Road, London SW17 7EZ
Tel: 0181 767 8004 Fax: 0181 767 7866

## சினிமா சாக்கடை

புலம்பெயர் மண்ணில் கேள்விக் குறியோடு நிற்கும் எம் வாழ்க்கைக்கு விடை தேடும் தங்கள் பணி தொடர எம் வாழ்த்துக்கள். அத்தோடு மலிவான சினிமா மோகத்துன்னுள் சிக்கிக் கொண்டு சாக்கடை உலகுக்குள் விழாமல் ஈழத்தின் உண்மை நிலைகளையும்- மண்- மொழி- விடுதலையின் இன்றைய தேவையை ஓங்கி முரசறையக் கூடிய கனமான முற்போக்குப் படைப்புக்களையே என் போன்ற வாசகர்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். 'ஈழகேசரி' ஈழத் தமிழர்களுக்கு வழிகாட்டியாக அமையட்டும்....

-சோ. மதீஷன்
பாரிஸ்


## திறனை அடக்கி வைக்க முடியாது

புத்தொளி தரும் சஞ்சிகையை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். திறனை அடக்கி வைக்க முடியாது- அடங்கவும் செய்யாது எனக் காட்டி விட்டீர்கள். இன்னும் பல பிறைகள் காண வாழ்த்துகிறோம். ஒரு கோரிக்கை- வாடி மறைந்து வரும் ஈழ நாட்டுப் பாடல் களுக்கு உயிர்கொடுக்கச் சில பக்கங்களை ஒதுக்குங்கள்.

சூரியா-ஆனந்தி(பி.பி.சி தமிழோசை)
93,Elm Walk,
Modern

## பேனை பிடித்தவன் படும் பாடு

நாங்கள் இருவரும் சொந்தக்காரர்கள்-தமிழ் மரபால். மேலும் எழுத்துத் துறை என்ற பரதேசிப் பெண்ணை மணந்து கொண்டு வாழ்பவர்கள். எங்கள் சுகதுக்கங்கள் இதயத்தில் நிரம்பி வழிந்து துயரமாகவும்- ஆனந்தமாகவும் கழிந்து போகிறவை. இந்த நாட்டுக்கு வந்து கடை போட்டு மிளகாய்த் தூள் விற்றவனும் -பெற்றோல் செற் நடத்தியவனும்- உண்டியல் செய்தவனும் உயர்ந்து விட்டான். பேனை பிடித்தவன் உயர்ந்ததாக நான் அறியவில்லை. உங்கள் இதயம் பேசுகிறதை வாசித்து விட்டுப் பெரு மூச்சு விட்டேன். தபால் முத்திரைகூட வேண்ட முடியாத நிலையில் நான் எழுதிய சிலகட்டுரைகளைப் பத்திரிகைக்கு அனுப்ப முடியாத காலத்தில்




தாயகத்தில் வாழ்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.
காலம் மாற வேண்டும். தமிழ் எழுத்துக்களைப் போற்றி வளர்க்க ஒரு வசந்தம் வராதா என்று ஏங்கித் தவிக்கிறேன்.
இத்தோடு அன்புத் துளியாக 25 பவுண்களை அனுப்பியுள்ளேன். இதை அடியேனின் 25 கோடியாக ஏற்க வேண்டும்.

-கவிஞர் இளவாலை அமுது
(எம். அடைக்கலமுத்து)
87, Hazelmere Walk,
Northolt,
Middx UB5 6UR

## கனம் இல்லையே

அழகான- தரமான புத்தகம்தான். ஆனால் கனம்தான் குறைவாக இருக்கிதே- அஅஅஅ யின் பங்குதாரர் என்பதால் 'தமிழ் ஒலி' வானொலி- 'தமிழ் ஒளி' தொலைக் காட்சிக்கே நீங்கள் வக்காலத்து வாங்கலாமா? 'ஈழகேசரி' சுதந்திரமாக வெளிவர வேண்டும் என விரும்புகிறேன்.

-சண்
Edgware

## சுபவீயின் கட்டுரை ஆழமான சிந்தனை

சமீபத்தில் லண்டனில் நடந்த மாவீரர் தின விழாவில் பேசிய சுபவீரபாண்டியன் அவர்களை என்னால் மறக்க முடியாது. அவரது பேச்சில் உண்மை இருந்தது. ஈழத் தமிழர்களை நேசிக்கின்ற உணர்வு இருந்தது. அவர் உங்கள் இதழில் எழுதுகின்ற 'தம்பி பிரபாகரனும்- தந்தை பெரியாரும்' என்ற தொடர் ஆழமான சிந்தனை.

ஏ.கே. ஸ்கந்ததாசன்
29,Gilby Road, London SW17

## மின்னலென ஒரு பரவசம்

'ஈழகேசரி' நெஞ்சைத் தொட்டது. மின்னலென அடித்த ஒரு பரவசம் அதன் அட்டை அமைப்பைப் பார்த்ததும் தோன்றிற்று. சில கால இடைவெளியின் பின்னர் வருகிற முதல் இதழ் இப்படியென்றால் - இனி வரும் இதழ்கள் இதைவிடச் சிறப்பாக இருக்குமென்று எதிர்பார்க்கிறேன். இந்தச் சஞ்சிகைக்குப் பல சிறப்புகள் இருந்தாலும் -உங்களைப் பத்திரிகைகள் ஊடாகவும்- தனிப்பட்ட முறையிலும் தெரிந்தவன் என்பதால்- ஒரு நல்ல மனிதரால் நடாத்தப்படும் சஞ்சிகை 'ஈழகேசரி' என்பது மேலதிக சிறப்பாகும்.

-கல்லாறு சதீஸ்
A.Satheesh,
Schoenmatt Str- 08,
6034 Inwil
Switzerland

## ரசித்து ரசித்து மகிழ்ந்தேன்

பார்த்தேன். படித்தேன். அருமையான படைப்புக்களை ரசித்து ரசித்து மகிழ்ந்தேன். உங்கள் பணி தொடர என் மனமார்ந்த வாழ்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அரிவழகன் சத்தியசீலி
9,Rue Robert Foulon,
95360 Montmagny
France

## கோயில் கட்டுரை குழப்பும் தகவல்

கடந்த 'ஈழகேசரி' இதழில் 'குழப்பும்' கோயில்கள்-குழம்பும் மக்கள்'' கட்டுரையில் முருகன் கோயில் வளர்ச்சியில் டாக்டர் ஆறுமுகம்- திரு இமானுவேல் ஆகியோர் குறிப்பிடத்தக்க அளவில் சேவை செய்ததாக குறிப்பிட்டிருப்பது 'குழப்பும்' தகவல்களாக உள்ளன. அவர்கள் வளர்ச்சிக்கு எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. கட்டுரையாளர் குறித்த நபர்களின் சேவையை ஆதாரங்களுடன் வெளியிட்டால் நல்லது. தவறுதலாக எழுதப்பட்டிருப்பின் அக் கருத்தினைத் திருத்திக் கொள்வது நல்லது.

-க. கணபதி
லூயிஷியம்

# ஒழித்திருக்கும் நாட்டுக்குள் கொலையும் குரூரமுமா?



சொரசொரக்கும் உன்முரட்டுக் கரங்கள்
தொட்டபோது, நாற்ற மடிக்கும்
உடலுக்குக் கூச்சம் எடுக்கலையா?
மனித குலத்தின் ஆதிப்பரம்பரையாம்
உண்மை உண்மை
அதனால்தான் ஒன்றை ஒன்று
குதறி உண்ணும் குரங்கானாய்.

வசந்த மலர்ச்சோலையிலே
பூவாய் மலர்வதற்கு
காத்திருந்த மொட்டு அது.
துள்ளித் திரிந்த ஒரு
சின்னஞ் சிறு கன்று.

தத்தித் தாவி, தானறிந்த உலகத்தை
மெத்தப் பெரிதாய் எண்ணி, அதில்
இன்பத்தை... இன்பத்தை மட்டும்
தெரிந்து கொள்ளும் முயல் குட்டி.

பற்றைக்குள் புதருக்குள், பாலத்தின்
மறைப்புக்குள், மலசல கூடத்துள்
கோயிலுக்குள் ஆலயத்துள்
எங்கும் எக்கணமும் எதிரிகைப் பிடிக்குள்ளே
நசிந்து சருகாகும் நம்மினம்
சந்ததிகள்.. போலெதுவும்
இங்கெமக்கு நேர்ந்திடாது,
என்றவொரு நிம்மதியில்
"எத்தனை எல்லாமோ இழந்த போதும்
எங்கள் உயிர்க்கொரு உறுதி உண்டு"
இப்படித்தான் நேற்றுவரை
எண்ணி இருந்துவிட்டோம்.
இன்று, எதையும் நம்பமுடியவில்லை
எங்களது பந்தங்களில் இனி,
அண்ணன் இல்லை, தங்கை பாசம் இல்லை
அருவருக்கும் — உடம்பின்மேல் வெறி தீர்க்கம்
ஆசை மட்டுந்தானா?
அறிவியல் வளர்ந்த நாட்டில்
மனித நாகரீகம் அற்றுப் போச்சா?

முட்டையிலிருந்து குஞ்சு
குஞ்சு மீண்டும் கோழி
பின்னர் அது முட்டை என்பது போல்

காலச் சக்கரத்தில்
நாகரீகம் பெற்ற குரங்கு
மனிதன் என்றால்
நாகரீகம் பெற்ற மனிதன்...! குரங்குதானா?
புரியவில்லை.

சொந்தச் சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி — கிளியே
செம்மை மறந்தாரடி!

தீர்க்கதரிசியைப் பாடவைத்தவர் யார்?
ஒன்றாய் பக்கத்தில் உறங்கியவனை
ஒருசாண் கயிறு எடுத்து இறுக்கிக் கொல்லும்
உண்ட வீட்டுக்குள் ரண்டகம் செய்யும்
ஒட்டுண்ணிகளா?
நட்புக்குள், உறவுக்குள் நயவஞ்சகம்
கட்டி அழிப்பவரோ அந்தத்
தீர்க்க தரிசியைப் பாட வைத்தார்
ஓடிவந்து, ஒளித்திருக்கும் நாட்டுக்குள்
கொலையும் குரூரமுமா?
வக்கிரக் காரனே சொல்?

நீ பார்க்க விரும்புவது 'பணம் மட்டும்'
என்றால்,
பிணம் தின்ன வரும் கழுகா நீ?
அந்த மிருதுவான மலர்மீது

ஹேமராஜ்

# தமிழ் ஒளி

உலகச் சந்தையில் விற்பனைக்கு வரும்

**WORLD SPACE RADIO** வில்

உங்கள் அபிமான 24 மணிநேர

## தமிழ் ஒலி

உலகெங்கும் ஒலிக்க விருக்கிறது!

இந்த வானொலியில் ஒலிக்குவிருக்கும்

60 ஒலிபரப்புகளில் ஒரே தமிழ் ஒலிபரப்பு

தமிழ் ஒலியே!

**தமிழ் ஒளி தொலைக் காட்சி நேயர்களுக்கு**

**TRT** யின் மற்றொரு புத்தாண்டுப் பரிசு

## இலவசமாக

## தமிழ் ஒளி – 2

**இலண்டனில் தமிழ் ஒளி இணைப்புக்கு**
**தொடர்புகொள்ளுங்கள்**

**சங்கர்**

(TRT யின் அங்கீகாரம் பெற்றவர்).

**தொலைபேசி: 0181 220 6647**

**அல்லது 0956 166 847**

ஆலோசனைகள் — மேலதிக விபரங்கள்

— துரித இணைப்பு

# செம்மணி புதை குழி மர்மம்: நீதியான தீர்ப்பு கேள்விக்குறி:

தென்னிலங்கைப் பகுதியில் மனிதப் புதைகுழிகளிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியே அவற்றுக்குப் பொறுப்பாகுமெனவும் தெரிவிந்தே ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது.

சந்திரிகாவினால் பெரியளவில் சுட்டிக்காட்டப்பட்ட புதை குழி இலங்கையின் இரத்தினபுரி மாவட்டத்தில் இருக்கும் சூரிய கந்தப் பிரதேசத்தில் காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கே பெருமளவில் இளைஞர்கள் கொல்லப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது புதைக்கப் பட்டிருந்தனர். சூரிய கந்தப் பகுதியில் மட்டுமல்ல தென்னிலங்கையின் பல்வேறு பகுதியிலும் புதை குழிகள் காணப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே ஐக்கிய தேசியக்கட்சியின் அடிப்படை மனித உரிமை மீறல்களைப் பாரியளவில் பிரதிபலித்த தென்னிலங்கையின் மனிதப் புதைகுழிகளைச் சுட்டிக் காட்டியும், அவற்றில் பல வற்றைத் தோண்டிக் கிளறியுமே ஜனாதிபதி சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது. இருந்த போதிலும் சந்திரிகா அரசின் அடிப்படை மனித உரிமை மீறல்களைப் பிரதிபலிப்பதாகவே வடக்கே நடைபெறும் சம்பவங்கள் விளங்குகின்றன.

அவற்றில் முதன்மையானதே யாழ்ப்பாணம் செம்மணிப் புதை குழி விவகாரம் என்பதும் குறிப்பிடத்தக்கது. சூரியக்கதிர் என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கை வடக்கே 1995ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதனையடுத்து யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள் ஊடுருவிய இராணுவத்தினர் பெருமளவு இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்தனர். இவர்களில் 600 பேர் இதுவரை காணாமல் போயுள்ளனர். இக் காணாமல் போனோரைக் கண்டு பிடித்துத் தரும்படி வடக்கிலிருந்தும் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப் பட்டன. ஆனால் இதுவரை எவ்வித பயனும் கிடைக்காதிருக்கின்றது.



இந்நிலையில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் இராணுவத்தின ரது அடாவடித்தனத்தைப் பிரதிபலித்த

## அரசன் எழுதுவது

மாணவி கிருஷாந்தி குமாரசாமி அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகி யோரது கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த எதிரி களில் ஒருவரான இராணுவ கோப்ரல் ராஜபக்ஷ 'யாழ்ப்பாணத்தின் செம்மணிப் பகுதியில் கிருஷாந்தியும் அவரது தயார் சகோதரர் ஆகியோர் மட்டும் புதைக்கப் படவில்லை. ஏராளமான வேறு இளைஞர்களும் புதைக்கப்பட்டுள்ளனர்' எனத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்தே யாழ்ப்பாணம் செம்மணிப் பிரதேசத்தில் புதை குழிகள் தோண்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக விடுக்கப்பட்டிருந்தது. செம்மணி புதை குழிகள் குறித்து கடந்த ஆண்டிலேயே குற்றவாளி ராஜபக்ஷ தெரிவித்திருந்த பொதிலும் அது சம்பந்தமாக அசமந்தப் போக்கையே சந்திரிகா அரசு கொண் டிருந்தது. ஆயினும் வடக்கே இருந்து வந்த அழுத்தத்தை யடுத்தே தற்சமயம் செம்மணி புதைகுழிகளை தோண்டுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருந்த போதிலும் எவ்வளவு தூரம் செம்மணி புதைகுழி விவகாரம் நியாயமான முறையில் கையாளப்படுமென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

காலநிலை மாற்றங்கள் காரணமாகவும் இராணுவத்தினரது ஒளிவு மறைவுகள் காரணமாகவும் செம்மணிப் பகுதியில் காணப்பட்ட புதைகுழிகள் தடயங்கள் அற்ற விதத்தில் இல்லாமல் செய்யப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் இம்மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விசேட மண்ணியல் நிபுணர்கள் இரகசியப் பொலிஸார் ஆகியோர் உட்பட உள்நாட்டு வெளிநாட்டு செய்தியாளர்களை உள்ளடக்கிய குழுவென்று விஜயம் செய்திருந்தது. இக்குழு செம்மணிப் பகுதிக்குச்

**யாழ்ப்பாணக் குடா நாட்டில் இராணுவத்தின ரது அடாவடித்தனத்தைப் பிரதிபலித்த மாணவி கிருஷாந்தி குமாரசாமி அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகி யோரது கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த எதிரி களில் ஒருவரான இராணுவ கோப்ரல் ராஜபக்ஷ 'யாழ்ப் பாணத்தின் செம்மணிப் பகுதியில் கிருஷாந்தியும் அவரது தயார் சகோதரர் ஆகியோர் மட்டும் புதைக்கப்படவில்லை. ஏராளமான வேறு இளைஞர்களும் புதைக்கப்பட்டுள்ளனர்' எனத் தெரிவித்திருந்தார்.**

சென்று அங்கே புதைகுழிகள் இருப்பது குறித்து ஆராய்ச்சியின் முதல் கட்டத்தையும் ஆரம்பித் திருந்தது. யாழ்ப்பாணத்தின் மேலதிக நீதிபதி என்.அருள்சா கரன் செம்மணிப் பகுதியில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு அங்கே புதைகுழிகள் காணப்பட்டனவா என்பது குறித்து இம்மாதம் மார்ச் 26ம் திகதி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவையடுத்தே செம் மணிப் பகுதியில் புதைகுழிகள் குறித்த முதல்கட்ட பூர்வாங்க ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இந்த ஆராய்ச்சியையடுத் தே செம்மணியில் புதை குழிகளைத்

> **செம்மணி விவகாரம் குறித்த ஆராய்ச்சிகளும் சட்ட நடவடிக் கைகளும் கூட காலந் தாழ்ந்தப் பட்டு நடத்தப் படுவதையடுத்து எவ்வளவு தூரம் இவ்வவி காரத்தில் நீதியான தீர்ப்புக் கிடைக்குமென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.**

தோண்டும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத் தைப் பொறுத்தவரை அடிப்படை மனித உரிமைகள் மீறல் விடயத்தில் பெருமளவு அத்துமீறல்கள் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

புதல்வர்களை இழந்த பெற்றோர் கணவன்மாரை இழந்த மனைவி மார் எனப் பல்வேறு வடிவத்திலும் ஏராளமானவர்கள் தமது உறவினர் களைப் பறி கொடுத்துள்ளனர். இவர்கள் தமக்கு நீதி கிடைக்குமா என்றும் தம்மிடமிருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள் மீளவும் உயி ருடன் கிடைப்பார்களா எனவுமே ஏங்குவதைக் காண முடிகின்றது.


1996ஆம் ஆண்டு முதல் யாழ்ப் பாணத்தில் காணாமல் போனோ ரது தொகை 600க்கும் அதிகமான தாகவே இருக்கின்றது.

தாமதாகும் நீதி ஒரு அநீதி என்றே குறிப்பிடப்படு வதுண்டு. இவ்வகை யில் செம்மணி விவகாரம் குறித்த ஆராய்ச்சிகளும் சட்ட நடவடிக்கை களும் கூட காலந் தாழ்ந்தப்பட்டு நடத்தப் படுவதையடுத்து எவ்வளவு தூரம் இவ்விவகாரத்தில் நீதியான தீர்ப்புக் கிடைக்கு மென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

○

# அடுத்த நூற்றாண்டில் அரபு நாடுகள் இளைய தலைமுறையின் கையில்!

மத்திய தரைக் கடலைச் சேர்ந்த அரபு நாடுகளின் தலைவர்கள் வயோதிபத்தின் பிடிக்குள் சரண டைந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த பெப்ரவரி மாதம் புற்று நோய் காரணமாக மரணத் தைத் தழுவிய ஜோர்டான் மன்னர் ஹூசைனுக்கு வயது 63. அரபு உலகில் கொடிகட்டிப் பறக்கும் சவூதி அரேபிய மன்னர் பாஃஹுட்டுக்கு வயது 75. இரத்த அமுக்க நோயினா லும், மாரடைப்பினாலும் பீடிக்கப் பட்ட சவூதி அரேபிய மன்னர் அரசாட்சி செய்யும் நிலைமையில் இல்லை; அவருக்கு அடுத்ததாகப் பதவிக்கு உரிமையான மன்னர் பஃஹுட்டின் சகோ தரர் அப்துல்லாவுக்கோ வயது 74. இவர்களுக்குப் பிறகு சவூதி அரேபியாவை ஆட்சி செய்வதற்கு உரிமை யானவர் யார் என்பது இன்னமும் முடிவு செய்யப் படாத விஷயம்.



சிரிய நாட்டின் மன்னர் அஸாட் டின் உடல் நலமும் நன்றாக இல் லை. அவருக்கு 68 வயது. நீரழிவு, மாரடைப்பு நோய்களி னால் பாதிக்கப்படும் இவர், தனது ஒரே மகனும், கண் வைத்தியருமான பஷாரை அடுத்த மன்ன ராக ஆக்க முயற்சி செய் கிறார்.



மத்திய தரைக்கடல் நாடுகளில் பிரபலமான மற்றொரு தலைவர் பாலஸ்தீன தலைவர் யஸார் அரபாத் ஆவார். இவருக்கு இப்போது வயது 69. மூளை நோய் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவருக்கு அடுத்ததாக பாலஸ்தீன மக்களின் தலைமை எடுத் துச் செல்வதற்கு எவரும் இன்னமும் பெயர் குறிப்பிடப்பட வில்லை.




அரபு நாடுகளில் இளைமையான தலைவர்கள் என்று கூறப்படுபவர் கள் ஈராக் தலைவர் சதாம் ஹூசை னும் ஆவர். கடாபிக்க வயது 56 ஆனால் அவருடைய வாழ்க்கை சடுதியாக முடிவடையக் கூடும். சதாம் ஹூசைனுக்கு வயது 61. கடாபி தனது மகனை ஆட்சிக்கரிய வாரிசாக ஆக்கத் திட்டமிட் டிருக்கிறார். சதாம் ஹூசை னுக்குப் பிறகு ஈராக்கை யார் ஆளுவார்கள் என்பது முடிவில்லாத நிலைமை. ஈராக்கின் அரசியல் இரத்த களரியாக மாறி, மத்திய தரைக் கடல் நாடுகளின் ஸ்திர நிலையைப் பாதிக்கும் அளவு க்கு மோசமடையலாம். (ஈராக் யுத்தத்தின் போது அமெரிக்கா சதாம் ஹூசைனை முடித்துக் கட்டாதற்கு இந்தப் பயமே காரணமாகும்.


இன்னும் பத்தோ, இருபது வருடங்களில் அரபு நாடு களின் தலைமை புதிய, இளைய தலைமுறையின ரின் கைக்கு மாறிவிடும். முடியாட்சி இந்த நாடுகளில் மலருவதற்கு வெகு நீண்ட காலம் எடுக்கும். அதே சமயத்தில் உலகத் தின் பெரும் பகுதியான எண்ணெய் வளத்தைக் கட்டியாளும் வல்லமை, ஜோர்டானின் புதிய மன்னரான 37 வயதான அப்துல்லா போன்ற இளம் மன்னர் களின் கைகளுக்குள் வந்து விடும்.

இந்த இளம் அரபு நாட்டு மன்னர்கள் தமது புதிய பலத்தை எப்படிக் கையாளுவார் கள் என்பது ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு பெரும் தலையிடி ஏற்படுத்தும் பிரச்னையாக மாறியிருக்கிறது.

**தான ஈனா**

இருபது வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் நான் கொழும்புப் பத்திரிகைக் காரியாலயம் ஒன்றில் பணியாற்றிய போது கம்பியூட்டர் இலங்கையில் கால் வைக்காத காலம். "டைப் ரைட்டர்கள்" கூடப் பல இலங்கையரின் வருமானத்துக் குள் கட்டுப்படியாகாத காலம். பாடசாலை மாணவர்கள் 'கல்கு லேட்டர்கள்' எனப்படும் கணனி களைக் காணாத காலம்.

# புதிய நூற்றாண்டுச் சிந்தனைகள் :
# "மனம் வளர வேண்டும்!"



கடந்த வருடம் இலங்கைக்குப் போன பொழுது காலம் எவ்வளவு மாறி விட்டது என்பதை கண்டு அதிசயித்தேன்.

கம்பியூட்டர்கள், 'இன்ரர்நெட்' உட்பட விஞ்ஞானத்தின் அதிநவீன சாதனைகள் கொழும்பு, யாழ்ப் பாணம் மட்டுமல் லாது வன்னிக் காட்டுக்குள் கூட நுளைந்து இயங்கு கின்றன.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் ஒரு சிறுவனாக இருந்தபோது வாய்ப் பாட்டு மட்டையைக் கையில் பிடித்துக் கொண்டு அடி வளவில் காலை வேளைகளில், நடந்து கொண்டு வாய்ப்பாட்டை மனப்பாடம் செய்தது இப்போதும் ஞாபகத்தில் நிற்கிறது. பாடசாலை யில் 'வாத்தியார்' வாய்ப்பாட்டை மனத்தில் பதித்து ஒப்புவிப்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார்.

இன்றைய ஆசிரியர்கள் அந்தப் பழக்கத் தைக் கைவிட்டு விட்டார் கள். கல்விப் போதனா நெறிமுறை கள் மாறிவிட்டன.

என்னுடைய பன்னிரண்டு வயது மகள் வாய்ப்பாட்டு மட்டையைத் தொட்ட தை நான் கண்டதில்லை. 'டைப் ரைட்டர்' என்றால் என்ன என்று கேட்கும் நிலைமை. முத்தி ரை ஒட்டித் தபால் போடுவதில் ஆர்வமில்லை. 'ஈ—மெயில்'தான் விரல் நுனியில் இருக்கிறதே!

"வாய்ப்பாடு நெடும் பெருக்கல், கல்கு லேட்டர் இல்லாத கணிப்பீடு கள் உனது சிந்தனையையும், "மைண்டை"யும் விரி வடையச் செய்யும் என்று நான் அடிக்கடி என் மகளுக்கு ஆலோசனை கூறுவ துண்டு.

"எங்களுடைய காலத்தில் நாங்கள் 'மைண்டை' பயன்படுத்தும் தேவை இருக்காது" என்று என் மகள் பதிலுக்கு சொல்வாள்.

அவளுடைய தமாஷ் சில சமயம் எனக்குத் திகிலூட்டும். பெரும்பா லான சமயங்களில், நான் "பழமை விரும்பி"யாக இருக்கிறேனோ என்றும் யோசிக் கச் செய்யும்.

உலகடங்கிலும் பரவி வசிக்கும் இலங்கையர், இந்தியர், ஜப்பானியர் அனைவருக்கும் இத்தகைய சங்கட மான யோசனைகள் ஏற்படுவ துண்டு. என்னு டைய ஜப்பானிய நண்பர் ஒருவர் அடிக்கடி தன்னு டைய 10 வயதுப் பையனின் 'கணித விருப்பமின்மை' பற்றிக் குறைப்பட் டுக் கொள்ளுவார்.

ஆனால் என் நண்பரின் 10 வயதுப் பையனின் கம்பியூட்டைரப் பாவிப் பதில் ஒரு விண்ணன். அடுத்த நூற்றாண்டில் வெற்றியடைவதற்கு வேண்டிய திறமை பையனிடம் இருக்கிறது. தகப்பனிடம் இல்லை. பையனுடைய சிந்தனை, தகப்ப னின் சிந்தனையை விட வேறு பட்டது. பையன் பிறந்தது 1980ம் ஆண்டுகளில். தகப்பன் பிறந்தது 1950ம் ஆண்டுகளில். சந்ததி வித்தி யாசம் இங்கே இருக்கிறது. தகப்ப னுக்கு அதை ஏற்றுக் கொள்ளக் கஷ்டமாக இருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து
த. இந்திரலிங்கம்

இந்தப் பிரச்னை ஆசிய நாடு களைப் பிறப்பிடமாகக் கொண்ட பெற்றோர் களுக்குச் சகஜம். மேற்கு நாட்டுப் பெற்றோர்கள் மாற்றங் களை எம்மவர்களை விட இலகு வாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

மாற்றங்களை ஏற்றுக் கொள்வதில் பழைய தமிழ் தலை முறையினர் ஏன் இவ்வளவு உடும்புப் பிடியாக நிற்கிறார்கள் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தேன். பழைமை யைக் கட்டி அழுவதில் எங்களுக் குக் காலாகாலமாக ஒரு பிரியம் இருந்து வந்துள்ளது. இது இலங்கை யருக்கு மட்டுமல்ல, இந்தியருக் கும் பொருத்தமானது. தமிழருக்கு மட்டு மல்ல, சிங்களவர், இந்திய தேசத் தின் பல மொழி பேசும் மக்களுக் கும் இது ஒரு குறைபாடு.

இலங்கையிலும், இந்தியாவிலும் சாதி வேறுபாடுகள் இன்னும் கட்டி யங் கட்டிப் பறக்கின்றன. சீதனம் வழங்குதல் கடல் கடந்த நாடுகளி லும் கொடிகட்டிப் பறக்கின்றது.

ஓர் இனத்தின் கலாசாரத்தின் தனித்து வமான பண்பாடு களைப் பேணிப் பாதுகாப்பது அவசியம். ஆனால் ஓர் இனத் தின் அனாவசி யமான குணாதிசயங் களைப் பேண விழைவது காலத்தை விரயப் படுத்தும் பழக்கம்.

யூத இனம் இன்று உலகில் கொடி கட்டிப் பறப்பதற்குக் காரணம், அந்த இனம் தனது கலாசாரத் துக்குச் சிறப்பியல் பான தன்மை களைப் பேணும் அதே சமயத்தில் உலக அரங்கில் தேவையான மாறு தல்களைத் தழுவிக் கொண்டமை யே ஆகும்.

மாற்றங்களை ஏற்றுக் கொள்வது பழைய் சந்ததியினருக்கு இலகு வானதல்ல. பாரதியார் சொன்னது போல, தெளிந்த எண்ணம் வேண் டும். தெளிந்த எண்ணம் வளருவ தற்கு மனம் விரிவடைய வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளில் நமது கலாசாரம் நிலைப்பதற்கு ஒரே வழி உலகளாவிய பரிணாமத்தில் நாமும் பங்கெடுப்பது தான். ஆறுமுக நாவலரின் சிந்தனைகளை 3000 ஆண்டுகளிலும் அப்படியே கடைப் பிடிக்க முயல்வது பேதமை. ஆங்கி லத்தில் சொல்வது போல Every thing has a season. அடுத்த நூற்றா ண்டு நமது சிந்தனைகளை விரிவு படுத்த ஒரு சந்தர்ப்பம்.

♡

## இங்கிலாந்து தேசத்தில் ஆசிய நாட்டவர்களின் மிகப் பெரிய சொலிசிற்றர் நிறுவனமாக லண்டனில் - ரூட்டிங்கில் திகழும்

## திரு ராஜா தவராஜாவின்

# ராஜா அன் கோ



குற்றவியல் வழக்குகளில் நிபுணத்துவமும்
அதிகப்படியான வழக்குகளில் வெற்றியும்
அகதிகள் வழக்குகளில் கூடியளவு வெற்றி
பெற்ற நிபுணர்கள் கொண்ட சட்ட நிறுவனம்

# RAJA & CO

**SOLICITORS**

**Administrators of Oaths**

## THE LARGEST ASIAN LAW FIRM IN THE UK

WE HAVE EXPERTS IN EVERY FIELD OF LAW
WHO SPEAK ALL ASIAN LANGUAGES.
IMMIGRATION - WE HAVE
A VERY HIGH RATE OF SUCCESS.
CRIME- WE HAVE EXPERTS
WITH WIDE EXPERIENCE IN CRIMINAL LAW.
MATRIMONIAL - INJUNCTIONS, CHILD CARE ETC.
CIVIL LITIGATION , LAND LORD AND TENTANT.
WELFARE, CONVEYANCING.

# RAJA & CO

**SOLICITORS**

295, BALHAM HIGH ROAD, LONDON SW17 7BA.
(Near Tooting Bec Tube Station)

**TEL: 0181 682 2585 FAX: 0181 682 2575**

# லண்டனில் தம்பரும், கிட்டிணரும்!

**1970**ஆம் 80ஆம் ஆண்டுகளில் லண்டனுக்கு வந்த தமிழர் கள் பெருந்தொகையானோர் இலங்கை அரசின் போக்கினை வெறுத்து நாடுவிட்டு வெளிநாடுகளை நாடிய தமிழர்கள் இப்போது மத்திய வயதை எட்டியும், தாண்டியும் நிற்கி றார்கள்.

## அட்டையில்

இந்தத் தமிழ்ச் சந்ததியினர் சவாரித் தம்பர், (ஈழத்தின் கார்ட்டூன் மேதை சுந்தரின் அற்புதப் படைப்பு) கிட்டி ணர், மைனர் மச்சான் ஆகியவரு டன் பழகியவர்கள். கல்வி, ஆனந்த விகடன், கண்ணன், கலைமகள், மல்லிகை ஆகிய சஞ்சிகைகளை ரசித்துப் படித்தவர்கள். தவில் கச்சேரி, நாதஸ்வரக் கச்சேரி போன்ற பாரம்பரிய தமிழ் நிகழ்ச்சி களைக் கண்டு மகிழ்ந்தவர்கள். அடுத்த நூற்றாண்டில், இந்தச் சந்ததியினர் (இப்பத்திரிகையின் ஆசிரியரும், இதை எழுதுபவரும் அட்டைப்பட ஓவியரும் உட்பட) இந்த உலகிலிருந்து மறைந்து விடு வார்கள்.




புதிய தமிழ்ச் சந்ததி சவாரித்தம்ப ரின் நகைச்சுவை நையாண்டித் தனத்தை அறிய மாட்டார்கள். காலை வேளையில் ரேடியோவில் மிதக்கும் நாதஸ்வர ஓசையையும் கேட்க மாட்டார்கள். மாட்டு வண்டிச் சவாரியை வீடியோ வில் பார்ப்பார்களா என்பதும் சந்தே கம்.

இந்த இதழ் அட்டைப் படக் கார்ட்டூனை வரைந்த 'மீனன்' பழைய சந்ததியைச் சேர்ந்தவர். புதிய தமிழ்ச் சந்ததியினர், தமிழரின் பாரம்பரிய கலையம்சங்களைச் சுவைக்க வேண்டும் என்று எண்ணு பவர். ஒரு மாலைவேளை லண்டன் ரயில் நிலையத்தில் அவர் தனிமை யில் நின்றபோது பழைய நினைவு களில் மூழ்கிப் போனார். நினைவு க்கு மீண்டும் வந்தபோது, அவருக்கு அருகே பிளாட்பாரத்தில் சவாரித் தம்பரையும், கிட்டிணரையும் அவர் களைப் பார்த்து அதிசயிக்கும் லண்டன் பெண்மணியையும் கண் டார். அவர்களையே நீங்களும் இங்கே காண்கிறீர்கள். □


AIR CONDITIONING SPECIALISTS

**K.S BUILDING SERVICES ENGINEERING LTD**

* AIR CONDITIONING SYSTEMS
* VENTILATION
* ELECTRICAL INSTALLATIONS
* AIR CONDITIONING PORTABLE UNITS FOR HIRE

FULLY QUALIFIED ENGINEERS
FOR A PROFESSIONAL SERVICE CALL

**0181 200 8962**

MOBILE: 0956 508 176

**25,POOLSFORD ROAD, COLINDALE, LONDON NW9 6HP**

ஈழகேசரி ராஜகோபாலின் பணியை இதயத்தால் வாழ்த்துகிறோம்

# ALL DRINKS

## FULL OFF LICENCE

**Specialists in World's Leading Brands of**

WINES
BEERS
CIDERS
SPIRITS
(INCLUDING SRI LANKAN DRINKS)

**The one and only reputable Sri Lankan**
**FULL OFF LICENCE**
**in New Malden at cheaper than supermarket prices**

82 Burlington Road
New Malden,
Surrey KT3 4NU
Tel: 0181 949 6734

254 Grand Drive
Raynes Park,
London SW20 9NE
Tel: 0181 542 3332

Visit our Web site: http:/www.yell.co.uk/sites/all-drinks

# மனம் விட்டு...

எஸ். சிவநாயகம் (ஆசிரியர் Hot Spring)

**கொ**ழும்பில் நான்காவது மாடி என்றால் அப்போது உடல் நடுநடுங்கத்தான் செய்யும்.
சித்திரவதைக்குப் பேர் போன இடம். அங்கு போன பலர் திரும்பி வந்தது கிடையாது என்று சொல்வார்கள்.
மாரடைப்பு வந்து இறந்தவர்களும் உண்டு.
ஆம்-
புலன் ஆய்வுத் துறை என்ற சிஐடி பிரிவின் 'உண்மைகளை' அறிவதற்காக அரசால் நடத்தப்பட்ட கொலை 'வெறி' பிடித்த நான்காம் மாடியில் அமைந்த கட்டடத்தைப் பற்றி வாசகர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.
1983ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ம் திகதி.
அந்தத் திகதியை என்னால் என்றுமே மறக்க முடியுமா?
எனது வாழ்க்கைப் பாதையைத் திசை திருப்பிய நாள்.
காவல்துறை வண்டி ஒன்று வீட்டு வாசலில் வந்து நின்றது.
அவர்கள் எனக்குப் பரிசுப் பொட்டலமா கொண்டு வரப் போகிறார்கள்?
அந்தப் பிரசித்திபெற்ற நான்காம் மாடிக் கட்டடத்துக்குத் 'தவறாமல் வரும்படி'யாகப் பணிப்புரையைக் கொண்டு வந்திருந்தார்கள்.


**மூ**ன்று நாள் அவகாசம்.
நான் அங்கு போய்ச் சேரவேண்டும்.
சரி-
இப்போது என்ன செய்வது?
போனால் என்ன நடக்கும்?
போகாவிட்டால் என்ன நடக்கும்?
தலைமறைவாக இருக்க முடியுமா?
எவ்வளவு காலத்துக்கு அப்படி இருக்க முடியும்?
-பலவிதமான கேள்விக் கணைகள் நெஞ்சில் முட்டி மோதின.
விடை தேடித் தவித்தேன்

**அ**ந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் D.I.G, S.P., போன்ற மேல் மட்டத்தில் இருந்த காவல் துறை அதிகாரிகள் தமிழர்கள்தான்.
நான் Saturday Review நடத்திய காலத்தில் இவர்களைப் பற்றிய ஒரு விடயம் உணர்ந்திருந்தேன்.
இவர்களுக்குத் தங்களுடைய 'உத்தியோகங்களைக்' காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தங்கள் இருந்த போதிலும்- நான் நடத்திய பத்திரிகையிலும்- என்னிலும் அவர்களுக்கு மறைமுகமான ஒரு மதிப்பு இருந்தது என்பதுதான் அது. இங்கு நான் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை.
இதற்கு எடுத்துக் காட்டாக-
1983ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி- Saturday Review பத்திரிகையை அரசாங்கம் தடை செய்தது.
அந்த நேரத்தில் நடந்த ஒரு சம்பவம்.
அண்மையில் மறைந்த டாக்டர் எஸ்.ஏ. தர்மலிங்கம் ஐயா அவர்களையும்- 'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன் அவர்களையும் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி இருந்தார்கள்.
அன்று மதியம் அளவில் டாக்டர்

**2**

தர்மலிங்கம் அவர்கள் எனக்கு அவசர அவசரமாக ஒரு இரகசியத் தகவலை அனுப்பியிருந்தார்கள்.
அதாவது-
அன்று மாலை பொலிஸார் Saturday Review பத்திரிகை அலுவலகத்தைச் சோதனை செய்ய வருவதாகவும்- நான் கைது செய்யப்படலாம் என்பதும்தான் அந்தத் தகவல்.
உடனடியாகவே நாங்கள் சில முக்கிய ஆவணங்களை அப்புறப்படுத்தி விட்டு- எல்லோரும் தத்தமது வீடுகளுக்குச் சென்று விட்டோம்.
அன்று மாலை-
Saturday Review பத்திரிகை அலுவலகம் சீல் வைக்கப்பட்டது.
டாக்டர் தர்மலிங்கம் ஐயா அவர்களுக்கு எப்படித் தகவல் கிடைத்தது?
பொலிஸ் காவலில் இருந்த நேரத்தில் எப்படி எனக்கு அந்தத் தகவலை அனுப்பக் கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்தது?
மர்மம்தான்.
சில நாட்கள் சென்ற பின்னர்- Saturday Review பத்திரிகை அலுவலக நிர்வாகப் பொறுப்பாளர் திரு. விசுவலிங்கம் என் வீட்டுக்கு வந்திருந்தார்.
அவர் பல காலம் கொழும்பில் காவல் துறையில் உத்தியோகம் பார்த்து இளைப்பாறியவர்.
D.I.G அவர்கள் என்னை நேரில் சந்தித்து- அரசாங்கம் பத்திரிகையைத் தடை செய்த உத்தரவை என் கையில் கொடுக்க விரும்புவதாக விசுவலிங்கம் அவர்கள் என்னிடம் சொன்னார்.
எனக்கு எப்போதும்- பொலிஸ் வாகனத்தையோ- பொலிஸ் சீருடையையோ கண்டால் ஒரே 'அலர்ஜி'.
ஆனால் அந்தச் சந்திப்பு பிரச்னையின்றி ஒரு சுமுகமான சந்திப்பாகவே முடிந்தது.

**எ**னக்குப் பொலிஸில் மறைமுகமான ஒரு 'மதிப்பு' இருக்கும் என்பதை நம்பி நான் நாட்டில் இருக்க முடியுமா?
எமது சமுதாயத்தில் காட்டிக் கொடுப்பவர்கள் என்றும் இருந்து வந்துள்ளனர் என்பது தெரிந்த விடயம்தானே.
எட்டப்பர்கள்.. காக்கை வன்னியர்கள்... இப்படி எத்தனை வகையானவர்களைச் சரித்திரம் கண்டு களித்திருக்கிறது.
இவைகள் எல்லாம் பாடங்கள்.
எனவே- மூன்று- நான்கு நெருங்கிய நண்பர்களுடன் ஒன்றாகக் கூடிக் கதைத்து- ஒரு தீர்மானம் எடுத்தோம்.
கொழும்புக்குப் போவதில்லை.
இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதே நல்ல ஆலோசனையாக எனக்குத் தென்பட்டது.
நாம் குறிப்பிடும் காலம்-
1983ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்.
1983 ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு போராட்ட உணர்வு ஏற்பட்ட காலம்.
தமிழ் இயக்கங்கள் மத்தியில் பூசல்களோ- அந்த இயக்கம் -இந்த இயக்கம் என்ற வேறுபாடோ இல்லாத காலம்.
ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து இந்தியாவுக்குப் போய் ஆயுதப் பயிற்சி பெறுவதே ஒரே நோக்கமாக அனைவருக்கும் இருந்து வந்தது.



தென் ஆசிய சுற்றுலாத்துறை மாநாட்டுக்கு பெங்களூர் செல்லுகையில் சென்னை விமான நிலையத்தில் கௌரவம்

நான் இந்தியாவுக்குப் போவதற்கான இரகசியத் திட்டம் ஆரம்பம் ஆகியது.

வடமராட்சியில் இயக்கங்களுடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் வள்ளத்தில் நான் செல்வதற்கான சகல ஒழுங்குகளையும் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அதுவரை என்னைத் தனது வீட்டில் பாதுகாப்பாகத் தங்கலாம் எனச் சொன்னார்.

இதற்கிடையில் நான் கொழும்புக்குப் போகப் போவதாகவே அனைவருக்கும் தெரிவித்தோம்.

வள்ளப் பயணம் பற்றி மனைவி பிள்ளைகளுக்கும்- குறிப்பிட்டஓரிரு நண்பர்களுக்கு மட்டும்தான் தெரியும்.

அந்தக் காலத்தில்-

இரவு நேரத்தில் மூன்று- நான்கு தனியார் பஸ்கள் கொழும்பு செல்வதுண்டு.

அதில் ஒன்றான 'பிள்ளையார் விலாஸ்' எனும் பஸ்ஸில் நான் கொழும்பு செல்வதற்கு இருக்கை முன் பதிவு செய்யப்பட்டது.

என்ன குழப்புகிறேனா?

இந்தியாவுக்குப் போக முடிவு செய்த நான் ஏன் கொழும்பு போகப் பஸ்ஸில் இருக்கை பதிவு செய்தேன்? என்று நீங்கள் கேட்பது எனக்குக் கேட்காமல் இல்லை.

'நான்' நானில்லை.

அப்படியானால்-

என் பெயரில் இன்னொருவர்.

இன்னொருவரா?

நான் நான்காம் மாடிக்குக் கொழும்புக்கு விசாரணைக்குப் போகிறேன் என்பதை 'உறுதி' செய்வதற்காக இந்த 'நாடகம்'.

எனது பெயரில் வேறு ஒருவர் பயணம் செய்வதற்கும் ஏற்பாடாகி இருந்தது.

என்னை வழி அனுப்ப நண்பர்கள்- உறவினர்கள்- அயலவர்கள் வந்திருந்தார்கள்.

'பத்திரிகை ஆசிரியர் என்பதால் விபரீதம் எதுவும் நடக்க மாட்டாது- வயதாகிவிட்டதால் சித்திரவதை செய்ய மாட்டார்கள்' என்று ஆளுக்கு ஆள் ஆறுதல் சொன்னார்கள்.

சிரிப்பதா? அழுவதா?

நான் மனதுக்குள் மௌனமாக ஏற்றுக் கொண்டு விடைபெற்றுக் காரில் புறப்பட்டேன்.

கொழும்பு பஸ்ஸைப் பிடிப்பதற்காக யாழ். நகர் செல்வதாக வழி அனுப்பியவர்கள் யோசித்துக் கொண்டிருக்க- வடமராட்சியை நோக்கிய பாதையில் என்னைச் சுமந்து கொண்ட- கார் போய்க் கொண்டிருந்தது.

வடமராட்சியில் துன்னாலை சிறிய கிராமம் ஒன்று.

இந்தியாவுக்கு நான் புறப்படும் வரை துன்னாலையில் எனது நண்பர் வீட்டில் தங்கி இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்தக் காலத்தில் இரண்டு இளைஞர் இயக்கங்கள்தான் இந்தியாவுக்கு வள்ளப் போக்குவரத்து வைத்திருந்தது.

ஒன்று- விடுதலைப் புலிகள்.

மற்றது- ரெலோ.

இந்திய அரசின் ஆயுதப் பயிற்சிக்குக் கூடுதலாகச் சென்றது 'ரெலோ' இயக்க உறுப்பினர்தான்.

நான் துன்னாலையில் இருந்தபோது என்னை ஒரு இளைஞர் வந்து சந்தித்தார்.

அவர் புலிகளின் முக்கிய உறுப்பினர் என்பதைப் பின்னர்தான் அறிந்து கொண்டேன்.

'எவருடைய வள்ளம் முதலில் போகிறதோ- அதில் நீங்கள் போகலாம்' என்றார்.

மூன்று நாட்கள் தங்கியிருந்தேன்.

மோட்டார் சைக்கிளில் வேறு ஒருவர் வந்தார்.

''நாளை எங்கள் வள்ளம் போகிறது ஆகவே உங்களைக் கூட்டிக் கொண்டு போய் வல்வெட்டித்துறையில் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்க வேண்டும். இன்றே உங்களைக் கூட்டிச் செல்ல வருவேன். ஆயத்தமாக இருங்கள்'' என்றார்.

''சரி'' என்றேன்.

நினைத்துப் பார்க்கிறேன்.

இந்தியாவுக்குப் போவது இது மூன்றாவது பயணம்.

முதல் தடவை-

நான் Daily Mirror நாளிதழில் துணை ஆசிரியராகக் கடமையாற்றியபோது- இந்திய 'ஏயர் லயின்ஸ்'ஸில் கொழும்பு- திருவனந்தபுரம் சேவை முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டபோது பயணம் செய்தேன்.

அதன் திறப்பு விழாவுக்கு பத்திரிகையாளர் என்ற முறையில் கௌரவமாக அழைக்கப்பட்டு- மனைவியுடன் சென்றேன்.

திருவனந்தபுரம்- சென்னை என்று பறந்து சென்று மனைவியுடன் தமிழ்நாட்டில் அவர்கள் விருந்தினராக சுற்றுலாச் செய்த முதல் பயணம் நெஞ்சில் நிறைந்துள்ளது.

இரண்டாவது தடவை-
1979ம் ஆண்டு கொழும்பில் இலங்கை சுற்றுலாத்துறை சபையில் (Ceylon Tourist Board) ஆசிரியராகக் கடமை யாற்றிக் கொண்டிருந்தபோது- தென் ஆசியா சுற்றுலாத்துறை சம்பந்தமாக பெங்களூரில் (Bangalore) உள்ள அசோக் ஹோட்டலில் நடந்த மகாநாட்டுக்கு கௌரவப் பிரஜையாகக் கலந்து கொள்கிற சந்தர்ப்பம் கிடைத்தது.

சென்னை விமான நிலையத்துக்கு முதலில் சென்றடைந்த என் போன்ற பல் நாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டோம். அங்கிருந்து மீண்டும் அனைவரும் விமானத்தில் பெங்களூர் அழைத்துச் செல்லப்பட்டோம்.

மூன்றாவது முறை-
இந்தியாவுக்குக் 'கள்ளத் தோணி'யாகப் போகிறேன்.

முதல் இரண்டு முறைகளும் நான் ராஜமரியாதையுடன் சென்று வந்ததையும்- இப்போது எப்படிப் போக இருக்கிறேன் என்பதையும் நினைத்து- நினைத்து எனக்குள்ளேயே சிரிக்கிறேன்.

'பாம்பும் ஏணியும்' விளையாட்டு உங்களுக்கு நினைவிருக்கிறதா?
எப்போதாவது ஒரு முறை விளையாடி இருப்பீர்கள்.

பெரிய உண்மையை அது விளக்குகிறது என்பதை என் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள் சொல்லாமல் சொல்லியது.

அந்தப் 'பாம்பும் ஏணியும்' என்ற தாயக் கட்டு வியைாட்டில்-
சில வேளை ஏணியில் ஏறி உச்சத்துக்குப் போய்விடுவீர்கள். சில சமயம்- பாம்பு விழுங்கி அதளபாதாளத்துக்குள் விழுந்து விடுவீர்கள்.
அப்படித்தான் எனது பிரயாணமும்.


பெங்களூர் அசோக் ஹோட்டலில் நடந்த கலாச்சார நிகழ்ச்சியில்

இருபதாம் திகதி-
நான்காம் மாடிக்கு நான் சென்றிருப்பேன் என்று எண்ணி- கொழும்பிலுள்ள எமது செய்தியாளரரான சிங்கள நண்பர் காமினி நவரத்தினா- 'எனக்கு என்ன நடந்திருக்கிறது?' என்று நான்காம் மாடிப் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு விசாரித்திருக்கிறார்.

என்னை அங்கு வரவில்லை எனச் சொல்லியுள்ளார்கள்.

என்னைத் தடுத்து வைத்துக் கொண்டே அப்படியான பொய் ஒன்றை நான்காம் மாடி கட்டவிழ்த்து விட்டிருக்கிறதென்ற சந்தேகத்தில்- Times of India 'எனக்கு என்ன நடந்தது?' என்ற கேள்வியை செய்தியாக எழுப்பியிருந்தார். அவர் அப்போது அப்பத்திரிகையின் கொழும்பு நிருபராகவும் கடமையாற்றினார்.

மறுநாள்-
Island பத்திரிகை ஒரு பெரிய சந்தேகத்தைக் கிளப்பியிருந்தது.
யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்து- அங்கிருந்து மன்னாருக்குப் போய் - மன்னாரில் இருந்து இந்தியாமவுக்குத் தப்பிச் சென்று விட்டதாகக் கேள்விக்குறியுடன் செய்தி ஒன்றை வெளியிட்டனர்.

இந்தச் செய்திகள் காரணமாக கொழும்பில் உள்ள உறவினர்கள் குழம்பிப் போய் விட்டார்கள்.

இந்தச் செய்திகளின் பின்பு- கொழும்பு தலைமையகம் உடனடியாக யாழ்ப்பாணப் பொலிஸுடன் தொடர்பு கொண்டு- என்னைப் பற்றிய விபரங்களைச் சேகரித்தது.

நான் கொழும்புக்குச் 'சென்ற' 'பிள்ளையார் விலாஸ்' பஸ்ஸும் விசாரணைக்குட்படுத்தப்பட்டது.
5வது ஆசனத்தில் 'நான்' பிரயாணம் செய்தேன் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சமயத்தில் துன்னாலையில் இருந்த எனக்கு இவை ஒன்றுமே தெரியாது.

இரவு 12 மணியிருக்கும்.

வல்வெட்டித்துறையில் வீடொன்றில் பயணத்துக்காகக் காத்திருந்த என்னை இருவர் அழைத்துச் செல்ல வந்திருந்தனர்.
சைக்கிளில் வந்த இரு இளைஞர்களில் ஒருவரது சைக்கிளின் 'பாரில்' ஏறி அமர்கிறேன்.

கடற்கரை.

அந்த இரு இளைஞர்களுடன் நடக்கிறேன்.
டோர்ச் வெளிச்சத்தில் பத்துப் பன்னிரண்டு சாக்கு மூடைகள் இருப்பது போன்ற பிரமை.
''இனி நீங்கள் வரலாம்''
-என்னை நோக்கி ஒலித்த குரல் வந்த அதே வேகத்தில்-சாக்கு மூடைகள் என்று நான் நினைத்தவை எல்லாம் எழுந்து வரிசையாக நடக்க ஆரம்பித்தன.
சாரத்தால் தம்மை மூடிக் கொண்டிருந்த இளைஞர்களுக்குப் பின்னால் நடந்தேன்.
ஒரே ஒரு Bagதான் எனது சொந்தம்.
அதற்குள் இரண்டு ஷேர்ட்டுகள்- இரண்டு ட்ரவுசர்கள்- ஒரு சாரம்.
இதை விட தாசி வித்தாசியின் 'எமர்சென்ஸி 58' இனக் கலவரம் பற்றிய ஆங்கில நூல்- இன்னும் ஓரிரு ஆவணங்கள்.
முழங்கால் வரை தண்ணீருக்குள் நடந்து சென்று-
இளைஞர்களுடன் வள்ளத்துக்குள் ஏறிக் கொள்கிறேன். (இன்னும் வரும்)

பிரிட்டன் வாழ் தமிழர்கள் மத்தியில் இன்சூரன்ஸின் மறுபெயர்
பி.சிறினிவாசன்

# ARM ASSOCIATES

## For All Types of Insurance

PROFESSIONAL ADVICE & HELP

## P.SRINIVASAN


*** LIFE * PENSION * MORTGAGE**
*** HOME * SHOP *MOTOR * GENERAL**

*REGULATED BY PERSONAL INVESTMENT AUTHORITY FOR INVESTMENT BUSINESS ONLY*

32 ABBOTS LANE,
KENLEY, SURREY CR8 5JH



**Tel: 0181 664 8800/ 0181 763 2221**
**Fax: 0181 763 2220**



Internet: http:www.p-srinivasan-arm.co.uk E-mail:srini@p-srinivasan-arm.co.uk


# ஈழத் தமிழ் நாடகம் வயதுக்கு வந்து விட்டது!



யாழ்ப்பாணத்தில் பிரசவித்து, 70களின் மத்தியில் கொழும்பில் வளர்ச்சி கண்டு, இன்று புலம் பெயர்ந்த மேற்கத்தைய தமிழ் உலகில் வயதுக்கு வந்துள்ளது—பரீட்சார்த்த, புரட்சிகர மான தமிழ் நாடக இயக்கம்! கொழும்பு மேடைகளில் வேறும் சில திறமைமிக்க முன்னோடித் தயாரிப்பாளர்கள் இருந்த போதும், நவீன மேடை உத்திகளின் பாரம்பரியத்தை நிலை நாட்டுவதிலும், அதனை கிழக்கிலிருந்து மேற்குக்கும், நாட்டுக்கு நாடு கொண்டு செல்வதிலும் கே.பாலேந்திராவும், தமிழ் அவைக் காற்றுக் கழகமும் பாராட்டுக்குரியவர்கள்.

பாட்டு, ஆட்டம், கவர்ச்சி என்ற சேர்வையில் வெளிவரும் தமிழ் நாட்டுச் சினிமாப் படங்களுக்கு உடனடியான, இன்னும் மோசமாக, அடிமைத் தனமான ரசிகர் கூட்டம் தமிழர்களுக்கிடையே கிடைக்கும் அதே நேரத்தில், பார்வை யாளர்களைத் தேட வேண்டிய பிரச்னைக்கு நாடகத் தயாரிப் பாளர் முகங் கொடுக்க வேண்டியுள்ளது. இப் பிரச்னை, நவீன மேடைக்கான நாடக எழுத்துக்களின் போதாமையினால் இன்னும் சிக்கலடைந் துள்ளது.

கொழும்பில், அறுபது எழுபதின் கடைசிகளில் மும்மொழி களிலும் மும்ரமான நாடக நடவடிக்கை ஏற்பட்டது. இதில் முன்னணியில் நிகழ்ந்தவர்கள் சிலர். தமிழ் நாடக மேடையில் பாலாந்திரா குறிப்பிடத் தக்கவர்.



இந்த நாடகங்களின் வதிவிடங்களாக லயனல் வென்ற் தியேட்டர், லும்பினி ஹோல், சரஸ்வதி மண்டபம் ஆகியன விளங்கின. ஆனாலும் சிங்கள—தமிழ் நாடக வல்லுனர்களுக்கு ஒரு பெரிய தடை இருந்தது. அதுதான், இரு மொழிகளிலும் சுயமான நாடக எழுத்துக்கள் போதியளவு இல்லாமை. இந்த நிலை, இயல்பாகவே அவர்களை மேற்குக்குத் திரும்பச் செய்தது. அப்படிச் செய்யும் போது, அவர்கள் உலகின் சில பிரபல நாடகாசிரியர்களை உள்ளூர் தியேட்டர் வாசிகளுக்கு அறிமுகப்படுத்தியது மட்டுமன்றி, பாராம்பரிய நாடகங்கள் பார்த்தே பழக்கப்பட்டிருந்த உள்ளூர் பார்வையாளர்கள் முன்பின் அறிந்திராத புதிய நாடக உத்திகள், மேடை துணுக்கங் கள் பலவற்றையும் கூடவே அறிமுகப் படுத்தினர். பாரம்பரியக் கட்டுப் பாட்டுக்குட்பட்ட பார்வையாளர்களை அதிர வைக்கும் வசகனங்களும் இடம் பெற்றன. ஆனால் மேற்கத்தைய மதிப்பீடுகளை உள்ளடக்கிய நாடகங்களிலிருந்து அது எதிர்பார்க்கப்பட வேண்டிய தொன்றே.

சமீபத்தில் பாலேந்திரா தனது நாடகங்களின் ஐந்தை 20வது ஆண்டு நிறைவாக லண்டன் மேட்டன் ஹோலில் மேடையேற்றியிருந்தார். அவருடைய வகை நாடகங்களுக்கு அந்த மேடை போதியதாகவே இல்லை என்றாலும், அது அவர் தாண்ட வேண்டிய பல தடைகளில் ஒன்றாகும்.

# 24 மணி நேர TRT தமிழ் தொலைக் காட்சி நிகழ்ச்சி நிரல்

| Time | Monday | Teusday | Wednesday | Thursday |
|---|---|---|---|---|
| 8.00 | தினம்ஒரு திருக்குறள் | தினம்ஒரு திருக்குறள் | தினம்ஒரு திருக்குறள் | தினம்ஒரு திருக்குறள் |
| 8.15 | இந்தநாள் இனிய நாள் | இந்தநாள் இனிய நாள் | இந்தநாள் இனிய நாள் | இந்தநாள் இனிய நாள் |
| 8.30 | சன் ரிவி நிகழ்ச்சிகள் | சன் ரிவி நிகழ்ச்சிகள் | சன் ரிவி நிகழ்ச்சிகள் | சன் ரிவி நிகழ்ச்சிகள் |
| 10.00 | காலைப்பூந்தென்றல் | காலைப்பூந்தென்றல் | காலைப்பூந்தென்றல் | காலைப்பூந்தென்றல் |
| 11.00 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் |
| 12.30 | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் | இன்றைய நேயர் |
| 1.00 | சிந்தனையில் உதித்த முத்துக்கள் | சிந்தனையில் உதித்த முத்துக்கள் | சிந்தனையில் உதித்த முத்துக்கள் | சிந்தனையில் உதித்த முத்துக்கள் |
| 1.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 2.00 | கவிதை பாடுவோம் | கலை மாலை | புதுவெள்ளம் | ஒன்றோடு ஒன்று |
| 3.00 | தெரியுமா உங்களுக்கு? | தமிழ் படிப்போமா? | புலம்பெயர் பிரசவம் | தெரியுமா உங்களுக்கு? |
| 3.45 | ஜேர்மனிய நேரம் | ஜேர்மனிய நேரம் | ஜேர்மனிய நேரம் | ஜேர்மனிய நேரம் |
| 4.30 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் |
| 5.45 | பிபிசி தமிழோசை | பிபிசி தமிழோசை | பிபிசி தமிழோசை | பிபிசி தமிழோசை |
| 6.15 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் |
| 7.00 | சன் ரிவி நிகழ்ச்சிகள் தொடர்ச்சி | சன் ரிவி நிகழ்ச்சிகள் தொடர்ச்சி | சன் ரிவி நிகழ்ச்சிகள் தொடர்ச்சி | சன் ரிவி நிகழ்ச்சிகள் தொடர்ச்சி |
| 9.00 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 9.30 | திரைவிருந்து | திரைவிருந்து | திரைவிருந்து | திரைவிருந்து |
| 12.00 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி ம-ஓ | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி ம-ஓ | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி ம-ஓ | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி ம-ஓ |
| 2.00 | திரைவிருந்து மறுஒளிபரப்பு | திரைவிருந்து மறுஒளிபரப்பு | திரைவிருந்து மறுஒளிபரப்பு | திரைவிருந்து மறுஒளிபரப்பு |
| 4.00 | சன் ரிவி மறுஒளிபரப்பு | சன் ரிவி மறுஒளிபரப்பு | சன் ரிவி மறுஒளிபரப்பு | சன் ரிவி மறுஒளிபரப்பு |

| Time | Friday |
|---|---|
| 8.00 | தினம்ஒரு திருக்குறள் |
| 8.15 | இந்தநாள் இனிய நாள் |
| 8.30 | சன் ரிவி நிகழ்ச்சிகள் |
| 10.00 | காலைப்பூந்தென்றல் |
| 11.00 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் |
| 12.30 | இன்றைய நேயர் |
| 1.00 | சிந்தனையில் உதித்த முத்துக்கள் |
| 1.30 | செய்திகள் |
| 2.00 | உங்கள் விருப்பம் |
| 3.00 | தெய்வ தரிசனம் |
| 3.45 | ஜேர்மனிய நேரம் |
| 4.30 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் |
| 5.45 | பிபிசி தமிழோசை |
| 6.15 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சிகள் |
| 7.00 | சன் ரிவி நிகழ்ச்சிகள் தொடர்ச்சி |
| 9.00 | செய்திகள் |
| 9.30 | திரைவிருந்து |
| 12.00 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி ம-ஓ |
| 2.00 | திரைவிருந்து மறுஒளிபரப்பு |
| 4.00 | சன் ரிவி மறுஒளிபரப்பு |

| Time | SATURDAY | SUNDAY |
|---|---|---|
| 7.00 | பக்திப் பாடல்கள் | பக்திப் பாடல்கள் |
| 8.00 | தினம்ஒரு திருக்குறள் | தினம்ஒரு திருக்குறள் |
| 8.15 | இந்தநாள் இனிய நாள் | இந்தநாள் இனிய நாள் |
| 8.30 | சன் ரிவி நிகழ்ச்சிகள் | சன் ரிவி நிகழ்ச்சிகள் |
| 10.00 | காலைப்பூந்தென்றல் | காலைப்பூந்தென்றல் |
| 11.00 | கண்டதும் கேட்டதும் | வீட்டுக்கு வீடு |
| 11.30 | மறுபிறவி தொடர் | தேனிசைத் தேர்வு |
| 12.00 | சுவிஸ் நேரம் | லண்டன் கலைக் கதம்பம் |
| 12.30 | இன்றைய நேயர் | இன்றைய நேயர் |
| 1.00 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி |
| 1.30 | செய்திகள் | செய்திகள் |
| 2.00 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி |
| 5.00 | நீங்கள் ரசித்த காட்சிகள் | கோரிசி சப்தஸ்வரங்கள் |
| 5.45 | பிபிசி தமிழோசை | பிபிசி தமிழோசை |
| 6.15 | டாக்டரிடம் கேட்போம் | உங்கள் குரல் |
| 7.00 | சன் ரிவி நிகழ்ச்சிகள் தொடர்ச்சி | சன் ரிவி நிகழ்ச்சிகள் தொடர்ச்சி |
| 9.00 | செய்திகள் | செய்திகள் |
| 9.30 | திரைவிருந்து | திரைவிருந்து |
| 12.00 | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி ம-ஓ | ரி.ஆர்.ரி. சென்னை நிகழ்ச்சி ம-ஓ |
| 2.00 | திரைவிருந்து மறுஒளிபரப்பு | திரைவிருந்து மறுஒளிபரப்பு |
| 4.00 | சன் ரிவி மறுஒளிபரப்பு | சன் ரிவி மறுஒளிபரப்பு |

**24 மணி நேர TRT தமிழ் வானொலி- தொலைக் காட்சி**
**தொடர்பான விபரங்களுக்கு-**
**பிரான்ஸ் தலைமையகம்-**

**Tel: 01 43 11 27 77 அல்லது 01 43 11 27 75 Fax: 01 43 11 27 72**



குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முயலும் ஓர் பெண்ணின் கண்களி னூடாக, இந்த நாடகம் வெளிச் சத்துக்கு கொண்டு வருகிறது. இந்த நாடகம், ஒரு ஈழத் தமிழ் எழுத்தாளி னியான 'குந்தவை' என்பவரின் சிறு கதையை அடிப்ப டையாகக் கொண்டது.

தமிழ் மக்களின் சரித்திரத்தில் துயரம் தோய்ந்த அந்த அத்தி யாயத்தின் நேரடி அனுபவத்தை அறியாத ஓர் பார்வையாளர் கூட்டத்தின் இதய நரம்புகளைத் தொட்டிழுக்கும் வகையில், உள்ளத்தை ஈர்க்கும் அனுபவமாக 'பெயர்வு' பாலேந் திராவின் கை வண்ணத்தில் உருவெடுத் திருந்தது. பாடல், சொல் விளக்கம், ஒலித்தாக் கங்கள், ஓவியங்கள், நிழற் தோற்றங் கள் இவற்றின் சாதுர்யமான சேர்வையே அவரை இதைச் சாதிக்க வைத்தது.

ஒன்றைத் தவிர, மற்ற நான்கு நாடகங்களும் மேற்கத்தைய நாடகங்களின் தழுவல்களாகும். ஐந்தாவது நாடகம், எங்கள் மனங் களுக்கும் உள்ளங்களுக்கும் நெருக்க மானதாக இருந்தது.

அதுதான் 'பெயர்வு' (The Exodus) என்ற நாடகம். குடா நாட்டைக் கைப்பற்றுவதையே ஒரே நோக் காகக் கொண்ட எதிரியின் விமானக் குண்டு வீச்சுகள், ஆட்டி லெரி, ஷெல்லடி இவற்றுக்கிடை யில், அந்த ஒக்டோபர் 1995ன் இருண்ட நாட்களில், யாழ்ப்பாணக் குடா நாட்டை விட்டு, தங்கள் சொந்த வீடு, வாசல்களை விட்டு, 500,000 தமிழ் மக்கள் தப்பியோடிய துயர அனுபவத்தைப் படம் பிடித்துக் காட்டுவது தான் 'பெயர்வு'. அவர்கள் ஒருவர் பின் ஒருவராக மெள்ள நடை நடந்து, கிளாலி ஓடையின் சேற்று நீரையும் துணிவுடன் தாண்டி, நிச்சயமற்ற ஒரு எதிர் காலத்துக்குள் காலடி எடுத்து வைக்கிறார்கள். இந்த அனுபவத்தை, தனது பச்சிளங்

குழந்தைகளினால் நடிக்கப்பெற்ற ஒரு மேற்கத்தைய நாடகத் தின் தழுவல் பாலேந்திராவுக்கு ஒரு தனி வெற்றி யைத் தேடித் தந்தது. எவ்வளவு அழகாக அந்தக் குழந்தை கள் நடித்தார்கள்.

ஆனால் முதலா வதாக மேடை யேற்றப்பட்ட நாடகம் அவ்வள வாகச் சோபிக்க வில்லை.

தமிழ் அவை க்காற்றுக் கழகம் திறமைகள் வாய்ந் தது —கற்பனை வளம் கொண்ட இயக்குனர் தயாரிப்பாளராக பாலேந்திரா, பல திறப்பட்ட திறமைகளைக் கொண் டுள்ள நடிகையான ஆனந்தராணி, இவர்களுக்குப் பக்கபலமாக கிருஷ் ணராஜா, தர்ஷினி கணேசபிள்ளை போன்ற ஓர் நடிகர் கோஷ்டி. ஆனால் இத்தனை வல்லமைகள் இருந்தும், இவர்கள் பார்வையாளர் கூட்டத்தைத் தேடி அலையும் ஒரு நாடகக் குழுவாகவே தோற்றமளித் தனர்!

புகழ் பெற்ற ஆங்கில நாடகாசிரியர் ஒஸ்கார் வைல்ட் தனது நாடக மொன்றின் முதலாவது மேடை யேற்றத்துக்குப் பின் கூறிய பின்வரும் வார்த்தைகள் எதி ரொலிக்கின்றது. "நாடகம் பெரும் வெற்றி ஆனால் பார்வையாளர் சபையோ முழுத் தோல்வி!"

**— எஸ் சிவநாயகம்**

♡



# தமிழர்கள் வேலை பறிப்பு!


மத்திய அரசுப் பணியில் நியமிக்கப்பட்ட பத்தொன்பது தமிழர்களின் நியமன உத்தரவு, அவர்கள் தமிழர்கள் என்பதற்காகவே ரத்து செய்யப்பட்டுள்ளது. இது நடந்தது வெளிநாட்டில் அல்ல... இந்தியாவிலேயே!

தமிழகத்தின் அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தில் மத்திய கணக்காயர் அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக மத்திய அரசின் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பத்தொன்பது தமிழர்கள் பணியேற்க சென்றபோது, அவர்களைப் பொறுப்பேற்க விடாமல் கன்னட ஊழியர்கள் தர்ணாவில் இறங்கினர். 'கர்நாடகா'வில் கன்னடத்தைப் படித்தவர்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழர்களைப் பணியேற்க விடாமல் தடுத்தனர். இதே கோரிக்கையை ஊழியர்களுடன் சேர்ந்து, அரசியல் கட்சிகளும், கர்நாடக அரசும் முன்மொழிய, மத்திய அரசு பத்தொன்பது தமிழர்களின் நியமன உத்தரவையும் ரத்து செய்துவிட்டது.

'இந்தியாவின் குடிமக்கள் எவரும், எங்கும், பணியாற்றலாம்' என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முன் உதாரணமாக கூறப்பட்டாலும், கர்நாடகத்தில் பணி மறுக்கப்பட்ட அந்த பத்தொன்பது தமிழர்களும் தமிழ்நாட்டில் பணியிலமர்த்தப்படுவார்கள்' என்று கர்நாடக மாநில முதல்வர் ஜே.எச். பாட்டீல் கூறியுள்ளார்.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலுமுள்ள தலைமைக் கணக்காயர் அலுவலகங்களின் நிர்வாக மொழியாக ஆங்கிலமும், இந்தியும் மட்டுமே நடைமுறையிலுள்ளது. இந்த நிலையில் கர்நாடக மாநிலத்தின் இந்தச் செயல் பெரும் அதிர்ச்சிக்குரியதாகவுள்ளது.

முன்பு ஒருமுறை தமிழக அரசு சென்னையிலுள்ள தலைமைக் கணக்காயர் அலுவலகத்திற்குத் தமிழில் தகவல்களை அனுப்பியபோது இந்தி அல்லது ஆங்கிலத்தில் அனுப்புங்கள் என்று பதில் வந்தது. அதன்படி இன்றும் தமிழக அரசு ஆங்கிலத்தில்தான் சென்னையிலுள்ள தலைமைக் கணக்காயர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வருகிறது. இந்தியா முழுவதுமே இதுதான் நடைமுறை. உண்மை நிலை இப்படி இருக்க, கர்நாடகாவில் மட்டும் மத்திய அரசு அலுவலகங்களிலும் கன்னடர் மட்டுமே பணிபுரிய வேண்டும் என்ற அறிவிப்பு கர்நாடகம் தனி நாடோ? இந்தியாவின் மாநிலம் அல்லவோ? என்ற கேள்வி களை எழுப்பியுள்ளன.



இது சம்பந்தமாக, மத்திய கணக்காயர் அலுவலகம் குறிப்பிட்ட பத்தொன்பது பேருக்கும் கன்னடம் கற்றுக் கொடுங்கள் என்று கர்நாடக அரசுக்கு அறிவுறுத்தியபோதும், கர்நாடக மாநில அரசும், கன்னடர்களும் எதிர்ப்புத் தெரிவித்து, தமிழர்களை மாற்றி விட்டனர்.

இத்தனைக்கும் இந்தத் துறை தமிழரான மத்திய அமைச்சர் கடம்பூர் ஜனார்த்தனத்தின் கீழ் வருகின்ற துறை. ஒரு தமிழன் மத்திய அமைச்சராகவுள்ள துறையின் கீழேயே தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

''கர்நாடகாவில் பதற்றம் வந்துவிடக் கூடும். இதனைத் தடுக்கவே, வேறு துறைக்குத் தமிழர்களை மாற்றி இருக்கிறோம்'' என்று கடம்பூர் ஜனார்த்தனம் குறிப்பிட்டுள்ளார்.

முன்பு காவிரிப் பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தையில் கன்னட மக்களுக்கு எதிராக எந்த முடிவை எடுத்தாலும் எங்களால் கன்னட மண்ணில் கால் வைக்க முடியாது என்று கர்நாடகாவிலிருந்து காவிரியை விட்டுத் தர மறுத்தனர் கட்சிகளைக் கடந்து கன்னட எம்.பி.க்கள். ஆனால் தமிழ் நாட்டிலிருந்து போய் மத்திய அமைச்சராகி இருக்கும் கடம்பூர் ஜனார்த்தனமோ, தமிழர்களின் வேலை பறிக்கப்பட்ட பின்பும், மத்திய அரசிடம் வாதாடவுமில்லை; போராடவுமில்லை.

ஜெயலலிதா ஊழல் வழக்குகள் குறித்தும், கலைஞரின் அரசைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தும் மத்திய அரசுடன் கடும் மோதல் நிகழ்த்தி வரும் அ.தி.மு.க. மத்திய அமைச்சர் படை. தமிழர்களின் வாழ்வுரிமை, அடிப்படை உரிமை பறிக்கப்பட்ட போதும் மௌனமாகவே இருக்கின்றனர்.


காவிரியில் தமிழகத்தின் பங்கைத் தர வேண்டுமென்று கர்நாடக மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றமும், நடுவர் மன்றமும் உத்தரவிடுகின்ற போதெல்லாம், கர்நாடகத்திலுள்ள தமிழர்களைத் தாக்குவதும், அவர்களின் சொத்துக்களை சூறையாடுவதும், கன்னடர்களின் 'நாட்டுப் பற்றாக' இருக்கிறது. இப்போது தமிழர்களுக்கு வேலை கிடைக்கக் கூடாது என்பதிலும் கன்னட அரசும், ஆளும் எதிர்க்கட்சிகளும், ஒன்றிணைந்து குரல் கொடுத்து வருகின்றனர்.

இது இந்திய இறையாண்மைக்கு விடப்பட்ட சவால். தேசிய இனத்தை அடையாளப்படுத்தி, குரலை ஓங்கி முழங்கும் மண்ணில் போய் எல்லாக் கட்சிகளும் அதே சுருதியில் முழங்குவதும், மற்ற இடங்களில் மட்டும் போய் இந்திய ஒருமைப்பாட்டை ஒப்புவிப்பதுமான தேசியக் கட்சிகளின் பாசாங்கு நாடகம் எத்தனை நாளைக்கு எடுபடுமென்று தெரியவில்லை.

'இந்த விஷயத்தில் நெறிமுறைகளும், நீதியும் மீறப்பட்டுள்ளது. இந்த விவகாரம் மிகவும் தீவிரமானது' உடனே தலையிட வேண்டுமென்று' பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் கலைஞர் கடிதமெழுதியுள்ளார். ஆனால் மத்திய அரசு அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

இந்தியக் குடிமகன் என்று அங்கீகரிக்கப்பட்டாலும் இந்தியாவிற்கு உள்ளேயே தமிழர்களின் வேலை பறிக்கப்பட்டது, நடுநிலையாளர்களையே நிலைகுலையச் செய்துள்ளது. நாம் இந்தியரா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

# ம.தி.மு.க. தலைமையில் மூன்றாவது அணி?



"அடுத்த சட்டசபைத் தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க. அல்லாத மூன்றாவது அணி அமைவது சரித்திரத்தின் கட்டாயம். அதில் ம.தி.மு.க. முக்கியப் பங்கு வகிக்கும்'' என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேட்டியொன்றில் குறிப்பிட்டதைத் தொடர்ந்து தமிழகத்தில் மூன்றாவது அணியில் எந்தெந்தக் கட்சிகள் இணையக் கூடுமென்ற ஆருடங்களும் கூறப்படுகின்றன.

வாஜ்பாய் அரசு சட்ட நெறிமுறைகளை மீறி ஜெயலலிதாவுக்காகத் தனி நீதிமன்ற விவகாரத்தில் மூக்கை நுழைத்து அகில இந்திய அளவில் தலைகுனிவைத் தேடிக் கொண்டது. ஜெ. கூட்டணியில் அங்கமான பா.ம.க. தனி நீதிமன்றம் சம்பந்தமாக ஜெ.வை ஆதரித்து தன்னுடைய கட்சியைக் கூட்டணியில் தக்க வைத்துக் கொண்டுள்ளது. ஆனால் வைகோ வாஜ்பாயின் நடவடிக்கைக்குக் கடும் கண்டனம் தெரிவிப்பதுடன், 'ஜெ. மீதான தனி நீதிமன்ற விசாரணை சரியே' என்கிறார். எனவே அ.தி.மு.க.வுடன் ம.தி.மு.க. மோதத் தொடங்கிவிட்டது.

''2001-இல் சட்டசபைத் தேர்தல் நடக்கும்போது 3-வது அணி அமைவது சரித்திரக் கட்டாயம். அந்த அணியில் ம.தி.மு.க. இருக்கும். அந்த அணி எப்படி அமையும், யார் தலைமையில் அமையும் என்றெல்லாம் கூற முடியாது. தி.மு.க., அ.தி.மு.க. அல்லாத ஒரு அரசு அமையணும் என்கிற எண்ணம் நடுநிலை வாக்காளர்கள் மத்தியில் அரும்பியுள்ளது'' என்று மூன்றாவது அணிக்கு அடித்தளம் தருகிறார் வைகோ.

இப்போதைக்கு வைகோ பலதரப்புப் பேச்சுவார்த்தைகளை முடித்திருப்பது மூப்பனாருடன் மட்டும்தான். தி.மு.க.வுடன் த.மா.கா.வின் தேனிலவும் முடிவதும், தொடர்வதும், முறிந்து போவதுமாக இருக்கிறது. த.மா.கா. தனித்து நிற்க முடியாத சவலைக் கட்சி, சில பணக்காரர்களை மட்டுமே நம்பியிருக்கின்ற கட்சி, தொண்டர் பலம் என்பது சுத்தமாக இல்லை என்பதனைக் கடைசியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் நிரூபித்து விட்டது. எனவே தி.மு.க.வும், த.மா.கா.வை வெட்டிவிடக் காத்திருக்கிறது. த.மா.கா.வும் போய்ச் சேர வேறு தோள் கிடைக்காததால் மௌனமாக கூட்டணியில் நீடிக்கிறது. இப்போது ம.தி.மு.க. கிடைக்குமானால் மூன்றாவது அணியில் த.மா.கா. புகுந்து கொள்ளும்.

ஆனால் ம.தி.மு.க.வுக்கும், த.மா.கா.வுக்கும் எவ்வளவு தூரம் கருத்தொற்றுமை உள்ளதென்பதைப் பார்க்க வேண்டும். த.மா.கா. என்ற தனிக் கட்சியைத் தொடங்கிய பின்னரும் சோனியாவை பூஜிப்பவராகவே மூப்பனார் இருந்து வருகிறார். சமயம் வரும்போதெல்லாம் காங்கிரசின் செயல்பாடுகளைப் பாராட்டி வருகிறார். வைகோ சோனியா தலைமையிலான காங்கிரசை கடுமையாக எதிர்க்கிறார்.

எப்படியோ வெட்டி விடப்பட்ட இரண்டு கட்சிகளுக்கும் ஒரு தளம் வேண்டும். அதற்கு ஒரு 'பேனர்' வேண்டும். அதுவே மூன்றாவது அணி. தமிழகத்தில் குறிப்பிடத்தக்க ஓட்டு வங்கியை உடைய பா.ம.க. தலித் கட்சிகள், மார்க்சிய இடது-வலதுகள் போன்ற கட்சிகளுடன் ம.தி.மு.க. இணைந்து மூன்றாவது அணி அமைக்கும் பட்சத்திலேயே அந்த அணி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையக் கூடும். அல்லாத பட்சத்தில் அமையும் மூன்றாவது அணி தேர்தல் காளானாய் தோன்றி மறையக் கூடுமே அல்லாமல் நிலைக்க வாய்ப்பில்லை.

## யாழ்ப்பாணத்துக்குப் படகுப் பயணம்!

பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தானுடன் உறவை மேம்படுத்தும் விதமாக லாகூருக்குப் பேருந்துப் பயணம் மேற்கொண்டார். இதை வரவேற்றும் எதிர்த்தும் பல்வேறு கருத்துகள் இந்திய அரசியல்வாதிகளால் வைக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில், மக்கள் நல உரிமைக் கழகத்தின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பண்ருட்டி இராமச்சந்திரன் பிரதமரின் இப்பயணத்தை வரவேற்றதோடு, ஈழத் தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்க யாழ்ப்பாணத்துக்கு படகுப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். அண்மையில் நடந்த இவரது கட்சியின் முப்பெரும் விழாவின்போது, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்தார் என்பது கவனிக்கத்தக்கது.

# M.K.SRI & CO

## SOLICITORS

ADMINISTRATORS OF OATHS

## LEGAL AID WORK UNDERTAKEN

**We specialise in**

* IMMIGRATION
* CRIME
* CONVEYANCING
* MATRIMONIAL
* STATE BENEFITS
* TRAFIC OFFENCES
* ADVICE & ASSISTANCE
* AT POLICE STATION

**Fairholme Road,**
**Off Station Road, Harrow,**
**Middx HA1 2TN.**

**Tel: 0181 515 7000** (4lines)
**Fax: 0181 933 1361**

**CONTACT: M. K. SRITHARAN**

வெற்றிலை பாக்கை இடிப்பதற்குள் பத்துத் தடவையாவது கதை சொல்லச் சொல்ல அவசரப்படும் தன் பேரன் இன்று அமைதியாய்ப் படுத்திருப்பது அவளுக்கு வினோதமாய்ப்பட்டது. சரி குழந்தை ஏதோ நினைவிலிருக்கிறான். அதைக் கலைத்துவிட வேண்டாம் என்று நினைத்து இடித்த வெற்றிலைப் பாக்கை எடுத்துப் போட்டுக் கொண்டாள். அப்பொழுது எதையோ கண்டுபிடித்துவிட்டவன் போல், உற்சாகமாய்க் கேட்டான், தன் நினைவிலிருந்து கலைந்த பேரன் அருண்.

''பாட்டி நான் எப்படி பாட்டி பொறந்தேன்?''

அந்தக் குழந்தை என்ன கேட்கிறான் என்று சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை அவளால்.

''என்னடா என் செல்லம்... என்ன கேக்கிறே...?'' என்றாள்.

''பாட்டி, அம்மாவும் அப்பாவும் முத்தம் குடுத்துக்கிட்டாத்தான் புள்ள பொறக்குமா?''

''உனக்கு யாருடா ராசா அப்படி சொன்னா?''

''எங்கூட படிக்கிற மகேஷ்தான் சொன்னான். அவனுக்கு எல்லாமே தெரியும். அவங்க வீட்ல அவனோட அம்மாவும் அப்பாவும் ரொம்ப அன்பா இருப்பாங்க. எனக்கு அவங்க வீட்டுக்குப் போவ ரொம்ப புடிக்கும். எல்லாரும் எப்பவும் சிரிச்சிக்கிட்டே இருப்பாங்க. ஆனா நம்ப வீட்ல அப்பாவும் அம்மாவும்தான் பேசிக்கிறதே இல்லையே, பின்ன எப்படி முத்தம் குத்துக்கிட்டாங்க, நான் எப்படி பொறந்தேன்?''

எப்பொழுதும் கதை சொல்லச் சொல்லிக் கேட்பவன் இன்று இப்படி ஒரு கேள்வியை அவனுக்கும் விளங்காமலேயே கேட்பதும் அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. அவனுடைய மகன், மருமகளுடைய பிரச்சினை பற்றி அவளும் யோசித்து யோசித்து விடை தெரியாமல் கடைசியில் 'விதிப்படி நடக்கட்டும்' என்று விட்டுவிட்டாள். இப்பொழுது இந்தக் குழந்தைக்கு எப்படி பதில் சொல்வாள்? அவனுக்கு வேடிக்கை பேச்சுப் பேசி அவன் எண்ணத்தை திசை திருப்ப முயற்சித்தாள் பாட்டி.

ஆனால் வீட்டினுள்ளே தனித்தனியே படுக்கையைப் போட்டுப் படுத்திருக்கும் அருணின் அப்பாவுக்கும் அம்மாவுக்கும்கூட அவன் கேட்டது காதில் விழுந்தது.

# திரை

## ஜீவன்



அவன் தங்களைத்தான் கேட்கிறான் என்றே அவர்களுக்குப் பட்டது. குற்றம் செய்தவர்களல்லவா... குறுகுறுப்பு இருக்கத்தானே செய்யும்.

★ ★ ★

ஒன்பது, பத்து வருடங்களுக்கு முன் நடந்தது. அருணின் அப்பாவிற்கு தாமதமின்றி உடனே திருமணம் செய்தே தீரவேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது, அருணின் தாத்தா நோய்வாய்ப்பட்டு, இனி அதிக நாள் தாங்காது என்று முடிவானபின் சென்னையிலிருந்து அருணின் அப்பா கிராமத்திற்கு வரவழைக்கப்பட்டான். அவன் வருவதற்கு முன்பே பெண் முடிவாகி எல்லாம் தயாராயிருந்தது. அவனுக்கு காதல் என்று எதுவுமே இல்லை என்றாலும் வேலைக்குச் சென்ற இரண்டு வருட காலத்திலேயே திருமணம் செய்து கொண்டு 'அடைபட்டுவிட' விரும்பவில்லை. அதனால் அவனின் பூர்ண சம்மதமின்றியே அவனுடைய திருமணம் நடைபெற்றது. அவனுக்குப் பார்த்திருந்த பெண் அதிகம் படித்தவளில்லை. அது பரவாயில்லை என்றாலும் தலை முதல் கால் வரை ஒரே மாதிரியான குண்டான உடம்பு. ஊருக்குள் அவளை 'குண்டுப் பூசணி' என்றுதான் அழைப்பார்கள்.

எல்லா இளைஞர்களைப் போலவும் தனக்கு வரப்போகின்றவளின் அழகான வடிவத்தை கனவுகளில் கண்டு வாழ்ந்தவன்தான் அவனும். ஆனால் கனவில் வந்த வடிவங்கள் எல்லாம் கனவாகவே போனபோதும் அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஆனால் அவனுக்காக அவன் அப்பா பட்ட சிரமங்கள், அவரின் உயர்ந்த வாழ்க்கை எல்லாம் அவருடைய வாக்கைக் காப்பாற்ற வைத்தன.

அவரின் சொல்படி எந்தவித மறுப்புமின்றி தாலிகட்டினான். சாந்தி முகூர்த்தத்தின்போது கூட அவன் அவளைத் தொடவில்லை. தொடுவது என்றில்லை. பேசுவது என்பதுகூட அவனைப் பொறுத்தவரையில் பெரும் பிரச்சினையாய் இருந்தது.

திருமணம் வந்து சில நாட்களில் அவன் தந்தை திருப்தியாய் போய்ச் சேர்ந்தார். எல்லாவிதச் சடங்குகளையும் முடித்துக் கொண்டு தன் தாயையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்துவிட்டான் அவன். சென்னை வந்ததும் அந்தத் தம்பதியரின் வாழ்க்கை அப்படியேதான் தொடர்ந்தது. 'காமம்' தேவையென்றால் பெண் புலியை வரவழைக்க ஆண்புலி ஒருவிதமான



வாசனையை தன் உடம்பிலிருந்து வெளிப்படுத்துமாம். அந்த வாசனையினால் ஈர்க்கப்பட்டு ஆணைத்தேடி பெண்புலி வருமாம்.

அதைப் போல அவனுக்கு 'செக்ஸ்' தேவைப்பட்டால் அவன் இரவு நீண்ட நேரம் வராண்டாவில் உலாத்துவான். அதைப் பார்த்ததும் அவள் புரிந்து கொள்வாள். 'லைட்'டை எல்லாம் அணைத்துவிட்டு 'அதற்கு'த் தயாராய்ப் படுத்திருப்பாள் அவன் மனைவி. அவன் உலாத்தி முடித்துவிட்டு உள்ளே நுழைந்து மெதுவாய் அவள் கட்டிலருகே போய் அவள் படுக்கையில் உட்காருவான். அவள், தான் விழித்திருப்பதை உறுதி செய்ய மறுபக்கம் - அவன் உட்கார்ந்திருக்கும் பக்கம் - புரண்டு படுப்பாள். இலக்கு சரியாய் இருப்பதையும், இரை தன் அருகே இருப்பதையும் உணர்ந்து கொண்டதும் ஆண் புலி ஒரே பாய்ச்சல் - எல்லாம் முடிந்து எழுந்து சாவகாசமாய்ப் போய் தன் படுக்கையில் படுத்துக் கொள்ளும்.

★ ★ ★

இன்று மகன் அவ்வாறு கேட்டதும் இருட்டில் படுத்திருந்த இருவரும் ஒரு கணம் திரும்பி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு பழையபடி முதுகு காட்டிப் படுத்துக் கொண்டு, தொலைத்துவிட்ட எதையோ தேடி பழைய பாதையில் தனித்தனியே பயணமானார்கள்.

''இன்னிக்குப் பாட்டி உனக்கு 'வேதாளம்' கதை சொல்லப் போறேன்'' என்றாள் அவனைத் திசை திருப்ப. 'வேதாளம்' கதை என்றதும் அந்தக் குழந்தையும் கதை கேட்கும் ஆவலில் மூழ்கினான்.

ஆனால், அருணின் அப்பாவும் அம்மாவும் குழந்தைகளல்லவே. அவர்களின் மனம் எங்கேயெல்லாமோ அலைய ஆரம்பித்தது.

'ஆம் எனக்கு அவளைப் பிடிக்கவில்லை என்றால் நான் கல்யாணத்திற்கு சம்மதித்திருக்கக் கூடாது. அப்பாவுக்காகச் சம்மதித்துவிட்டு, இப்பொழுது இப்படி வாழ்ந்தும் வாழாத ஒரு அவஸ்தை ஏன்? ஆனால் எனக்கு 'அது' தேவைப்படும்பொழுது மட்டும் அவளை என் இஷ்டத்துக்கு அனுபவிக்கும் நான் மனிதன் தானா?

நானும் அவளும் மட்டுமே ஒரு வாகனத்தில் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய கட்டாயச் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். முன்பு

எப்படி இருந்திருந்தாலும் அவளுடன் அந்நியோன்யமாய் இருந்திருக்க வேண்டும். அதைவிட்டு ஒரு வார்த்தைக் கூட பேசாமல் பயணித்தது எந்த சந்தோஷத்தை அனுபவிக்க? எனக்கு அவள் 'இணை'யில்லை என்பதால் அவளைப் பழிவாங்க நினைத்தேன். அவளைப் பழிவாங்கி தண்டனையை எனக்கு நானே அளித்துக் கொண்டேன் என்பதை நான் ஏன் புரிந்து கொள்ளவில்லை? எனக்கு அவளைப் பிடிக்கவில்லை என்றதும் அவளை அடித்துத் துரத்திவிட்டு எனக்குப் பிடித்த எவளுடனேயாவது நான் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தால்- அதைப் பார்த்தாவது அவளும் சந்தோஷப்பட்டிருப்பாள். என்னுடைய மிருகத்தனத்தின் விளைவால் ஒரு குழந்தை வந்தபின்னும்கூட நான் இத்தனை வருடங்களாய் வாழ்ந்த இந்த 'நரக வாழ்க்கை'யை இனி நான் எதைக் கொடுத்துத் திரும்பப் பெற முடியும்? இதோ என் மகன் கேட்கிறான், 'அம்மா அப்பா அன்பா பேசிக்கிறதே இல்ல. அப்புறம் நான் எப்படி பொறந்தேன்?' என்று.

தாம்பத்ய உறவு கணவன் மனைவியரிடையேயுள்ள உள்ள பிணைப்பை அதிகப்படுத்தத்தான். இதை அந்தக் குழந்தை தான் அறியாமலேயே வெளிப்படுத்துகிறது. ஆனால், நான்...? இத்தனை வருட வாழ்க்கையையே வாழத்தான் வேணுமா? இல்லை. இன்றுடன் முடிந்தது. இனி எங்கள் வாழ்க்கையில் புன்னகை மட்டுமே... இன்று 'என் மனைவியிடம்'... தன் எண்ணங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டே படுத்திருந்தான். அவன் மனைவியும்தான்...

'பாவம் அவர் என்ன செய்வார்? தன் மனைவி எப்படியெல்லாமோ இருப்பாள் என்று கனவு கண்டிருப்பார். ஆனால் நான்...? நான் எல்லாவற்றையும் அனுசரித்துப் போயிருக்க வேண்டும்... அவர் பேசவில்லை என்பதற்காக நானும் போட்டி போட்டுக் கொண்டு... எனக்கு குழந்தைதான் முக்கியம் என்றிருந்தால் அதன் பிறகாவது நான் மாறியிருக்க வேண்டும். ஆனால் நானும் மாறவே இல்லை... நான் ஒரு முட்டாள்... போனது போகட்டும்... இன்றுடன் இந்த வாழ்க்கை முடியட்டும். இனிமேல் புது வாழ்க்கையைத் தொடங்கத்தான் வேண்டும். இன்று அவரிடம்...

முதன் முதலாகக் கணவன் மனைவி இருவரும் தங்கள் தவறை உணர்ந்து ஒரே சிந்தனையில் பயணித்தார்கள்.

★★★



பாட்டியிடம் கதை கேட்டுக் கொண்டே தூங்கிப் போனான் அருண். ''ருக்கு... ருக்கு... தம்பி தூங்கிட்டான் வந்து தூக்கிட்டுப் போய் படுக்க வை...'' என்று தன் மருமகளைக் கூப்பிட்டாள். ருக்கு வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டுபோய் தன் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு ஓரமாய் உட்கார்ந்து தன் கணவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் தன் படுக்கையிலிருந்து எழுந்து வந்து தன் மனைவியின் படுக்கையின் மற்றொரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

''ருக்கு... என்ன மன்னிச்சிடும்மா... நான் ரொம்ப பெரிய தப்பு பண்ணிட்டேன். என் தப்ப நம்ப பையன் திருத்திட்டான். இவ்வளவு நாளா நான் உன்னைய ரொம்பக் கொடுமைப்படுத்திட்டேன்''. அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டது மட்டுமல்ல; அவன் மனைவியின் வலது கை அவன் வாயைப் பொத்திக் கொண்டது. அவன் பேசியதைக் கேட்டது அத்தனை வருடங்களாய் அடக்கி வைத்திருந்த அவள் சோகம் கண்ணீராய் வெளிப்பட்டது. அவளின் கண்களிலிருந்து கொட்டிய கண்ணீர் இடையில் படுத்திருந்த அருணின் முகத்தில் கொட்ட, அவன் விழித்துக் கொண்டான். ஆனால் தன் அப்பாவும் அம்மாவும் ஒரே கட்டிலில் உட்கார்ந்து இருந்ததைப் பார்த்ததும் அமைதியாய் இருந்துவிட்டான்.

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நீங்கதான் என்னை மன்னிக்கணும்...'' அவளால் அதற்குமேல் பேச முடியவில்லை. அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான். சிறிது நேரத்திற்குப் பின் அவள் ஏதோ பேச வாயெடுத்தாள்.

''இல்லேம்மா இனிமே நீ எதுவும் பேசவேண்டாம்...'' என்று சொல்லிவிட்டு அவளை இழுத்து அணைத்துக் கொண்டு அவளுடைய உதட்டில் மென்மையாய் முத்தமிட்டான். தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்த அருண் மெதுவாய் கண்களைத் திறந்தான். தன் அம்மாவும் அப்பாவும் முத்தமிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்ததும்...

''ஐ... பாட்டி... எனக்குத் தங்கச்சிப் பாப்பா பொறக்கப் போவுது பாட்டி...'' என்று சந்தோஷ மிகுதியால் எழுந்து கட்டிலிலிருந்து துள்ளிக் குதித்து தன் பாட்டியிடம் சொல்ல ஓடினான்.


● ● ●

1998-ஆம் ஆண்டு படத்துறைக்குச் சோதனையான ஆண்டு. தியேட்டரில் வெகு சில படங்களும் தியேட்டரை விட்டுப் பல படங்களும் ஓடிய வகையில். அதனால் நம் நட்சத்திரங்கள் பலரின் நாற்காலிகளும் ஆட்டம் கண்டன.

போகட்டும். நம் நட்சத்திரங்கள் நடித்த படங்கள் எத்தனை? அவற்றில் வெற்றி, தோல்வியைச் சந்தித்த படங்களின் எண்ணிக்கை எத்தனை? பார்ப்போமா?

அதிகப் படங்களில் நடித்த பெருமை முரளிக்கு. ஏழு படங்கள்! அவற்றில் 'வீரத் தாலாட்டு' மட்டுமே வர்த்தக வெற்றி. 'தினந்தோறும்' நஷ்டப்படுத்தாத படம். 'பூந்தோட்டம்', 'தேசிய கீதம்', 'உன்னுடன்', 'ரத்னா', 'என் ஆச ராசாவே' தோல்விப் படங்கள்.

# நட்சத்திரங்களின்



கார்த்திக், அஜீத், அப்பாஸ் மூவரும் தலா மூன்று படங்களில் நடித்துள்ளனர். 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' கார்த்திக், அஜீத் இருவருக்கும் வெற்றிப் படம். 'அவள் வருவாளா?' அஜீத்துக்குக் கிடைத்த கூடுதல் வெற்றி. 'பூவேலி' கார்த்திக், அப்பாஸ் இருவருக்கும் அண்மையில் கிடைத்த வெற்றி. அரிச்சந்திரா', 'உதவிக்கு வரலாமா', கார்த்திக்கின் காலை வாரிய படங்கள். அஜீத்துக்கு 'உயிரோடு உயிராக', 'காதல் மன்னன்' தோல்வி. 'ஆசைதம்பி', 'இனி எல்லாம் சுகமே', 'ஜாலி'- அப்பாஸை அப்ஸெட் பண்ணியவை.

விஜய் நடித்தது மூன்று படங்கள். 'நினைத்தேன் வந்தாய்', 'ப்ரியமுடன்' - வெற்றி. 'நிலாவே வா' தோல்வி. பிரசாந்த் நடித்ததும் மூன்று படங்கள். 'கண்ணெதிரே தோன்றினாள்', 'ஜீன்ஸ்' வெற்றி அடைந்தவை. 'காதல் கவிதை' சுமார் ரகம்.

விஜயகாந்த், பிரபு, சரத்குமார், ராஜ்கிரண் போன்ற சீனியர்களும் தலா மூன்று படங்களில் நடித்துள்ளனர். விஜயகாந்துக்கு 'வீரம் வௌஞ்ச மண்ணு', 'தர்மா', 'உளவுத்துறை' என மூன்றுமே தோல்வி. பிரபுவுக்கும் இதே நிலைமைதான். 'பொன்மனம்' பாராட்டப்பட்டது. பணவசூல் இல்லை. 'இனியவளே', 'என் உயிர் நீதானே' படங்களுக்குப் பாராட்டும் இல்லை; பணவசூலும் இல்லை.

'நட்புக்காக' - சரத்துக்கு வெற்றி. 'சிம்மராசி', 'மூவேந்தர்' தோல்வி. ராஜ்கிரணுக்கு 'வீரத் தாலாட்டு' மட்டும் 'வெற்றி! 'பொன்னு வெளயிற பூமி', 'தலைமுறை' இரண்டும் சோகம்.

பார்த்திபன், பிரகாஷ் ராஜ் (கதாநாயகனாக மட்டும்), பாண்டியராஜன், அர்ஜுன், லிவிங்ஸ்டன், பிரபுதேவா, சூர்யா, நெப்போலியன் ஆகியோர் தலா இரண்டு படங்களில் தலைகாட்டினர். பிரகாஷ் ராஜுக்கு 'சொர்ணமுகி', 'குருபார்வை' இரண்டும் வெற்றி. பார்த்திபனுக்கு 'சொர்ணமுகி'யில் வெற்றியும், 'புதுமைப்பித்தனி'ல் தோல்வியும் கிடைத்தன.

பார்த்திபன் போலவே ஒரு வெற்றி, ஒரு தோல்வியை சந்தித்தவர்கள்... பாண்டியராஜன், சூர்யா, லிவிங்ஸ்டன், பிரபுதேவா ஆகியோர். பாண்டியராஜன், 'கும்பகோணம் கோபாலு', 'கவலைப்படாதே சகோதரா', சூர்யா, 'காதலே நிம்மதி', 'சந்திப்போமா'; லிவிங்ஸ்டன் 'சொல்லாமலே', 'ஜாலி'; பிரபுதேவா 'காதலா காதலா', 'நாம் இருவர் நமக்கு இருவர்' முறையே வெற்றி தோல்வி படங்கள்.

# 98-ஆம் ஆண்டுப் பலன்



அர்ஜுன், நெப்போலியன் இருவருக்கும் சோதனை ஆண்டு. 'கொண்டாட்டம்', 'தாயின் மணிக்கொடி', அர்ஜுனுக்கும் 'பகவத் சிங்', 'கிழக்கும் மேற்கும்' நெப்போலியனுக்கும் தோல்விகள்.

கமல், சத்யராஜ், பாக்யராஜ், ராம்கி, விக்னேஷ், அருண்குமார், சரவணன், மம்முட்டி, செல்வா - ஒரு படத்தில் நடித்தவர்கள். 'காதலா காதலா' கமலுக்கு வெற்றி. 'கல்யாண கலாட்டா' சத்யராஜுக்கு தோல்வி. பாக்யராஜுக்கு 'வேட்டிய மடிச்சுக்கட்டு', ராம்கிக்கு 'எல்லாமே என் பொண்டாட்டிதான்', விக்னேஷுக்கு 'வேலை', அருண்குமாருக்கு 'துள்ளித் திரிந்த காலம்', சரவணனுக்கு 'சந்தோஷம்',

செல்வாவுக்கு 'கோல்மால்' ஆகிய படங்கள் தோல்வியையே தந்தன. மம்முட்டிக்கு 'மறுமலர்ச்சி' ஓ(ட்)டிய படம்.

கதாநாயகர்களின் கதை இப்படி. கதாநாயகிகளின் நிலை என்ன? பார்க்கலாமா?

குஷ்பூ, தேவயானி இருவரும் தலா பத்துப் படங்களில் நடித்து அதிகப் படங்களில் நடித்த பெருமையை அறுவடை செய்திருக்கின்றனர்.

'வீரத்தாலாட்டு', 'குருபார்வை', 'கண்ணாத்தாள்' (கௌரவ வேடம்), குஷ்பூவுக்கு வெற்றி தந்தவை. எஞ்சிய ஏழு படங்களான 'கலர் கனவுகள்', 'துள்ளித் திரிந்த காலம்', 'பொன்னு வெளயிற பூமி', 'ஜாலி', 'கல்யாண கலாட்டா', 'வீரம் வௌஞ்ச மண்ணு', 'சிம்மராசி' போன்றவை தோல்வி.

தேவயானிக்கு 'நினைத்தேன் வந்தாய்', 'மறுமலர்ச்சி', 'சொர்ணமுகி' வெற்றி தந்த படங்கள். 'மூவேந்தர்', 'கிழக்கும் மேற்கும்', 'பூந்தோட்டம்', 'செந்தூரம்', 'என் உயிர் நீதானே', 'புதுமைப்பித்தன்', 'உதவிக்கு வரலாமா' தோல்வி.

சுவலட்சுமி நடித்த ஏழு படங்களில் 'தினந்தோறும்', 'பொன்மனம்' தவிர, 'சந்தோஷம்', 'கவலைப்படாதே சகோதரா', 'இனியவளே', 'நிலாவே வா', 'என் ஆச ராசாவே' ஆகியவை தோல்விப் படங்கள். முந்தைய இரண்டும் சுமார்.



ரோஜா, சிம்ரனுக்கு கடந்த ஆண்டு தலா நான்கு படங்கள். 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' ரோஜாவுக்கு சூப்பர் ஹிட் மகிழ்ச்சி. 'புதுமைப் பித்தன்', 'என் ஆச ராசாவே', 'பொன்னு வெளயிற பூமி' மூன்றும் சோகம்.

சிம்ரனுக்கு 'கொண்டாட்டம்' மட்டுமே சோகம். 'அவள் வருவாளா', 'நட்புக்காக', 'கண்ணெதிரே தோன்றினாள்' டபுள் மகிழ்ச்சி.

கௌசல்யாவுக்கு ஐந்து படங்களில் மூன்று வெற்றி, 'ப்ரியமுடன்', 'சொல்லாமலே', 'பூவேலி'. இரண்டு தோல்வி: 'ஜாலி', 'உன்னுடன்'.

சங்கவியும் ஐந்து படங்களில் நடித்திருந்தார், என்ன பிரயோஜனம்? ஐந்தும் அம்பேல். அவை 'பகத்சிங்', 'எல்லாமே என் பொண்டாட்டிதான்', 'நிலாவே வா', 'ஆசைத் தம்பி', 'இனியெல்லாம் சுகமே'.

மீனாவுக்கு மூன்றுமே தோல்விப் படங்கள். 'அரிச்சந்திரா', 'உளவுத்துறை', 'நாம் இருவர் நமக்கு இருவர்'. ரம்பா நடித்ததும் மூன்று படங்கள். 'நினைத்தேன் வந்தாய்', 'காதலா காதலா' ஓகே.! 'தேசிய கீதம்' தோல்வி.

ப்ரீதா விஜயகுமார் பரபரப்பாக அறிமுகமாகிய அளவுக்கு வெற்றி வசப்படவில்லை. இவர் நடித்த 'தர்மா', 'சந்திப்போமா' இரண்டும் படுதோல்வி அடைந்தது பரிதாபம்.

சங்கீதா நடித்த இரண்டு படங்களில் 'கும்பகோணம் கோபாலு' வென்றார். 'ரத்னா' தோற்றார்.



மகேஸ்வரிக்கு 'நாம் இருவர் நமக்கு இருவர்', 'என் உயிர் நீதானே' இரண்டும் மகிழ்ச்சியளிக்கவில்லை; தோல்வி!

ஈஸ்வரிராவுக்கு 'குருபார்வை' அமோகமாக இருந்தும், 'சிம்மராசி' சரிஇல்லை. ரசிகாவுக்கு 'காதலே நிம்மதி' தந்தும் 'உதவிக்கு வரலாமா' உதவவில்லை.

வினிதாவின் 'சிவப்பு நிலா'வில் துளியும் ஒளியில்லை. நக்மாவுக்கு 'வேட்டிய மடிச்சுக்கட்டு' வீட்டில் உட்கார வைத்துவிட்டது.

அஞ்சு அரவிந்துக்கு 'ஆசைத் தம்பி'யால் அப்செட். 'குருபார்வை'யில் விமோசனம். அப்படியும் அம்மணிக்கு படம் இல்லை. ரேவதிக்கு 'ரத்னா', 'தலைமுறை' இரண்டும் தோல்வி. கதாநாயகியரில் ஒருவராகத் தோன்றிய இந்துவுக்கு 'கண்ணாத்தாள்', 'குருபார்வை', 'கண்ணெதிரே தோன்றினாள்' மூன்றும் வெற்றி. நீனாவுக்கு 'கண்ணாத்தாள்' கண் திறந்திருக்கிறாள். பலன்தான் இல்லை.

புதிய ஆண்டில் இவர்களுக்கு வெற்றிகள் வசப்படட்டும்... வாழ்த்துவோம்.

- ஜெ. பிஸ்மி

# முல்லை அமுதனின் மற்றொரு நாவல்




இலக்கியத்தை இதயத்தில் சுமந்து -எழுத்தை உயிரென நேசிக்கும் தமிழீழ உணர்வுள்ள 'முல்லை அமுதன்' படைத்துள்ள நாவல்தான் 'பட்டங்கள் சுமக்கின்றான்'.

தமிழ் இளைஞனும் - சிங்களப் பெண் ஒருத்தியும் காதலித்துக் கல்யாணம் செய்கின்றனர்.

மாமன் மகளுக்கோ பெருத்த ஏமாற்றம்.

தங்கையின் இந்தச் சோகம் அண்ணனை வாட்டுகிறது.

இறுதியில்- ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்ட அந்தச் சிங்களப் பெண்ணும் குழந்தையும் கார் ஒன்றுடன் மோதி மரணத்தைத் தழுவுகிறார்கள். இந்தக் காரை ஓட்டியவர் யார்?

நீங்களும் ஒரு முறை படிக்க வேண்டும் என்பதற்காக ஒரு 'சஸ்பென்ஸ்'. விளங்காமல் எதையாவது எழுதி- வாசகர்களைக் 'குழப்பு'வது இப்போதுள்ள பாணி.

ஆனால்- 'முல்லை அமுதன்' தனக்குத் தெரிந்த மொழியில் எழுதியிருக்கிறார்- எளிய நடையில்- கஷ்டப்படாமல்- கதையை நகர்த்திக் கொண்டு இருக்கிறார்.'

சில விஷயங்களைச் சாதாரணமாகச் சொல்கிறார்.

ஆனாலும் அவற்றுக்குள் எவ்வளவு பெரிய கருத்துக்கள் அடங்கி இருக்கின்றன. சில-

''... கணவனுக்காக மனைவியும்- மனைவிக்காகக் கணவனும் வாழ்கின்ற வாழ்வுத்தான் சிறந்தது. களைத்து வரும் கணவனைக் கவனிக்கத் தெரியாத மனைவியும்- மனைவிக்குத் தக்க மாதிரி கணவனும் நடக்கத் தெரியாவிட்டால் அதுவே தாம்பத்தியத்தில் விரிசல் ஏற்பட வாய்ப்பாகிவிடும்....''

''இதுதான் வாழ்க்கை- இதுதான் பயணம்- என்று எழுதப்பட்ட வாழ்க்கையினை எதிர்நீச்சல் போட்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும். வலுவற்றவன் மடிந்து போகிறான்... வீரன் தடைகளைக் கடந்து முன்னேறுகிறான். இது எத்தனை பேருக்குச் சாத்தியமாகிறது?''

மனங்கள் ஒன்றுபட்ட இளையதுகளை இனம் பிரித்த கொடுமையையை அழகாக எழுதியிருக்கிறார் முல்லை அமுதன்.

நூலாசிரியருடன் தொடர்பு கொண்டு- இந் நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

**6,Shakespeare Crescent,**
**London E12 6LN**
**Tel: 0181 548 8895**

# இலங்கையிலிருந்து பயனுள்ள நூல்

இலங்கையின் தேயிலைக் காட்டின் உரிமைக்குரல்களாக வாழ்ந்த ஒளி விளக்குகளைப் பற்றி எழுதி வெளியிடப்பட்டுள்ள இந் நூல் அந்த மண்ணுக்காக உழைத்தவர்களைப் பற்றி அறிய வாய்ப்புத் தருகிறது. குறிப்பாக இலங்கையில் வாழும் இளைய தலைமுறையினருக்குப் பயனள்ள நூல் இது.


இலங்கையில் கலை இலக்கியத்துடன் நீண்டகால பரிச்சிய முள்ளவர் அந்தனிஜீவா. நாடறிந்த எழுத்தாளர். நல்ல தமிழ் நூல்களைத் தந்துள்ளார். நல்ல கலைஞர்.

இவயும எல்லாவற்றையும் விட- மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்காகப் பெரும் பணியாற்றி வரும் 'கொழுந்து' சஞ்சிகையின் ஆசிரியரான இவர் மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோடிகளைப் பற்றி எழுதிய 'மலையக மாணிக்கங்கள்' என்ற இந்த நூல் இப் பெரியார்கள் பற்றி அறியக் கூடிய முறையில் உள்ளது.

பன்னிரண்டு பேரைப் பற்றி இந்நூலில் எழுதியுள்ளார்.

திருமதி மீனாட்சி அம்மையார்- தேச பக்தன் கோ. நடேசய்யர்- பெரியார் பெரி. சுந்தரம்- தேசிகர் இராமானுஜம்- திவான் பகதூர் ஐ.எக்ஸ்.பெரேய்ரா- ஜோர்ஜ் ஆர்.மோத்தா- மலைநாட்டுக் காந்தி ராஜலிங்கம்- தளபதி வி.கே. வெள்ளையன்- மக்கள் கவி மணி சி.வி. வேலுப்பிள்ளை- தொழிற்சங்கத் தலைவர் ஏ. அஸீஸ்- அஞ்சா நெஞ்சன் சோமசுந்தரம்- அசோகா பி.டி.ராஜன் ஆகியோர்களின் சேவைகயைத் தனக்கே உரிய பாணியில் எழுதியிருக்கிறார்.

**பட்டங்கள் சுமக்கின்றான்**



ஆர். மகேந்திரன்

நூலாசிரியர் அந்தனிஜீவாவின் எழுத்துக்களில் ஒரு வித விறுவிறுப்பைத் தரிசிக்கலாம்.

நூலில் அவர் எழுதியுள்ள 'என்னுரை'யில் இருந்து ஒரு பகுதி-

''தேநீருக்கு சாயத்தைத் தந்த மக்கள் கொட்டும் பனியிலும்- அட்டைக் கடியிலும் அடிமைகளாக வாய் பேச முடியாத ஊமைகளாக விடியலுக்கு முன் உழைப்பிற்குச் சென்று இருள் கவிந்த பின்னர் திரும்புகின்ற இழிந்த நிலையில் எதம் பேச முடியாத ஏமாளிகளாக இலங்கையின் தேயிலை காடுகளில் இந்திய மண்ணின் மைந்தர்கள் காட்டையும் மேட்டையும் சீர்படுத்தி பசுமை பூத்துக் குலுங்கும் சித்திரச் சோலைகளாக பொன் கொழிக்கும் பூமியாக மாற்றியவர்களின் வாழ்வில் ஒளி இல்லை...

வஞ்சிக்கப்பட்டவர்களாக திக்கற்றவர்களாக துன்பக் கேணியில் வாழ்ந்தார்கள்...

இந்த இழி நிலை தொடர்ந்தது ஒன்றல்ல.. இரண்டல்ல.... நூறு ஆண்டுகளாக இவர்களுக்காக எவருமே குரல் கொடுக்கவில்லை.

இந்த மக்கள் உழைப்பிற்காக கொண்டு வரப்பட்ட நூறு ஆண்டுகளுக்குப் பின்னரே ஓங்கி ஒலித்தது ஒரு குரல். உரிமைக்காக முழக்கமிட்டது''

இந் நூலைப் பெற விரும்புவோர் பின் வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**Mr. Anthony Jeeva,**
**P.O. Box: 32,**
**Kandy, Sri Lanka**

# இரத்த வெள்ளத்தில் தெருவில் இழுத்து கறுப்பு மனிதர் கோரக் கொலை



கொலைக் குள்ளவாளி பில் கிங்

இந்த நூற்றாண்டின் மிக மோசமான இனத்துவேசக் கொலை கடந்த வருடம் ஜுன் மாதம் நடந்தது. இக்கொலை, நாகரீகம் பரவாத காட்டு மிராண்டித் தனமான மக்கள் வாழும் ஒரு பின்தங்கிய நாட்டில் நடக்கவில்லை. ஜனநாயகத்துக்கும், மனித உரிமைகளுக் கும் பெயர்பெற்ற அமெரிக்காவில், டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள கஸ்பர் என்னும் சிறிய நகரத்தில் நடந்தது.

மூன்று வெள்ளையர்கள் 49 வயதான கறுப்பர் ஒருவரை “பிக்–அப்” வான் ஒன்றின் பின் இரும்புச் சங்கிலியால் பிணைத்து மூன்று மைல் தொலைவான மணல் தெருவில் இழுத்துச் சென்றனர். அந்தக் கறுப்பரின் உடல் தெருவில் அரைந்து கொண்டு இழுத்துச் செல்லப் பட்டபோது, தனது உயிரைக் காப் பாற்றுவதற்காக அந்தக் கறுப்பர் தனது முழங் கைகளால் தெருவில் முட்டுக் கொடுக்க முயன்றார். முழங்கைகள் இரண்டும் சதையை முற்றாக இழந்து விட்டன. மதகு ஒன்றை வான் வேகமாக அணுகிய போது கறுப்பரின் தலையும், தோள் மூட்டும், ஒரு கையும் பிரிந்து தெருவில் விழுந்தன. தலையற்ற அந்தக் கறுப்பரின் சடலத்தை மறுநாள் பகல் கஸ்பர் நகர பொலிஸ் அதிகாரி தெருவில் கண்டெடுத்தார்.

அமெரிக்காவை மட்டுமன்றி உலகம் முழுவதையுமே கலக்கிய இந்த நிகழ்ச்சி கடந்த பெப்ரவரி மாதம் ஒரு முடிவுக்கு வந்தது. ஜேம்ஸ் பைர்ட் என்று அந்தக் கறுப்பரின் மரணத்துக்குப் பொறுப் பான 24 வயது இளைஞரான பில் கிங்குக்கு, டெக்ஸாஸ் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப் பளித்தது.

ஜேம்ஸ் பைர்ட்டின் கொலை எவ்வளவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது அவருடைய கொலையாளிக்குக் கிடைத்த தீர்ப்பும் ஆகும்.

**இந்த நூற்றாண்டின் பருமோசமான இனத்துவேஷ கொலை!**

டெக்ஸாஸ் மாநிலம் வெள்ளையர் களை பெரும்பான்மையாக் கொண்ட மாநிலம். ஜேம்ஸ் பைர்ட்டின் கொலை யை விசாரித்த யூரி சபையினரில் ஒருவர் மட்டுமே கறுப்பர். கறுப்பரைக் கொலை செய்த குற்றத்துக்காக வெள் ளையர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது டெக்ஸாஸ் மாநிலத் தில் இதுவே முதல் தடவை ஆகும்.

டெக்ஸாஸ் மாநிலத்தில் கொலைக் குற் றத்துக்காக மரண தண்டனை விதிக்கப் பட்டோருக்கு மன்னிப்பு வழங்கப்படுவ தில்லை. துரித தண்டனை வழங்குவதில் நம்புப வர்கள் டெக்ஸாஸ் மாநிலத்தவர் கள். கடந்த வருடம் கொலைக் குற்ற வாளி ஒருவரின் மரண தண்ட னையை வாழ்நாள் முழுவதுமான சிறைத் தண்ட னையாக மாற்று மாறு பாப்பாண்டவர் விடுத்த கோரிக்கையைக் கூட டெக் ஸாஸ் கவர்னர் புஷ் (முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஷின் மகள்) நிராகரித்தார்.

ஆகவே கறுப்பரைத் தெருவில் இழுத் துக் காட்டுமிராண்டித் தனமாகக் கொலை செய்த பில் கிங் மரணத்தைத் தழுவுவது நிச்சயம். அமெரிக்க மக்கள் இத்தீர்ப்பினால் மிகவும் நிம்மதி அடைந் திருக்கிறார்கள்.

ஆனால் பில் கிங்கை டெக்ஸாஸ் சிறைக் கூடம் கொல்லுவதுடன் இனத்துவேஷம் அமெரிக்காவில் ஒழிந்து போய்விடுமா? நிச்சயமாக இல்லை. உண்மையில் பில் சிங் அமெரிக்காவில் இன்று வேகமாகப் பரவிவரும் இனவெறுப்பு எழுச்சி க்கு ஓர் உதாரணமாகவே இருக்கிறார்.

அமெரிக்காவில் மத்திய வர்க்கத்தினரைச் சேர்ந்த இளை ஞர்கள் விரக்திய டைந்துள் ளார்கள். என்ன காரணத்தி னால்

மூன்று வெள்ளையர்கள் 49 வயதான கறுப்பர் ஒருவரை “பிக்–அப்” வான் ஒன்றின் பின் இரும்புச் சங்கிலியால் பிணைத்து மூன்று மைல் தொலைவான மணல் தெருவில் இழுத்துச் சென்றனர். அந்தக் கறுப்பரின் உடல் தெருவில் அரைந்து கொண்டு இழுத்துச் செல்லப்பட்டபோது, தனது உயிரைக் காப்பாற்று வதற்காக அந்தக் கறுப்பர் தனது முழங்கைகளால் தெருவில் முட்டுக் கொடுக்க முயன்றார். முழங்கைகள் இரண்டும் சதையை முற்றாக இழந்து விட்டன. மதகு ஒன்றை வான் வேகமாக அணுகிய போது கறுப்பரின் தலையும், தோள் மூட்டும், ஒரு கையும் பிரிந்து தெருவில் விழுந்தன. தலையற்ற அந்தக் கறுப்பரின் சடலத்தை மறுநாள் பகல் கஸ்பர் நகர பொலிஸ் அதிகாரி தெருவில் கண்டெடுத்தார்.

என்பதை சமூகவியல் நிபுணர்களால் சுட்டிக் காட்ட முடியவில்லை. குக்கிளக் ஸ்கான் எனப்படும் "வெள்ளை யர் மட்டும்" இயக்கத்தைப் போன்ற ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான முதல் சடங்காகவே பில் கிங்கும் அவருடைய இரண்டு நண்பர்களும் இந்தக் கறுப்பு மனிதரைக் கொன்றிருக்கிறார்கள்.

ஒரு சனிக்கிழமை இரவு தனியாக நடந்து வீடு சென்று கொண்டிருந்த ஜேம்ஸ் பைர்ட்டை இவர் வழி மறித்து, அடித்துக் கட்டி இழுத்தார்கள். வானில் கட்டி அவரை இரத்தம் ஒழுக, ஒழுக இழுத்துச் சென்றபோது வானின் ஒரு சில்லுக்குக் காற்றுப் போய்விட்டது. வானுக்குச் சில்லு மாற்றிய போதும் கறுப்பு மனிதரை உயிர் தப்ப விட இவர்களுக்கு இஷ்டமில்லை. மீண்டும் விரைவாக அவர்கள் வானை ஓட்டிச் சென்றபோதுதான் கறுப்பரின் தலை மதிலில் மோதி உடலிழுந்து பிரிந்து சிதறியது. அந்த மோதல்வரை கறுப்பர் உயிருடன் இருந்தார் என்று மரண விசாரணை

**மனிதனின் அடிப் படை உணர்வுகளில் மிருக உணர்வு ஆழப்பதிந்துள்ளது என்ற கருத்து உண்மை தானோ என்ற திகில் எம் மத்தியில் கிளம்புவதையும் தடுக்க முடியாதுள்ளது.**

செய்த அதிகாரி (ஒரு வெள்ளையர்) சாட்சியமளித்திருக்கிறார். இந்தக் கொலையை முன்னின்று நடத்திப் பில் கிங் அதைப் பற்றி மனவருத்தப்பட வோ, மன்னிப்புக் கேட்கவோ இல்லை. தடுப்புக் காவலில் இருக்கும்போது இவர் தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் "எங்களுக்கு என்ன நடந்தாலும், பரவாயில்லை, நாங்கள் சரித்திரம் படைத் திருக்கிறோம்" என்று எழுதியிருக் கிறார். அவருடைய உடலில் "தூக்கில் தொங்கும் கறுப்பு மனிதரின்" படம் பச்சை குத்தப்பட்டிருந்தது. அவ ருடைய வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் "இன்ரர் நெட்" எனப்படும் கம்பியூட்டர் 'நெற் வேக்' சேவையில் புதிய "வெள்ளையர் கள் மட்டும்" இயக்கங்கள் ஆரம்பித் திருக்கின்றன. ஒரு பில் கிங்குக்கு மரண தண்டனை விதிக்கப்படும் அதே சமயத் தில் ஆயிரக் கணக்கான பில் கிங்குகள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். ஹிட் லரைப் போன்ற தலைவராக வரவிரும் பும் இளைஞர்கள் இன்றைய அமெரிக் காவில் பலர். இருபத்தோராவது நூற்றாண்டை எட்டிப் பிடிக்கும் இச்சந்தர்ப்பத்தில், பொருளாதாரம் செழித்துக் கொழிக்கும் அமெரிக்காவில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுவதைப் பார்க்கும்போது எல்லா இனத்தவர்களும் மனம் கொதிப் படைகிறது. மனிதனின் அடிப் படை உணர்வுகளில் மிருக உணர்வு ஆழப்பதிந்துள்ளது என்ற கருத்து உண்மை தானோ என்ற திகில் எம் மத்தியில் கிளம்புவதையும் தடுக்க முடி யாதுள்ளது.


- ஷியாம்

# அண்ட வெளியிலிருந்து "ஸ்பொட்" ஒளி!

உலகின் முதலாவது செய்மதியைப் பூமி யைச் சுற்றிய பாதையில் அனுப்பிய பெருமை ரஷ்யா (முன்னாள் சோவியத் யூனியன்) வுக்கே உரியது. பொருளாதார ரீதியாக மிகவும் இக்கட்டான நிலைமை யில் ரஷ்யா தற்போது சிக்குண்டுள்ள போதிலும் அண்ட வெளியில் புதுமை சாதிப்பதற்கு இந்த நாட்டுக்கு உள்ள ஆர்வம் குறைந்து போய்விட்டதாகத் தெரியவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் பூமியின் இருண்ட பகுதி ஒன்றை அண்ட வெளி யிலிருந்து "ஸ்பொட்" ஒளி மூலம் பிரகா சிக்க ரஷ்ய விஞ்ஞானிகள் எடுத்த முயற்சி மிகவும் நவீனமானது.

"ஷினாம்யா — 2.5" என்று பெயரிடப் பட்ட இந்தப் பரீட்சார்த்த முயற்சியில், 82 அடி குறுக்களவுள்ள ஒளி பிரதி பலிக்கும் "கண்ணாடி" (உலோக, பிளாஸ்டிக் கலப்புப் பதார்த்தத்தினால் ஆக்கப்பட்டது) விண் வெளிக்கு அனுப் பப்பட்டது. சூரியனிலிருந்து வரும் வெளிச்சத்தை அண்டவெளியில் மிதக் கும் இந்தக் "கண்ணாடி" தெளித்துப் பூமிக்கு




அனுப்புவதன் மூலம், கஷாகஸ் தான் மாநிலத்திலிருந்து (ரஷ்யா) கனடாவிலுள்ள அல்பேர்ட்டா மாநிலம் வரையிலான நான்கு மைல் அகலமான நிலப்பரப்பைப் பிரகாசிக்கச் செய்ய லாம் என்று ரஷ்ய விஞ்ஞானிகள் நம்பி னார்கள். இப்படித் தெறிக்கப்படும் ஒளி சந்திரனின் ஒளியைப் போலப் பத்து மடங்கு பிரகாசமாக இருக்கும் என்றும் கணக்குப் போட்டார்கள்.

ஆனால் திட்டம் ரஷ்யர்கள் நினைத்தது போல நிறைவேறவில்லை. ரஷ்யர்களின் 82 அடி குறுக்களவுள்ள ஒளித் தெறிப் புக் கண்ணாடியை விண்வெளிக் கப்பலில் இருந்து அண்ட வெளிப் பாதையில் விடும்போது, இந்தக் கண்ணாடி மலரைப் போல விரிய வேண்டும்; ஆனால் இந்தக் கண்ணாடி பாதிப் பகுதி மட்டுமே விரிந்தது. விளைவு புயலில் அகப்பட்ட குடை போன்ற வடிவம். ஏன் இப்படி நடந்தது என்று ஆராய்ந்தபோது, கண்ணாடியின் ஒரு பகுதி, "அன்ரனா" கம்பியில் சிக்கிக் கொணடமை கண்டு பிடிக்கப்பட்டது.

ரஷ்யர்களில் எதிர்பார்த்ததுபோல கஷாகஸ்தானிலிருந்து அல்பேர்ட்டா வரையிலான நான்கு மைல் நிலப் பரப்பை வானிலிருந்து வெளிச் சப்படுத்த முடியாமற் போய்விட்டது. ஆனால் இந்த முயற்சி தோல்வி யடைந்தமை பற்றி வானில் அவதானி களுக்குச் சந்தோஷம். வானம் கறுப்பாக இருந்தால்தான் தாரகைகளைக் கண் காணிப்பது அவர்களுக்குச் சுலபம்!

- ஷியாம்


# துவாரகா



## Cash & Carry


சவுத்தோலில் தமிழர்களின் நன்மதிப்பை நீண்ட காலமாக
பெற்ற ஒரே தமிழர் களஞ்சியம்

உங்கள்
தேவைகள் அனைத்தையும் மிக மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்


**OFF LICENCE**

உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து இலங்கை
இந்திய உணவுப் பொருட்கள், பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள் பழைய புதிய ஓடியோ, சீடிக்கள் பழைய
புதிய வீடியோப் படங்கள் (வாடகைக்கு) நியாய விலையில்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.
அத்துடன் அனைத்து மதுபான வகைகளும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


**Open 7 days a week**

இலங்கை இந்திய தமிழ் வார மாத பத்திரிகைகள்
சஞ்சிகைகள் அனைத்துக்கும் நீங்கள் வேறெங்கும் போக
வேண்டியதில்லை.

## DUVARAKA
199, THE BROADWAY
SOUTHHALL, MIDDX

**TEL: 0181 813 9126**

# தந்தை பெரியாரும் தம்பி பிரபாகரனும்

தந்தை பெரியாரையும், தம்பி பிரபாகரனையும் சில துறைகளிலும், சில குணங்களிலும் நம்மால் ஒப்பிட்டுக் காண முடிகிறது.

ஒடுக்குமுறை எதிர்ப்பு, தமிழ்த் தேசிய உருவாக்கம் ஆகிய இரண்டும், இருவரையும் விட்டுப் பிரித்தெழுத முடியாத வரலாற்று நிகழ்வுகளாக உள்ளன.

அஞ்சாமை, எந்நிலையிலும் சமரசம் செய்து கொள்ளாத கொள்கைப் பிடிப்பு, எதிரிகளை வீழ்த்தும் சில தந்திர உத்திகளைப் பின்பற்றுதல் ஆகிய குணங்களிலும் ஒத்துப் போகின்றனர் இருவரும்.

இவ்வாறு கொள்கை ஒப்புமையும், குண ஒப்புமையும் இருவரிடமும் உள்ளமையால்தான், 'கற்றாரைக் கற்றாரே காமுறுதல்' போல, தமிழ்நாட்டில் உள்ள பெரியாரியப் பற்றாளர்களில் மிகப் பெரும்பான்மையோர், ஈழ விடுதலைப் போருக்கும், அப்போரை நடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவாக உள்ளனர்.



தந்தை பெரியார் கண்ட இயக்கம் 'சுயமரியாதை இயக்கம்'. 1926-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அவ்வியக்கத்தின் கிளைகளே, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என இன்று பல்வேறாக விரிந்து கிடக்கும் அனைத்துத் திராவிடக் கட்சிகளும்.

'சுயமரியாதை இயக்கம்' என்னும் பெயரே தன்மானப் போராட்டத்தில் உதித்த இயக்கம் என்னும் உண்மையை விளக்குகின்றது.

அப்படியானால், அக்கால கட்டத்தில், தமிழகம் தன்மானமற்றுக் கிடந்ததா? ஆம். அரசியலில் அடிமைப்பட்டுக் கிடந்தது, அந்நிய ஏகாதிபத்தியத்திடம். சமூகப் பண்பாட்டில், மொழியில் அடிமைப்பட்டுக் கிடந்தது, வடவாரியப் பார்ப்பனர்களிடம்.

அரசியல் விடுதலைக்காகப் போராடிய காங்கிரஸ் கட்சியோ, சமூக விடுதலை குறித்துக் கவலை கொள்ளாதிருந்தது. சாதி அடுக்கின் மேல்தட்டில் இருந்தவர்களே, காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத் தலைமையிலும் இருந்தமை, அதற்கான காரணமாக இருக்கலாம்.

எனவே, தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம், சமூக விடுதலையை முன்நிறுத்தியது. வடவர் எதிர்ப்பு, சாதி ஆதிக்க எதிர்ப்பு, ஆண் ஆதிக்க எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு ஆகியனவற்றை அடித்தளமாகக் கொண்டு பெரியாரியக்கம் செயல்படத் தொடங்கியது.

ஒரு பக்கத்தில் தன்மான இயக்கமாகவும், இன்னொரு பக்கத்தில் அறியாமை, மூட நம்பிக்கை ஆகியனவற்றை எதிர்க்கும் அறிவியக்கமாகவும் சுயமரியாதை இயக்கம் செயல்பட்டது. மானம் அறிவு என்னும் இரு முனைகளிலும் செயல்படத் தொடங்கியமையால்தான், ''மானமும், அறிவும் மனிதருக்கு அழகு'' என்னும் முழக்கத்தை முன்வைத்தார் பெரியார்.



சமூக விடுதலைதான், சுயமரியாதை இயக்கத்தின் முதன்மை நோக்கம் என்றாலும், அரசியல் விடுதலை இல்லாமல் அதனைப் பெற முடியாது என்பதைப் பெரியார் உணர்ந்தார். இந்தியாவின் ஒரு பகுதியாகத் தமிழ்நாடு உள்ளவரையில், இந்துப் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்தும், இந்தி ஆதிக்கத்திலிருந்தும் மீள முடியாது என்பது அவர் கருத்தானது. அதனால்தான், 1938 செப்டம்பரில், ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்னும் முழக்கத்தைப் பெரியார் முன்னெடுத்தார். ஜின்னாவின் பாகிஸ்தான் விடுதலைக் கோரிக்கைகூட, 1941-இல்தான் எழுந்தது. இந்தியாவிலேயே, தேசிய இனங்களின் உரிமை அடிப்படையில், தனிநாடு கோரிக்கையை முதன் முதலில் முன்வைத்தவர் தந்தை பெரியார்தான்.

சமூக விடுதலையில் தொடங்கி, அரசியல் விடுதலைக்கு வித்திட்டார் பெரியார். 'தமிழ்த் தேசியக்' கருத்தாக்கத்தின் தந்தை என்று அவரைக் கொள்ளலாம்.

ஈழத்தின் நிலையும், ஏறத்தாழ தமிழகத்தின்

நிலைதான். அங்கும் அரசியல் அடிமைத்தனமும், சமூக அடிமைத்தனமும் நிலவின. அந்நியர் ஆட்சி, சாதி ஆதிக்கம், ஆண் ஆதிக்கம் எல்லாம் பொதுவான கூறுகளாகவே இருந்தன. எனினும், அங்கு பார்ப்பன ஆதிக்கம் இருந்ததாகச் சொல்ல முடியவில்லை. அதனால், தமிழகத்தைப் போல், பார்ப்பனரல்லாதோர் இயக்கம் அங்கு உருவாக வேண்டிய தேவையற்றுப் போனது.

இச்சூழலில், அரசியல் விடுதலையே அங்கு உடனடித் தேவையானது. அதுவும் கூட, பல அடக்குமுறைகளுக்குப் பின்பே, அத் தேவை தெளிவாக உணரப்பட்டது.

1956-இல் 'சிங்கள மொழி மட்டுமே' சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அறவழிப்

**பெண்களும் போராளிக் கூட்டத்தின் ஒரு பகுதியினராக உள்ளமையால், எதிர்கால ஈழத்தில் ஆணாதிக்கம் அற்றுப் போகும் வாய்ப்பு உள்ளது.**




போராட்டங்களே அங்கு நடந்தன. பட்டினிப் போர் நடத்திய தமிழர்கள் மீது, காலிமுகத் திடலில் சிங்களக் காடையர்கள் வன்முறைத் தாக்குதல் நிகழ்த்தினர். அறநெறிக்கு எதிராக, வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட பின்பே, வன்முறையை வன்முறையால்தான் சந்திக்க முடியும் என்ற எண்ணம் இளைஞர்களிடையே உருவாயிற்று.

எழுபதுகளில், ஈழத்து இளைஞர்கள், மெல்ல மெல்ல ஆயுதம் ஏந்தத் தொடங்கினர். 76-இல் 'தமிழ் ஈழமே தீர்வு' என்று வட்டுக்கோட்டையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அத் தீர்மானத்தின் அடிப்படையில் அடுத்த வந்த தேர்தலில், தமிழ்க் கட்சியினர் போட்டியிட்டு, பெரும் வெற்றியும் பெற்றனர். தமிழ் மக்களின் ஒருமித்த கருத்து 'தமிழ் ஈழம்'தான் என்று தெளிவானது.

தமிழ் ஈழத்தை, அறவழியில் பெற முடியாது என்னும் உண்மை உறுதியான பிறகு, ஆயுதமேந்திய போராளிக் குழுக்கள் தோன்றின. பல்வேறு குழுக்கள் களத்தில் இறங்கினாலும், கால ஓட்டத்தில், இன்றும் சிங்கள இனவெறி ஆதிக்கத்தை எதிர்த்து நின்று போராடிக் கொண்டிருப்பவர்கள் விடுதலைப் புலிகளே என்பது தெளிவாகிவிட்டது.

புலிகள், அரசியல் விடுதலையை நோக்கியே போராடுகின்றனர் என்றாலும், சமூக விடுதலையும் அதன் உள்ளடக்கமாக உள்ளது. சாதி ஆதிக்க உணர்வு மிகுந்திருந்த ஈழ மக்களிடையே இன்று அது முற்றுமாய் அற்றுப்போய் விடவில்லையெனினும், பேரளவு தகர்ந்துள்ளதைக் காண முடிகிறது. அவ்வாறே, பெண்களும் போராளிக் கூட்டத்தின் ஒரு பகுதியினராக உள்ளமையால், எதிர்கால ஈழத்தில், ஆணாதிக்கம் அற்றுப்போகும் வாய்ப்பு உள்ளது.

சமூக விடுதலையில் தொடங்கிய பெரியாரின் இயக்கம் அரசியல் விடுதலைக்கும் வேரூன்றியது. அரசியல் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட பிரபாகரனின் புலிகள் இயக்கம், சமூக விடுதலைக்கும் வழி வகுத்துள்ளது.

எதிர்காலத் தமிழக, தமிழ் ஈழ வரலாறுகள், தந்தை பெரியாரையும், தம்பி பிரபாகரனையும் விட்டு விலகி நிற்க முடியாது என்பதற்கு இவை சான்றுகளல்லவா?

- தொடரும்

# படங்கள் பேசுகின்றன

தமிழகத்தில்-சிதம்பரத்தில் 18-வதுநாட்டியாஞ்சலி விழா மகாசிவராத்திரியன்று நடந்தபோது லண்டன் தமிழ் சென்ர் பொறுப்பாளரும்- 'சண்றைஸ்' தமிழ் வானொலி இணைப்பாளருமான டாக்டர் இரத்தினம் நித்தியானந்தன் நீண்ட வாழ்த்துரையை நிகழ்த்தினார். ''தமிழீழத்தின் தவப்புதல்வர்களில் ஒருவன் நான்'' என்று தன் வாழ்த்துரையில் தாய் மண்ணின் பெருமையை உரத்துக் கூறி- நம் மண்ணுக்குப் பெருமை சேர்த்தார் டாக்டர் நித்தி.





லண்டன் சவுத் பாங் பல் கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் 'கலைக்கதம்பம் 99' விழா சமீபத்தில் நடைபெற்ற போது கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. நடன ஆசிரியை திருமதி ராகினி ராஜகோபா லின் 'லண்டன் நாட்டியா லயா' நிறுவன மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் பலரையும் கவர்ந்தன. அந்த நடன நிகழ்ச்சியில் ஒரு கட்டம்.



சிதம்பரத்தில் நடந்த 18வது 'நாட்டியஞ்சலி-99' விழாவில் நாட்டிய மேதை பத்தஸ்ரீ பத்மா சுப்பிரமணியத்தின் நடன நிகழ்ச்சி சிறப்புற அமைந்தது. இவ் விழாவில் தமது நடன நிகழ்ச்சியை நடத்துவதைப் பெருமையாக நடனமணிகள் கருதி வருகின்றனர்.





லண்டன் சவுத் பாங் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் 'கலைக் கதம்பம் 99' விழாவில் 'மெலனியத்தில் தமிழ்' என்ற வில்லுப் பாட்டு இன்றைய இளைஞர்கள்- யுவதிகள் போக்கை மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்திருந்தன. அமிர்தசிகாமணிப்பிள்ளை யோகேந்திரன் எழுதி பிரதானமாக வில்லிசைத்த இந்நிகழ்ச்சியில் கனகசபாபதி பிரமாதீசன்- சிவலிங்கம் சிவலோகநாதன்- பரம்சோதி பிரபாகரன்- ராஜலிங்கம் பிரதீபன்- சதாசிவம் ரவீந்திரமார் ஆகியோர் பங்கு கொண்டனர். ரிஆர்ரி யின் 24 மணி நேர வானொலி- தொலைக் காட்சி நிறுவன இயக்கனர் நாயகம் எஸ். எஸ். குகநாதன் இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

உத்திரப்பிரதேசம் அயோத்தியில் தரைமட்ட மாக்கப்பட்ட பாபர் மசூதி சம்பந்தமான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உ.பி. முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் உள்ளிட்ட பல்வேறு பா.ஜ.க. பிரமுகர்களின் மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டுள்ளது.

அந்த இடத்தில் பாரம்பரியப் புகழ்மிக்க பாபர் மசூதி மீண்டும் கட்டப்பட வேண்டும் என்று ஒரு பிரிவினரும், பொது நினைவிடமாக காட்சிக்கு வைக்கப்பட வேண்டும் என்று மறுபுறமும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இந்து மதவாத அமைப்புகள் அந்த இடத்தில் 2001-க்குள் இராமர் கோயிலைக் கட்டியே தீரவேண்டும் என்று உறுதிபூண்டு அதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

விஸ்வ இந்து பரிஷத் என்ற அமைப்பு நடத்திய மாநாட்டில் பேசிய தலைவர்கள், ''எந்த உத்தரவுக்கும் நாங்கள் கட்டுப்படப் போவதில்லை'' என்கின்றனர்.

''எங்கே, எப்போது கோயில் கட்ட வேண்டும் என நீதிமன்றங்கள் முடிவு செய்ய முடியாது. மத ரீதியான பிரச்சினைகளில் நீதிமன்றங்கள் தலையிடக் கூடாது. இராமர் கோயில், பிரச்சினைக்குரிய அதே இடத்தில் கட்டப்படும். ஒரு அங்குலம் இடத்தைக்கூட விட மாட்டோம்'', என்று விஸ்வ இந்து பரிஷத் அமைப்பினர் வரிந்து கட்டிக் கொண்டு தூண் அமைத்தல், சிலை வடித்தல் என்று கட்டுமானப் பணிகளில் 25 சதவிகிதத்தை முடித்துவிட்டனர்.



## "2001-க்குள் இராமர் கோயில் கட்டுவோம்"

சுபமுகூர்த்த நாளுக்காக காத்திருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து தான் இந்து-முஸ்லீம் கலவரங்கள் ஆங்காங்கு வெடித்து, மதம் மனித உயிர்களை ஏராளமாக குடித்துக் கொண்டுள்ளது. இன்று வரை அந்த ரணத்திலிருந்தே கலவரங்கள் வெடித்துக் கொண்டுள்ளன.

இந்த நிலையில் சர்ச்சைக்குரிய இடத்தில் 'மீண்டும் 'கோயில் கட்டுவோம்' என்ற அறிவிப்பு மேலும் மதக் கலவரங்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடும் என்ற அச்சம் பரவத் தொடங்கியுள்ளது.

பா.ஜ.க. தன் கூட்டாளிகளின் செயலைக் கண்டும் காணாமல் விடக்கூடிய அபாயம் உள்ளது. ஏனெனில் மசூதி இடிப்பில் பங்கேற்ற முக்கிய புள்ளிகள் இன்றைய மத்திய அமைச்சரவையில் அமைச்சர்களாக உள்ளனர். எனவே மீண்டும் சர்ச்சைக்குரிய இடத்தில் இந்துப் பரிவாரங்களின் திரிசூலம் நீள்கின்ற பட்சத்தில் மதக் கலவரம் என்பது இந்தியாவை வன்முறைக் காடாகவே மாற்றி விடும்.

# எட்டாவது உலக அதிசயம்




''தமிழர்கள் ஒன்று கூடி ஒரு முடிவை எடுத்தது எட்டாவது அதிசயம்'' என்று மேடையில் பெருமிதத்துடன் தமிழக முதல்வர் கலைஞர் அறிவித்தார். அந்த எட்டாவது அதிசயம் நிகழ்ந்தது 'உலகத் தமிழ் இணைய மாநாட்டில்'!

'ஆங்கிலத்திற்கு அடுத்த படியாக கணிப்பொறிமயமான மொழி தமிழ்தான்' என்று திசைகளெங்கும், தேசங்களெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர்களுக்கான இனிப்புச் செய்தியை பிப்ரவரி 7, 8 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற மாநாடு உறுதி செய்து, உலகுக்கு அறிவித்தது.

தமிழ் மென்பொருள்களுக்கிடையில் (Software) இருந்த ஒன்றுக்கொன்று பொருந்தாத் தன்மையை நீக்கி ஒரே விதமான உள்குறியீட்டுத் தன்மையை உருவாக்கப் பல காலமாக விவாதித்து வந்த கணிப்பொறி அறிஞர்கள், இறுதியில் ஒரே மாதிரியான தமிழ் விசைப்பலகைகளை (Key Board) வடிவமைத்து, உலகெங்கும் பயன்படுத்தும் வகையிலான முறையை உருவாக்கியுள்ளனர். எனவேதான் 'தமிழ் மொழியின் வரலாற்றில் இது ஒரு மைல் கல்' என்று குறிப்பிட்டார் ஜேம்ஸ் செங்.

உலகத் தமிழ் இணைய மாநாட்டின் முடிவில் முதல்வர் கலைஞர் முக்கிய அறிவிப்புகளையும் வெளியிட்டார்.

✱ வெளிநாட்டிலிருப்பவர்கள் தமிழ் பயில்வதற்கு வசதியாக உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் (Virtual University) தொடங்கப்படும்.

✱ தமிழில் மென்பொருளை உருவாக்கும் வாய்ப்புகளை மிகுதிப்படுத்த தமிழ் மென் பொருள் வளர்ச்சி நிதியம் உருவாக்கப்படும்.

✱ தமிழ் மென்பொருள் ஆய்வுக்காக அண்ணா, பாரதியார் பல்கலைக் கழகங்கள் மற்றும் திருச்சி பிராந்திய பொறியியல் கல்லூரிகளில் ஆய்வு இருக்கைகள் அமைக்கப் படும்.

✱ தமிழகமெங்கும் 12,000 இன்டர்நெட் சமுதாய மையங்கள் அமைக்கப்படும்.

- இப்படியான அறிவிப்புகளால் அறிவியல் தடத்தில் தமிழ் அழுத்தமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி' என்ற தொன்மை அடையாளத்துடன், இனி 21-ஆம் நூற்றாண்டில் நுழையும் முன்பே 'உலக இணைய வலையோடு தமிழ் மொழியை இணைத்த தமிழன்' என்றும் மார்தட்டிச் சொல்லிக் கொள்ளலாம்.

ஈழகேசரிக்கு எமது இனிய வாழ்த்துக்கள்

**INTERNATIONAL COLLEGE OF ACCOUNTANCY**

ACCOUNTING * COMPUTING * TRAINING

Courses offered:

**ACCOUNTANCY**

**AAT-**
Association of Accounting Technicians
All levels

**CACA-**
Chartered Association of
Certified Accountants

**CIMA-**
Chartered Institute of
Management Accountants

**COMPUTER COURSES**

**ACP**
Association of Computer Professional
Certificate/Diploma
(Internally examined & moderated by ACP)
Short course - Word Processing
Spread Sheet
other popular Accounting Software Packages

**ENGLISH AS A FOREIGN LANGUAGE**

**EFS - Parts 1 & 11**

SATURDAYS SPECIAL CLASSES FOR
6 Years to 11 Years

Full/Part/Evening/Weekend/Revision/Course commence in Sept./Oct.&Jan./Feb.

**TUITION CENTRE**
**25 TRINITY ROAD, TOOTING,**
**LONDON SW17 7SQ.**
**Tel: 0181 672 0448**

# சினிமாவிற்கு கவிஞர்கள் தேவையில்லை

கவிஞர் ஈரோடு தமிழன்பன் தனக்கென தமிழிலக்கியத்தில் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருப்பவர். புதுக்கவிதை வரலாற்றை எழுதும்போது இவரை விட்டுவிட்டு எழுதிவிட முடியாது. மார்க்சியத்தை உள்வாங்கி, தமிழின மேம்பாட்டிற்காக எழுதுகின்ற பகுத்தறிவுவாதி. எழுபதுகளின் ஆரம்ப காலத்தில் 'வானம்பாடி' எனும் கவிதை இயக்கம் மிகவேகமாக மக்களிடம் கவிதையைக் கொண்டு சென்ற இயக்கம். அவ்வியக்கத்தில் இயங்கிய முக்கியமான ஒருவர் இவர். ஈழத்திற்காக என்றென்றும் குரல் கொடுப்பவர். நல்ல வளமான எழுத்திற்குச் சொந்தக்காரர். அவரிடம் நேர்காணலுக்காகச் சென்றிருந்தோம்.

இனி...



ஈரோடு தமிழன்பன்

**கவிதையைச் சொல்கின்ற முறையில் நீங்கள் பல்வேறு வடிவச் சோதனையைச் செய்து வருகிறீர்கள். இந்த வடிவ மாற்றம் குறித்துத் தங்களின் கருத்து என்ன?**

எந்த எழுத்தாளனும், படைப்புக்குள்ளாகத் தன்னைப் பரிசோதித்துக் கொண்டே வரவேண்டும். தனக்குத்தானே ஒரு விமர்சகனாகவும் மாற வேண்டும். ஒரே மாதிரியான படைப்புகள், ஒரே மாதிரியான வடிவங்கள், தொடர்ந்து இருக்குமானால் படைப்பில் தேக்கம் இருப்பதாகவே நான் கருதுகிறேன். பொருள் அளவிலும் தேக்கமடையலாம்; வடிவத்திலும் தேக்கமடையலாம். பொருள் என்று சொல்வது 'இலட்சியங்களில் மாறிச் செல்வதுதான் வளர்ச்சி' என்கிற அர்த்தத்தில் சொல்லவில்லை. ஆய்ந்தறிந்து ஒரு கொள்கையை ஏற்று அதிலிருந்து மாறாமலிருப்பது என்பது வேறு. இங்கு ஒரே மாதிரியாக எழுதிச் சலிப்படைகின்ற மாதிரிச் செய்வதைச் சொல்கிறேன்.

நெரூடாகூட 'ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் ஒவ்வொரு நெரூடா வருகிறேன்' என்று சொல்வான். 'பாம்பு சட்டையை உரிப்பது மாதிரி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மாதிரியாகச் செய்து கொண்டு வருகிறேன்' என்பான். 'வானம்பாடி' காலத்தில் இருந்த சொற்களின் மீதான அதிக விருப்பமெல்லாம் தணிந்து, ஒரு கருத்து நிலையில் நின்று, கருத்துக்களை எல்லாம் காலம் எப்படி உருவாக்குகிறது என்பதை உள்வாங்கிக் கொண்டு, அதற்கேற்ற முறையில்தான் எனது படைப்புகளை உருவாக்குகிறேன்.

**புதுக்கவிதைக்கு மாறிய பின்பு இசையால் அழகுபடுத்திச் சொல்வதை இழந்துவிட்டோம் என்பதை ஒரு இழப்பாக உணர்கிறீர்களா?**

கவிதையில் இசை அமைப்பு, ஓசை அமைப்பு என்பது பிரிவாகச் சொல்லலாம். இதை இரண்டையும் கடந்து பேச்சோசை என்பது ஆதிக்கமுற்று உரைநடை வந்தபிறகு இலக்கியத்தில் மாற்றம் ஏற்படுகிறது.

இதனால் காதுக்குக் கிடைக்கும் இசை இன்பம் இழந்து விட்டோம் என்பது உண்மைதான். ஆனால், ஏன் அப்படி நிகழ்ந்தது?

கருத்தை நேராகக் கொண்டுபோய் வாசகனிடம் சொல்வதற்கு, இந்த ஓசை தடையாக இருக்கிறது. மரபுக் கவிதை பெரும்பாலும் செவிப்புலனை மையமாக வைத்து எழுதப்படுவது. அது அகச் செவியாகவோ அல்லது புறச் செவியாகவோ இருக்கலாம். புதுக்கவிதை என்பது அகக் கண்ணை மையமாக வைத்து எழுதப்படுவது. அதனால் காட்சிகளாகக் கருத்தில் கொள்வதுதான் புதுக் கவிதையினுடைய நுணுக்கம். இங்கே ஓசையாக்குவதைவிட காட்சியாக்குவதே பிரதானமாக இருக்கிறது.

மனிதனின் நரம்புகளில் இசை பின்னிக் கிடக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு சொல்லப்பட்டு வந்தவை எல்லாம் மனிதனின் எழுச்சிக்குப் பயன்படவில்லை. பக்தி இலக்கியங்களாகவோ, தல புராணங்களாகவோ போய்விட்டது. அல்லது வள்ளல்களைப் பாடுவதாக இருந்தது. இதையெல்லாம் மாற்றி மக்களுக்குப் பயன்படும் வகையில் சொல்லும்போது அவர்கள் பேசுகிற விதத்திலேயே கவிதை சொல்வதென்பது தேவையாகிவிட்டது.

# SHIPPING - AIR FREIGHT TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS

## MAIN AGENT FOR AIRLANKA

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME**

# GLEN CARRIERS LIMITED



ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ

**Tel: 0181 740 8379/ 0181 749 0595**

**Fax: 0181 - 740 4229**

**Telex: 929657 Glenca G**

BONDED WAREHOUSE

LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14,

**TEL: 575576**

***மரபிலேயே புதிய முறையில் மக்களுக்கானதை பாரதி சொல்லவில்லையா?***

பாரதி சொன்னார். அவர் மக்களுடைய இசையில் பாடல்களைச் சொன்னாரேயொழிய அவரே உண்டாக்க வில்லையே. நடவு நடுகின்றவர்களுடையதும், ஏற்றம் இரைப்பவர்களுடையதுமான பாடல்கள் இலக்கியமல்ல; இலக்கியம் எனில் செப்பலோசை, துள்ளலோசை, தூங்கலோசையில் இருக்க வேண்டும் என்று இருந்த காலகட்டத்தில் பாரதி நாட்டுப்புற இசையைக் கையில் எடுத்தார்.

ஆனால் நாமோ, இது உரைநடைக் காலம் என்பதால் உரைநடையிலிருந்து புதுக்கவிதையை உண்டாக்குகிறோம். பாரதி காலத்திற்குப் பிறகு பெரும் மாறுதல் பெற்றிருக்கிறது.

விருத்தத்திலிருந்து பாரதி வேறுபட்டு சிந்து பாடினார் அதிலிருந்து சிறுமாற்றம் கண்டு பாரதிதாசன், பட்டுக் கோட்டை, தமிழ் ஒளி நிறைய பாடியிருக்கிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் அதிகம் பேரால் படிக்கப் படுவது உரைநடை வடிவம். அந்த வடிவத்தைக் கவிதைக்குப் பயன்படுத்தி னால் என்ன?

***தமிழ்க் கவிஞர்கள் தவிர்த்து உங்களை மிகவும் கவர்ந்த உலகக் கவிஞர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?***

ஒரு காலத்தில் ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த், பைரன், கீட்ஸ் போன்றவர்களைப் பிடிக்கும். அவர் களின் வீருணர்ச்சிக் கவிதைகளும், இயற்கை பற்றிய கவிதைகளும் மிகவும் கவர்ந்தன.

இதற்குப் பிறகு வால்ட் விட்மனின் கவிதைகள் பிடிக்கும். மனிதனைப் பாடுவேன், மனிதனைக் கொண்டாடு வேன், என்னை நான் கொண்டாடிக் கொள்வேன் என்ற தொனி என்னைக் கவர்ந்தது.

அவனது கவிதைகளில் ஜனநாயகப் பண்பு இருந்தது. மனிதனுடைய துயரங்கள், எழுச்சிகள் எல்லாம் இருந்தது. இதே போல நெருடாவின் கவிதைகள் என்னைக் கவர்ந்தன. அவரும் பல்வேறுவிதமான முயற்சிகளை எல்லாம் செய்தார். மிக எளிமையாக எழுதினார். அடுத்து, நிறைய இடதுசாரிக் கவிஞர்கள் எனக்குப் பிடிக்கும்.

***அமெரிக்கா சென்று வந்தீர்கள்... அங்குள்ள கவிதைப் போக்கு எப்படி இருக்கிறது...?***

நான் அங்குள்ள இன்றைய மாணவர்களின் கவிதைகளை வாங்கிப் பார்த்தேன். நவீன வாழ்க்கையுடைய தன்மைகளை யெல்லாம், அந்த மாணவர்கள் கவிதைகளில் வெளிப்படுத்து கிறார்கள். மரபுரீதியாக எழுதுபவர்களும் இருக்கிறார்கள். அதை உடைத்தெறிந்துவிட்டு எழுதுபவர்களும் இருக்கிறார்கள்.

முன்பெல்லாம் மூல ஆதாரமாக இங்கிலாந்தை நோக்கியே அமெரிக்கப் படைப்பாளிகள் இருந்தார்கள். விட்மனின் பாதிப்பு அமெரிக்கக் கவிஞர்களிடத்தில் இருப்பதைப் பார்க்கலாம். விடுதலை பெற்ற பிறகுகூட அவர்கள் தங்களின் மூதாதையரின் பூமியிலிருந்தவர்களை பின்பற்றி உள்ளார்கள். இப்போது அங்கும் மாறுகிறது.

***ஆரம்ப காலத்தில் உங்களிடம் மார்க்சியப் பார்வை மேலோங்கி இருந்தது. அதனையடுத்து திராவிட இயக்கங்களின் தாக்கம் உங்களிடத்தில் இருந்தது. இந்த அரசியல் மாற்றத்தை எப்படிப் பெற்றீர்கள்?***

இது எனக்கு மட்டுமல்ல, இது இடதுசாரி எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் அனைவருக்கும் நேர்ந்தது. முதலில் வர்க்க விடுதலையை வேண்டி நின்றோம். வர்க்க விடுதலை வந்தால் எல்லாம் மாறிவிடும் என்று நம்பியிருந்தோம். ஆனால் உலக வரலாறு நமக்கு அப்படிக் காட்டவில்லை. வர்க்க விடுதலையைக் காட்டிலும் தேசிய இன விடுதலையே நமக்கு முக்கியமாகப் பட்டது. அதற்கு முக்கியமான காரணம் ஈழ விடுதலைப்போர்.

அதனால், மார்க்சியம் என்பது முக்கியமில்லை என்று



சொல்லிவிட முடியாது. மனித வாழ்க்கையை அர்த்தப்படுத்தியதும், மனித வாழ்க்கையை மீட்டதும் மார்க்சியம். சர்வதேசக் கண்ணோட்டத்தைக் காட்டிலும் நமது மொழி, நமது இனம், நமது நாட்டின் துயரங்கள் நம்மை அதிகம் பாதிக்கும்போது ஒரு கட்டாயத் தேவை இப்படி எழுத வைக்கிறது. அதனாலேயே மார்க்சியத்தைக் கை கழுவி விட்டோம் என்பது பொருளல்ல. உடனடித் தேவை என்பது ஒன்றில்லையா? அதனால்தான்.

'வானம்பாடி' காலத்தில் 'சிங்களப் பாட்டாளிகளும், தமிழ்ப் பாட்டாளிகளும் ஒன்று சேர்ந்து விடுதலைக்காகப் போராட வேண்டும் என்று சொன்னதுண்டு. ஆனால் அதெல்லாம் பொய்யாகிவிட்டது.


அங்கே இனவாதம் மேலோங்கிவிட்டது. சிங்கள முதலாளியும், சிங்களப் பாட்டாளியும் இனவாதத்தின் மூலம் ஒன்றுபடுகிறார்கள். அப்படிப் பார்க்கும்போது தமிழர்கள் ஒன்று சேரவேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. முதலில் சொன்ன போக்கு வரலாற்றில் மாற்றம் கண்டு விட்டது.

***'வானம்பாடி' இயக்கம் தொடர்ந்து இயங்காமல் போனதற்கு என்ன காரணம்?***

வசந்தத்தின் இடி முழக்கம் கேட்பதுபோல எழுபதுகளின் தொடக்கத்தில் தமிழகத்தில் ஒரு மாற்றம் வந்தது. வட மாநிலங்களில் நக்சல்பாரிகள் இயக்கம் தலைதூக்கியது. இந்தியா முழுக்கப் புரட்சி ஏற்பட்டு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான ஆட்சி ஏற்படும், என்பதன் முன்னோட்டமாக நக்சல்பாரிகள் இயக்கம் வளர்ந்தது.

நாம் எதிர்பார்த்ததுபோல எதுவும் நடக்கவில்லை. இந்த நிலையில், வானம்பாடி இயக்கத்திற்குள் இருவேறு கருத்து நிலவின. மார்க்சியம் பற்றி எழுதலாம், பேசலாம்; ஆனால் அரசியல் நிலைப்பாடு எதுவும் எடுக்க வேண்டாம் என்று ஒரு சாராரும், அரசியல் நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்று மற்றொரு சாராரும் கூறினர். அதனால் கருத்து வேறுபட்டு 'வானம்பாடி' இயக்கம் முடங்கியது.

***எதிர்பார்த்து வந்த திராவிட இயக்கங்களின் போக்கு பற்றி என்ன உணர்கிறீர்கள்?***



எதிர்பார்ப்பு முற்றிலும் தோல்வி அடைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. தமிழ்நாடு என்று பெயர் வைத்ததும், சுயமரியாதைத் திருமணம் சட்டபூர்வமாக்கியதும் திராவிட இயக்கத்தின் சாதனை என்று சொல்லலாம். ஆனால் நாம் எதிர்பார்க்கின்ற அளவு சாதனை படைக்கவில்லை என்பதற்குக் காரணம், அரசியல் நிலைமைதான். இது எல்லா இயக்கங்களுக்கும் நேர்ந்து விட்டது. மார்க்சிய இயக்கங்களுக்கும் இந்த நிலமை இருப்பதைப் பார்க்கலாம்.

***புலம் பெயர்ந்த தமிழர்களின் தமிழ் மொழி, இன உணர்வு குறித்தும் இங்குள்ளவர்களின் உணர்வு குறித்தும் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?***

இங்கு வாழ்பவர்களே புலம் பெயர்ந்த மக்கள் போல வாழ்கிறார்கள். புலம் என்பதை அறிவு என்று பொருள் படுத்திச் சொன்னால் அறிவு பெயர்ந்த மக்களாகவே இங்குள்ளவர்கள் இருக்கிறார்கள். ஏனெனில் இன்னொரு நாட்டின் மொழி, இன்னொரு நாட்டினுடைய இசை, நடை உடை பாவனைகளையெல்லாம் வைத்துக் கொண்டு இந்த மண்ணில் வாழ்கின்றவர்களைப் பார்க்கும்போது, இவர்கள் புலம் பெயர்ந்தவர்களைப் போலவே இருக்கிறார்கள்.

ஆனால் வெளிநாட்டில் இருப்பவர்களுக்குத் தன்னுடைய அடையாளங்களை இழந்துவிடக் கூடாது என்கிற கவலை நிறைய இருக்கிறது. எந்த நாட்டுக்காரனாக இருந்தாலும் அவனவன் நாட்டு அடையாளங்களை இழக்காமல்தான் வாழ்கிறான். அதற்குப் பல்வேறு முறையான வழிமுறை களைக் கையாள்கிறார்கள்.

தமிழர்கள் எல்லா வீட்டிலும் திருவள்ளுவர் படத்தை மாட்டியிருக்கிறார்கள். கூடுமான வரை தமிழர் உடை உடுத்துகிறார்கள். தமிழ்நாட்டு ஒப்பனை முறைகள் பின்பற்றுவது, வீட்டில் தமிழையே பேசுவது இப்படிப் பல சொல்லலாம். ஆனால் தமிழர்களுக்குப் பிறக்கும் குழந்தை அமெரிக்கக் குழந்தையாகி விடுகிறது. அங்கு பிறக்கும் போதே அமெரிக்கக் குடியுரிமை கிடைத்து விடுகிறது. அப்போது அது அமெரிக்கக் குழந்தையாகிவிடுகிறது. அது வளர்ந்து வரும் சூழலில் 'நான் எதற்கு தமிழ் படிக்க வேண்டும்?' என்று கேட்கிறது.

ஏனெனில் வெளியே எங்கும் தமிழ் கிடையாது. இதற்கு பதில் சொல்ல முடியாமல் அவர்களும் திணறுகிறார்கள். சூழலே தமிழ்ச் சூழலாக மாற்றினால் இதற்கு தீர்வு கிடைக்கலாம்.

இதையெல்லாம் காப்பாற்ற தமிழக விழா கொண்டாடுவது, இசை நிகழ்ச்சி நடத்துவது, திருக்குறள் வகுப்பெடுப்பது... இப்படி பல்வேறு முயற்சிகள் எடுக்கிறார்கள். பல்கலைக் கழகங்களில் தமிழில் ஆய்வு செய்கின்ற அளவிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கும் போராட்டமாகத்தான் இருக்கிறது.

***நீங்கள் திரைப்படத்தில் பாடல் எழுதினீர்கள். ஒன்றிரண்டு பாடல்களோடு ஏன் விலகிவிட்டீர்கள்?***

அந்தத் துறையில் அவர்களிடம் வளைந்து குழைந்து வாய்ப்புக் கேட்பது பிடிக்கவில்லை. என் திறமை மீது நம்பிக்கை இருந்து அவர்கள் ஏற்றுக் கொண்டால் பரவாயில்லை. அதில் கூட என் விருப்பத்திற்கு ஏற்றதாக இருந்தால்தான் நான் ஏற்றுக் கொள்வேன்.

திரைப்படத் துறைக்கு நல்ல கவிஞர்கள் தேவையில்லை. நல்ல பாடலாசிரியர்கள்தான் தேவை. பாடல் பாடுகின்றவனுக்குச் சமமாகத்தான் பாடலாசிரியனைப் பார்க்கிறார்கள். பாடல் பாடுகின்றவனுக்குப் பெரிய இலட்சியம் இருக்க வேண்டும் என்பதெல்லாம் இல்லை. எந்தப் பாடலையும் பாடிவிட்டுப் போகலாம்.

தமிழ்த் திரைப்படத்தைப் பொறுத்தவரை, படைப்பாளிகள் மேல் நம்பிக்கை கிடையாது.

***ஈழ இலக்கியங்கள் குறித்து...?***

ஈழ இலக்கியங்கள் நம்பிக்கையின் குரலாக இருப்பதைப் பார்க்கிறேன். படைப்புகளைத் தவிர ஆய்வுகளும் தமிழுக்குப் பெருமை தருகிற மாதிரி இருக்கிறது. நல்ல கவிஞர்கள், நல்ல சிந்தனையாளர்கள், நல்ல விமர்சகர்கள் நமக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

ஆய்வாளர்கள் மீது எனக்குப் பெரிய நம்பிக்கை இருக்கிறது. கைலாசபதி, சிவத்தம்பி, நித்யானந்தம் போன்றவர்கள் நிறைய தாக்கம் உண்டாக்கி இருக்கிறார்கள்.

**இங்கே பெரும்பாலும் தனிமனித உணர்வை வெளிப்படுத்துகிற குரலாகவே இருக்கிறது. ஈழத்தில் இருக்கும் போர்க்குரல், அந்தத் தீவிரம் இங்கு இல்லையே...?**

சாவின் முனையில் அவர்கள் வாழ்க்கையை நடத்து கிறார்கள். போராட்டத்திற்கிடையே எழுத்து பிறக்கிறது. அதனால் அந்த வேகம் இருக்கிறது. அங்கேயும் விமர்சனங்கள் உண்டு. தளத்தில் இல்லை, வெளியில் சென்று பாதுகாப்பாக இருந்து கொண்டு பாதுகாப்பாக படைப்புகள் செய்கிறார்கள் என்கிற விமர்சனம் அங்கும் உண்டு.

இங்கு திட்டமிட்டு போராட்ட சூழலில் இருந்து எழுத்தை நகர்த்திவிடும் சூழ்ச்சியும் நடக்கிறது. இயக்கம் சார்ந்து, ஒரு கொள்கை சார்ந்து எழுதுகிற எழுத்து எழுத்தே அல்ல என்ற குரலும் உண்டு. இவர்கள் சத்தமாக பேசுகிறார்கள், இது பிரச்சாரத்தன்மையோடு இருக்கிறது என்று புறக்கணித்து விட்டு, முனகலாக, முணுமுணுப்பாக சொல்லப்படுகிற எழுத்துக் களை சிலர் பிரதானப்படுத்துகிறார்கள். சில பத்திரிகைகளும் இதைச் செய்கின்றன. அவற்றின் நோக்கம் இலக்கியத்தை வளர்ப்பதுமல்ல; கவிதையை வளர்ப்பது மல்ல. உண்மையான இலக்கியவாதியை மக்களின் கவனத்திலிருந்து தள்ள வேண்டும் என்பதற்காகவே அப்படி இல்லாத இலக்கியத்தை இதுதான் சிறந்த இலக்கியம் என்று சொல்கிற போக்கும் உண்டு.

இதனால், இலக்கியத்தில் தனிமனித பாத்திரமே வேண்டாம் என்று சொல்லவில்லை. தனி மனிதனின் வலிகள் இலக்கியமாக்கப்பட வேண்டும். ஆனால் போராட்டத் தளத்திலிருந்து தனி மனிதனை விலக்கி வைக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுவதை என்னால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

**இந்த வடிவங்களெல்லாம், இந்த உத்திகளெல்லாம் காலாவதியாகிவிட்டது என்கிறீர்களா?**

மாற்றம் என்பது நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். இவர்கள் சொல்கிற வடிவம் மட்டும் நிரந்தரமானதா என்ன?

**தமிழ் வழிக் கல்வி வேண்டும் என்று நூறு தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருக்கிறார்கள். இது குறித்து...?**

இதை மிகத் தீவிரமாக பிரச்சாரம் செய்ய வேண்டும். அமைப்புகள் கடுமையாக வேலை செய்ய வேண்டும். தமிழாசிரியர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் முன்னெடுத்துச் செயல்பட வேண்டும். இதையெல்லாம் பெரிதாக எடுத்துச் சொல்ல வேண்டும். ஏப்ரல் மாதம் உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்குள்ளாகவே இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன்.

மக்கள் மத்தியில் இதுபோய்ச் சேரவேண்டும். மொழி இல்லாமல் மக்கள் ஒரு நாள்கூட வாழ முடியாது. ஆனால் மொழிக்காக ஒருநாள்கூட வாழ மறுக்கிறார்கள். இதைச் செய்ய வேண்டும். மக்களின் அன்றாடப் பிரச்சினையில் இதை ஒன்றாகப் பார்க்க வேண்டும்.

நூற்றுக்கு நூறுபேர் மொழி பேசுகிறார்கள். ஆனால் மொழி குறித்து அக்கறைப்படுவது மட்டும், இரண்டு விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கிறது. இது ஏதோ அவர்களின் பிரச்சினை என்று ஒதுங்குகிறார்கள். இதைத் தவிர அவலம் என்ன இருக்கிறது. தமிழர்களைப் போல மொழியுணர்வு அற்றவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

**சந்திப்பு : குருநாதன்**

# பா.ஜ.க. ஓடம் கரையேறுமா?

பா.ஜ.க. அரசு ஊசலாடிக் கொண்டிருக்கிறது. எந்த நாளில்... எப்போது... யாரால் கவிழும் என்பதைக் கணிக்க முடியாதபடி ஆங்காங்கே இருந்து கத்தி வீசப்படுகிறது. வாஜ்பாய் அரசு பிழைத்துப் பிழைத்துச் செத்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் பக்கம் வந்தால் ஜெ. அம்மா, அந்தப் பக்கம் போனால் மம்தாம்மா... என்று அடிபட்ட மத்தளமாய் பா.ஜ.க. அரசு ஆடிக் கொண்டுள்ளது. இப்போது புதிதாய் அரியானா லோக்தள் தலைவர் ஓம்பிரகாஷ் சவுதாலா தன்னுடைய எம்.பி.க்கள் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். அண்மையில் உயர்த்தப்பட்ட விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகளுக்கு கண்டனம் தெரிவித்து மம்தா, ஜெயலலிதா, பஞ்சாப் முதல்வர் பாதல், அரியானா ஓம் பிரகாஷ் சவுதாலா ஆகியோர் குரலெழுப்பினர்.

ஜெயலலிதா குரலை அடக்க தனிநீதிமன்றத்தில் தலையிட்ட வாஜ்பாய் சட்டத்தை வளைத்து ஜெ. பாதக் கமலங்களில் சமர்ப்பிக்க, அடம்பிடித்த ஜெ. அமைதியாகிவிட்டார். மம்தா மந்திரிசபை விஸ்தரிப்பு உள்ளிட்ட பேரங்களுடன் மௌனமாக்கப்பட்டுள்ளார். ஆனால் அரியானாவின் சவுதாலா, விலைவாசி உயர்வை திரும்பப் பெற்றேயாக வேண்டும். இல்லையெனில் ஆதரவு வாபஸ் என்று அறிவித்து விட்டார். எனவே மெஜாரிட்டியை இழந்திருக்கும் வாஜ்பாய் அரசு, சவுதாலாவிடம் சமாதான தூதுவரை அனுப்பியுள்ளது. பேச்சுவார்த்தை என்ற பெயரில் பேரம் தொடர்கிறது.

கூட்டணிக் கட்சிகளின் முதுகுவலியும், திருகுவலியும் போதாதென்று வாஜ்பாய் கழுத்துக்கு கத்தி வைப்பது பா.ஜ.க.வின் பரிவாரங்களே!


நாடு முழுவதும் மதமாற்றத்தைத் தடுக்கப் போகிறோம் என்று பரிவாரமான பஜ்ரங்தள் அமைப்பினர் கிறிஸ்துவ பாதிரியாரை எரிப்பதும், கிறிஸ்துவ பெண் துறவிகளை பாலியல் வன்முறைக் குட்படுத்தி, கொலை செய்வதுமாக... நாடெங்கும் சிறுபான்மை யினருக்கு எதிரான கொலை வெறியைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

சங் பரிவாரங்களான ஆர்.எஸ்.எஸ்., பரிஷத் உள்ளிட்ட இந்து மதவெறி அமைப்புக்கள், அரசாளும் பா.ஜ.க., தங்கள் சொல்படி கேட்கவில்லை. அதன் கடிவாளம் தங்கள் கையில்தான் இருக்க வேண்டும் என்ற நெருக்குதல் தந்து கொண்டுள்ளனர். மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி, இந்த அணிக்கு தலைமை தாங்குகிறார்.

இதற்கு நேர் எதிர் அணியில் இருக்கின்ற வாஜ்பாய் அணி, ஒரு புறம் உட்கட்சி பரிவாரங்களின் நெருக்குதல், மறுபுறம் கூட்டணிக் கட்சிகளின் கூத்துக்களென்று சமாளிக்க முடியாமலும், செயல்பட முடியாமலும், வெறுமனே நாட்களை நகர்த்திக் கொண்டு வருகிறது.

வெளிப்படையாகவே பல்வேறு நெருக்குதல்களிலிருந்து மீள முடியாமல் தவிக்கும், பா.ஜ.க.வின் நிலையை கணக்கிட்டுப் பார்க்கையில் எந்த வகையிலும்... பல்வேறு வெளிப்படையான இரகசிய பேரங்கள் மூலமும் பா.ஜ.க. தன்னுடைய அரசைத் தக்க வைத்துக் கொள்ளும். ஆனால், நீதி, நேர்மை, மனிதாபிமானம் இவைகள்தான் பா.ஜ.க. ஆட்சி முடிவதற்குள் செத்துப் போயிருக்கும்.

# Anglo Asian Mini Mart



Specialists in Sri Lankan Foods & Off Licence

வெம்பிளியில் முதலாவது தமிழர் களஞ்சியம்
என்ற பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கும்
தனித்துவமான தமிழ் கடை.
அனைத்து தேவைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அனைத்து உணவுப் பொருட்கள், கடலுணவு
வகைகள், பச்சைப் பசேல் என்ற மரக்கறி
வகைகள், இனிய பாடல்கள் நிறைந்த ஓடியோ
சீடிகள், இலங்கைத் தமிழகப் பத்திரிகைகள்
சஞ்சிகைகள் அனைத்தும் எம்மிடம் கிடைக்கும்.



**Off Licence**
**Open Seven days**
**a Week**

## அங்கலோ ஏசியன் மினி மாற்

**K. THAYAPARAN**

513 HIGH ROAD
WEMBLEY, MIDDX, HA0 4AG

**Tel: 0181 900 2451**
**Mobile: 0958 566 198**

# நிசப்தம்

**- இளம்பிறை**

# உனக்குப் பிறகான நாட்களில்

**- பச்சியப்பன்**

**வெளியீடு: பொன்னி**
**20, கண்ணகி தெரு, மடிப்பாக்கம், சென்னை - 91.**
**ஒவ்வொன்றும் விலை ரூ. 25/-**

1998-இல் நவம்பரில் ஒன்றும் டிசம்பரில் ஒன்றுமாய் அடுத்தடுத்து வெளியான இரண்டு கவிதைத் தொகுப்புகள். இளைய கவிஞர்களின் முதல் முயற்சி. படைத்தவர் ஒருவர் ஆண், ஒருவர் பெண் என்றாலும் படைப்புகள் பெரும்பாலும் ஒரேதளத்தில் பயணிக்கின்றன. சோகம்... சோகம்... சோகம். இருவருக்குமான வாழ்க்கைச் சோகங்களே விஞ்சி நிற்கின்றன அவர்களின் படைப்புகளில். சுயதரிசனத்திலிருந்து பிறந்தாலும் அவற்றில் சமுதாய அவலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது பாராட்டத்தக்கது.

**நிஜமாயிருக்கிறேன்**
**முரணானவள் என**
**முகம் சுழிக்கிறார்கள்**

என்று இளம்பிறையும்,

**காதலை ஏற்காத வீட்டில்**
**என்ன இருக்கு**
**மேலும் பேச**
**போகாமல் விட்டாலாவது மீதமாகும்**
**இருநூத்தி நாப்பது ரூபாவும்**
**கொஞ்ச நஞ்ச பாசமும்**

என்று பச்சியப்பனும் இசைக்கும் சோக கீதங்களே தொகுப்புகளெங்கும் விரவிக்கிடக்கின்றன.


இந்தச் சோகங்கள் வாழ்க்கையில்பட்ட அடியில், வலியில் இருந்து பிறந்தவைதான். காயத்தில் வழியும் குருதியில் வெளிப்படும் வலி, கவித்துவத்துடன் ஆடம்பரமற்ற எளிய சொற்களில் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வலிகள் இந்த இரண்டு பேரின் சொந்த வாழ்க்கையில் இருந்து வந்தாலும் இந்தச் சமுதாயத்தில் பெரும்பாலானவர்க்குப் பொருந்தக் கூடியதே. இக்கவிதைகளை இன்றைய சமுதாய அவலத்தின் பதிவுகள் என்று சொல்லலாம். அவலங்களைப் பதிவு செய்வதோடு தங்கள் கடமை முடிந்ததாகக் கவிஞர்கள் எண்ணிவிடக் கூடாது.

நம்பிக்கைத் துளிகளை இளம்பிறை கவிதைகளில் எங்கும் காணமுடியவில்லை 'தொந்தரவு' எனும் கவிதையில்,

**இருள் தேவை**
**பிடித்தமும் கூட**
**தெரிந்தால்...**
**தூர உட்கார்ந்து**
**ஒப்பாரி**
**பாடிச் செல்லுங்கள்**
**ஆறுதலாக இருக்கும்.**

என்கிறார்.




தொடர்ந்தும் தாக்குதல்கள். கணவனால், இயக்கத்தால், பக்கத்து வீட்டுக்காரர்களால் இப்படி எங்கு நோக்கினும் குத்திக்கிழிக்கும் ஈட்டிகளேஇருந்தபோதும் அதைக் கண்டு பயந்து அலறி அடங்கி ஒடுங்கும் போக்கு தான் தெரிகிறதே தவிர உதறி எழுந்து நெஞ்சுயர்த்தி முஷ்டி மடக்கித் தயாராக வேண்டும் என்பதைக் கவிஞர் உணரவே இல்லை போலும்.

**பிரிவின் அதிர்வுகளைப்**
**பேசவும் பயந்து**
**அதட்டலால் அடங்கி**
**கண்ணீரோடு தாய்**
**நமக்கோ**
**நிலா நெடுந்தொலைவில்**
**இருக்கும் ஆதங்கம்**
**எப்பவும்.**

இளம்பிறை, நிலா... நிலா அல்ல எனும் இந்தக் கவிதையின் மூலம் என்ன சொல்ல வருகிறார்?

தன் தேசம் அடிமைப்பட்டுக் கிடக்கிற போது தன்னுடைய மக்களின் உரிமைகள் மறுக்கப்படும் பொழுது சமூக அக்கறையுள்ள ஒருவன், தேசம் முழுவதையும் தன் வீடாகப் பார்க்கும் ஒருவனைத் தாய்ப்பாசம் காட்டி கட்டிப்போட எண்ணுகிறாரா?

பெண்ணைப் பேச பெண்ணே எழு என்றார் கவிஞர் அறிவுமதி. எழும் ஒன்றிரண்டு பெண்களும் போர்க்குணமற்று சோகங்களைப் பதிவு செய்வதோடு நின்று விடுகிறார்கள்.

பச்சியப்பனின் இது உனக்கு மட்டுமான வரிகள், என் வயல் இதுதான் போன்ற ஒரு சில கவிதைகளில் மட்டுமே தன்னம்பிக்கையும் போராட்ட குணமும் தொனிக்கின்றன.

**எங்களுக்கான போரை**
**நாங்களே நடத்திக் கொள்கிறோம்**
**நீ எமக்கு**
**எதிரியாகவே இரு**

இப்படி அதிரடியாய்ப் பறைசாற்றிக் களம் இறங்குவதுதான் இந்த நாட்டில், இன்றைய சமுதாயத்தில் தேவையான ஒன்று.

கவிதைகள் ஒரு வரையறைக்குள் அடங்காதவைதான். அது இந்த அண்டம் முழுவதும் பற்றிப் படரும் ஓடித் திரியும் சுதந்திரம் உள்ளதுதான். அதற்கு சட்டதிட்டங்களும் எல்லைக் கோடுகளும் வரைந்து அதற்குள் அடங்கச் சொல்வது அறிவீனம் என்பது உண்மைதான்.

ஆனாலும், புலம்பலை விட்டுவிட்டுப் போர்வாளை எடுக்க வேண்டிய வேளை இது என்பதைப் படைப்பாளிகளும் உணர வேண்டும்.

இக் கவிஞர்களின் முதல் முயற்சியே இத்தொகுப்புகள். இதில் தங்களுடைய வலிகளை அழுத்தமாகவும் அழகியலோடும் பதிவு செய்திருப்பதோடு நிறுத்திக் கொண்டுள்ளார்கள். இனி வரும் காலங்களில் போர்க் குணத்தோடு புறப்படுவார்கள் என்று நம்புகிறோம்.

**- தமிழ்க்கொடி**

# பிரதமர்களின் பேருந்து விளையாட்டு

காலை வாரிவிடும் உட்கட்சி 'ஜனநாயகம்', கவிழ்க்கக் காத்திருக்கும் கூட்டணிக் கட்சியினரின் 'தோழமை'- இவைகளிலிருந்தெல்லாம் மீண்டு கரையேறி நாற்காலியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்தப் பேருந்துப் பயணம் மேற்கொண்டு உள்ளார்.



உட்பட பல்வேறு பிரபலங்களும், நூற்றுக்கும் மேற்பட்ட பத்திரிகை-தொலைக்காட்சியினரும் இதை பதிவு செய்திருக்கின்றனர்.

கொஞ்சம் விமானம், மிச்சம் ஹெலிகாப்டர் என்று எல்லைக்கு 37 மைல்கள் முந்திப் போய் பேருந்தில் ஏறிக் கொண்டுள்ளார் பிரதமர் வாஜ்பாய். லாகூரிலுள்ள ஆளுநர் மாளிகையில் உதவியாளர்கள் எவருமின்றி பேசியுள்ளனர். காஷ்மீர் பிரச்சினை, அணு ஆயுத குறைப்பு, தெற்காசிய நாடுகளுக்கிடையேயுள்ள சிக்கல்கள் குறித்தெல்லாம் விவாதித்து நல்ல முடிவு

பயணம் எல்லாம் விளம்பரத்துக்கு வேண்டுமானால் பயன்படலாம். உண்மையில் இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவு வரவேண்டுமெனில் காஷ்மீரைவிட்டு பாகிஸ்தானும், இந்தியர்களும் வெளியேறி அதனைக் காஷ்மீரிகளிடமே விட்டு விட வேண்டும். இரு நாடுகளுக்கு மிடையே நல்லுறவு என்பது செயல்பாடுகளிலும், விட்டுக் கொடுத்தலினாலுமே வருமே அல்லாமல் விளம்பரச் செயல்களினால் அல்ல.

இந்தப் பயணப் பேச்சு வார்த்தை நல்ல தொடக்கமாகக் கூட

சுதந்திரம் பெற்றதைப் பொன் விழாவாக கொண்டாடுகிற வேளையில், எல்லையிலே இரு நாட்டு துப்பாக்கிகளும் துப்புகின்ற வேட்டுச் சத்தங்களுக்கும் பொன் விழாதான்! போட்டி போட்டுக் கொண்டு அணு ஆயுதங்களுக்கென்று இரு நாட்டு பட்ஜெட்டிலும் ஒதுக்கப்படும் கோடிகளுக்குக் கணக்கில்லை. அறிக்கை மழை, போட்டி அணுகுண்டு மிரட்டல்கள் என்று 'பகை' புகைச்சல் நிற்காத வேளையில் இருநாட்டு பிரதமர்களும் எல்லையில் நின்று கை குலுக்கிக் கொண்டு நல்லுறவுக்கு அடித்தளம் அமைப்பதைப் பாராட்டலாம்தான். ஆனால் நெஞ்சுக்குள்ளே புகையும் பகையுடன் பரஸ்பர கை குலுக்கல்கள் சமாதானத்தைக் கொண்டு வந்து விடுமா?

தில்லியிலிருந்து லாகூருக்கு விடப்படும் பேருந்தில், பிரதமர் வாஜ்பாயே பயணம் செய்து எல்லையில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பை சந்திக்கிறார். உடன் டில்லி முதல்வர் ஷீலா தீட்சித், பஞ்சாப் முதல்வர் பாதல்

களையும் எட்டியிருப்பதாக அறிவித்துள்ளனர்.

"இரு நாடுகளுக்கும் இடையில் நம்பிக்கையின்மையும், சந்தேக மனப்பான்மையும் உள்ளன. இந் நிலையில் இரு நாட்டு பிரதமர்களின் பேச்சுவார்த்தையில் நல்ல முடிவுகளுக்கான வாய்ப்பில்லை" என்கிறார் பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் பெனாசீர்.

கடந்த பத்தாண்டுகளில் (அதாவது 89-இல் இராஜீவ் லாகூர் சென்றார்) பாகிஸ்தான் செல்லும் முதல் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தான்.

ஒரு பிரதமர் பாகிஸ்தான் செல்லவே பத்தாண்டு கால இடைவெளியை பகைமை உண்டாக்கியிருக்கிறதென்றால், சாதாரண குடிமகனுக்கு நிலைமை சகஜமாக இன்னும் எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு சந்திப்பு, சாலை

அமையலாம். ஆனால் அது நம் வெற்று ஆசைதான். மதத்தை உசுப்பி விட்டு மனித உயிர்களைக் குடிக்க நினைப்பவர்கள் மன அமைதியையும், மனித குல அமைதியையும் நிலையாய் இருக்க விடமாட்டார்கள்.

இந்த முதல் பேருந்து வாஜ்பாய் போவதாலும், பிரபலங்கள் அணி வகுப்பதாலும் பலத்த பாதுகாப்பு காணப்படும். பின்பு பயணிகள் போகிற போது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். அரசியல் ரீதியாக இருநாடுகளுக்கிடையில் நெருக்கமான செயல் ஒற்றுமைகள் வருவதற்கு முன்பு வேண்டாம் இந்த பேருந்து விளையாட்டு. உயிர்களைப் பலியாக்கி உறவுகளை மேம்படுத்த முடியாது.

அரசியல் அரங்கம்
செய்திகள் தொகுப்பு:
இரா.சுப்பிரமணி

# பிள்ளை வளர்ப்பு: வெளிநாட்டில் வில்லங்கம் பிடித்த வேலை!

கனடாவிலிருந்து
பொ.கனகசபாபதி

"இதென்னடா வில்லங்கம் பிடிச்ச வேலை. நான் என்ரை பிள்ளைக்கு அடிச்சால் அவைக்கு என்ன வாம்" — இது ஒரு தாயா ரின் வேதனைக் குரல்.

மகன் பாடசாலையில், தனக்குத் தாய் அடிப்பதாகக் கூறி விட்டான். உடனே பாடசாலை நிர்வாகம் பிள்ளைகட்கு உதவும் பிரிவுக்கு அறிவிக்கு முன்னர், தாயாருடன் ஒருமுறை இது பற்றிக் கதைக்க விழைந்தது. தாயினது விரக்தி அவரது விடையிலே பிரதிபலித்தது.

இன்னொரு வேடிக்கையான சம்பவம்: பெண்குழந்தை ஒன்று பாடசாலையில் சேர்ந்து இரண்டு வாரங்களே ஆயின. ஒரு காலில் பிளாஸ்திரி போட்டபடி பிள்ளை பாடசாலை செல்கிறது. அதைக் கண்ணுற்ற ஆசிரியை காலில் என்ன காயம் என்கிறா. பிள்ளைக்கு ஒன்றும் விளங்க வில்லை. பேந்தப் பேந்த முழிக்கிறது. "அம்மா அடித்தா வா?" என்கிறார் ஆசிரியை. பிள்ளை "ஆம்" எனத் தலையாட் டுகிறது.

"அம்மா எப்போதும் அடிப் பாவா?" "எப்பவும் அடிப்பா, எனக்கும் அடிப்பா, தம்பிக்கும் அடிப்பா" எனத் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் ஜமாய்த்துவிட் டது பிள்ளை. பாடசாலை நிர்வாகம் தன் கடமையைச் செய்தது. பிள்ளை துணைபுரி அனுகூலருக்கு அறிவிக்கப் பட்டது. அவர் வீடு சென்ற தாயாருடன் கதைத்த பொழுதே உண்மை தெரிந்தது.

பிள்ளையின் காலில் ஒரு சொறி. பிறாண்டி விட்டது. இரத்தம் கசியத் தொடங்க, அதனைக் கண்ணுற்ற தாயார் ஒரு பிளாஸ்திரியைப் போட்டு விட்டார். நிகழ்ச்சி பாடசாலை யிலே திசைமாறி விட்டது. வீட்டிலே தமிழில் வினாவிய பொழுது அதுவே உண்மை யெனப் பிள்ளையும் ஒப்புக் கொண்டது. பின் ஏன் பாடசா லையில் அப்படிச் சொன்னாய் என்ற பொழுதே, பிள்ளை யின் அவலநிலை தெரிந்தது. "எனக்கு ஆங்கிலத்தில் சொல்ல முடியவி ல்லை. முழித்தேன். அப்பொழுது ஆசிரியை "அம்மா அடித்தாவா?" என்று கேட் டார். 'ஆம்' என்றேன் என்றது. பிள்ளை யோ புலம் பெயர்ந்து வந்த அந்நிய மண் ணுக்குப் புதிது. அதற்குத் தெரியுமா நிலைமை இப்படிச் சிக்கலாகும் என்று.

வேறொரு சுவையான சம்பவம்: யாழ்ப் பாணத்திலிருந்து பெற்றோ ருடன் கனடா வந்த ஒரு சிறுவன் கனிஷ்ட பாடசாலையில் சேர்க்கப் பட்டான். அவனது கால்களில் நிறையத் தழும்பு கள். ஆசிரிய ருக்கு இதனைக் கண்டதும் நெஞ்சில் "குறு குறு" உணர்வு. மாணவ னுக்கோ ஆங்கிலம் அட்சரம் கூடத் தெரியாது. மதிப்பீடு செய்யப் போன வரை ஆசிரியர் இரகசியமாக அழைத்து கொஞ்சம் நன்றாகத் தமிழில் பேசி உண்மையை அறியுங்கோ; பையனுக்குக் கால் முழுக்க சிகெரட்டாலே சுட்ட அடை யாளம் நிறைய உண்டு. என அழாத குறையாக வேண்டினார். சிறுவன் சத்தியமாக இது காலில் புண் வந்து மாறிய அடையாளம்" என்கிறார். ஆசிரியருக்கோ நம்பிக்கை சிறிதும் ஏற் பட வில்லை.

பின்னர் சிறுவனின் தந்தை அதை விபரமாக விளக்கினார். அவர் வசித்து வந்த கிராமமோ சற்றுப் பின் தங்கியது. இன்றைய சூழ் நிலையிலே அது முற்றாக வே வைத்திய வசதி அற்று இருக்கி ன்றது. இதனால் காலில் வந்த புண்களுக்கு நல்ல வைத்தியம் செய்யாமையால் அவை சீழ்பட்டு மாறிய பொழுது வந்த தழும்புகள், சுட்டதால் ஏற்பட்ட வடுக் கள் போன்று காட்சி தந்தன.

இவை யாவற்றையும் இங்கு சொல்வதற் குரிய காரணம், பொதுவாகவே இங் குள்ள பாடசாலை ஆசிரியர்கள் நம்ம வர்கள் பிள்ளைகளைக் கூடுத லாகத் தண்டிப்பவர்கள் எனக் கருதுகிறார்கள்.

ஒருபிள்ளைக்குப் பொறுப்பாக உள்ள வர்கள் அப்பிள்ளையின் உடலிலே பாதிப்பை ஏற்படுத் துவதற்கக் காரண மாக

**இங்குள்ள நம்மில் பலர் உளப்பாங்கிலே, உணர்வின் பிரதி பலிப்பிலே, சிந்தனையின் வெளிப் பாட்டிலே செய்முறையின் நெறிகளிலே இன்னும் ஈழத் தமிழர்களாகவே உள்ளோம். ஆனால் எம் குழந்தைகளோ மிக வேக கதியிலே வெளிநாட்டவர்களாக வே மாறி விட்டனர். அது அவர்கள் குற்றமல்ல. வாழும் சூழல் அப்படி. அவர்கள் உணர்விலே, மனப் போக்கிலே, பாவனையிலே ஏற்படக்கூடிய மாற்றம், எமக்கும் அவர்கட்குமிடையே பாரதூரமான கலாசார இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே பல விஷயங்களிலே, சிறப்பாக ஒழுங்காட்சி சம்பந்தப்பட்டவற்றிலே எமது அணுகு முறையில் மாற்றம் வேண்டும்!**

இருந்தாலோ அல்லது பிள்ளை யினைப் பராமரிப்பதிலும் சீராட்டு வதிலும் பாதுகாப்பதிலும் தவறி ழைத்தா லோ அப்பிள்ளையினை நிந்தித்த குற்றத் திற்கு பெற்றோர் ஆளாகின்றனர்.

ஒரு சமயம் சிறுவன் ஒருவன் பாட சாலையில் மாணவர்களை முரட்டுத் தனமாக அடிக்கிறான். ஆசிரியர் களைக் கூட விட்டு வைக்கிறான் இல்லை என்ற முறையீடு. நிர்வாகம் பெற்றோரை அழைத்து அது பற்றிக் கலந்துரை யாடுகிறது. "இவனுக்கு நன்றாகச் சாப்பாடு கொடுப்பதால் தான் இப்படி நடக்கிறான். இனிமேல் காலையில் சாப்பாடு கொடுக்காம லேயே பாடசா லைக்கு அனுப்ப வேணும்" என்பது அவர்கள் கூற்று. இது போதும்! வேறு வினை வேண்டாமே!

இது அந்த நேரத்தில் தமது இயலா மையால் வந்த ஆத்திரத்தின் பிரதி பலிப்பே இக்கூற்று என்று எமக்குத் தெரியும். பிள்ளைகளைப் பட்டினி போடும் அளவிற்கு கொடிய வர்களாக நம் பெற்றோர் என்றுமே இருந்ததில்லை. பாடசாலை நிர்வாகம் அதனை ஏற்க வேண் டுமே! இரண்டும் இரண்டும் நான்கு என்றே கணக்குப் போடுவார்கள் அவர்கள். பிள் ளையை நிந்தித்தலின் ஒரு அங்கமாகவே மன உணர்வில் பாதிப்பு ஏற்படுத்துதல் கணிக்கப் படுகிறது. அப் பாதிப்பின் பிரதிபலிப்பு எப்படி இருக்கு மென்பதைச் சட்டமூலம் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. தீவிர மான விசாரம், உற்சாக மின்மை, ஆக் ரோஷ நடத்தை, ஒதுங்கியிருத்தல், தனக் கே ஊறு விளைவித்தல் ஆகியவை உண ர்வுப் பாதிப்பின் பிரதி பலிப்புக்களே.

எனவே பாடசாலை நிர்வாகம் நிந்த னைக்கு ஆளாக்கப்பட்டி ருக்கிறது என ஐயமறத் தீர்மானிப் பதில் குறை ஒன்றும் காண முடியாது.

இங்கே நாம் ஒன்றினைப் பூரணமாக உணர வேண்டும். இங்குள்ள நம்மில் பலர் உளப்பாங்கிலே, உணர்வின் பிரதி பலிப்பிலே, சிந்தனையின் வெளிப் பாட்டிலே செய்முறையின் நெறி களிலே இன்னும் ஈழத் தமிழர்களாகவே உள் ளோம். ஆனால் எம் குழந்தைகளோ மிக வேக கதியிலே வெளி நாட்டவர்களாக வே மாறி விட்டனர். அது அவர்கள் குற்றமல்ல. வாழும் சூழல் அப்படி. அவர்கள் உணர்விலே, மனப் போக்கிலே, பாவனையிலே ஏற்படக் கூடிய மாற்றம். எமக்கும் அவர்கட் குமிடையே பார தூரமான கலாசார இடைவெளி யினை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே

> **நண்பனாய் நின்று நாளாந்தம் பிள்ளையின் அனுபவங் களைப் பகிர்ந்து தேவையான வழிகாட் டலை நாசூக்காக நடைமுறைப்படுத் தலுக்குப் போதிய சாதுரியம். பொறு மை, அவகாசம் தேவை.**

பல விஷயங்களிலே, சிறப்பாக ஒழுங்காட்சி சம்பந்தப்பட்ட வற்றிலே எமது அணுகு முறையில் மாற்றம் வேண்டும்! புதுமை வேண்டும்! கட்டுப்பாடு வேண்டும். ஆனால் கண்ணிய மாகச் செய்ய வேண் டும். கண்டிக்க வேண்டும். தண்டிக்க வேண்டும். ஆனால் நிந்திக்கக் கூடாது. உணர்விலே உறைக்கக் கூடியவாறு சொல்ல வேண்டும். ஆனால் உணர்வு எழுச்சியிலே பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது. சங்கடமாயிருக்கிறதா? ஆம்! எமது பாரம்பரியம் பிள்ளைக ளுக்கு மாத்திரமல்லாது, பேரப் பிள்ளைகளுக்கு மாகச் சேர்த்து வைக்கும் பாரம்பரியம்.

தன்னை ஒறுத்துத் தன் பிள்ளை களின் வாழ்வில் இன்பம் காணும் கள்ளமில்லா வெள்ளை உள்ளம் எமது உள்ளம்.

தன் வாழ்விலே தன்னால் சாதிக்க முடி யாததைத் தன் பிள்ளை யாயினும் சாதிக்க வேண்டுமெனக் கங்கணம் கட்டி நின்று ஆரம்ப முதலே அந்த உணர்வினைப் பாலுடன் சேர்த்து ஊட்டும் பேராசை நிறைந்து நிற்கும் மனம் எமது மனம்.

நமது உளப்பாங்கிலே ஓர் அத்தியாவசிய மான மாற்றத்தை ஏற்படுத்துதல் அவசிய மாகிறது. தந்தை என்கிற அந்தஸ்து, அதிகாரி என்ற நிலையிலிருந்து ஆலோ சகர் நிலைக்கு உயர்ந்தோ, தாழ்ந்தோ மாறுதல் அவசியம். நண்பனாய் நின்று நாளாந்தம் பிள்ளையின் அனுபவங் களைப் பகிர்ந்து தேவையான வழிகாட் டலை நாசூக்காக நடைமுறைப்படுத் தலுக்குப் போதிய சாதுரியம். பொறு மை, அவகாசம் தேவை.


குழந்தைப் பராயத்திலே மிகவும் ஒட்டி யுறவாடும் தந்தைமார் பிள்ளைகள் கட்டிளமைப் பருவம் வந்ததும் ஒரு இடைவெளியினை அதிக குடும்பங் களில் ஏற்படுத்திக் கொள்கின்றனர். இது வரவேற்கத் தக்கதல்ல. எமது நாட்டில் இருப்பதிலும், இங்குதான் பிள்ளை களுக்கு உணர்வெழுச்சி ஆதரவு மிக அதிகம் தேவை. பெற்றோர் அதனை வழங்குதல் அவசியம். தினசரி பிள்ளை களுடன் கலந்துரையாடுதல் அவசிய மானது. அதே சமயம் அவர்களுடைய உணர்வுகளுக்கும் மதிப்பளித்து அவர் களையும் சமமானவர்களாகப் பாவித்து நடப்போமானால், சொல்லினா லேயே அவர்களை நல்ல வழிப்படுத்த முடியும்.

இதைவிடுத்து கோழி செட்டை க்குள் குஞ்சை வைப்பது போன்று நாம் வாழ முனைந்தால் "என் பிள்ளை" "என் பிள்ளை" என அன்பு சொரிந்து அதன் பிரதிபலனாகச் சில உரிமை களைப் பெற முனைந்து பெற்றார் என்கிற தகமையை முழுமையாக நிலைநாட்ட விழுந்து நிற்போ மாயின் இது ஒரு வில்லங்கம் பிடிச்ச வேலையாகவே அமையும்.

நன்றி

- கனடா தமிழர் தகவல்

# கள்ளழகர்



குண்டுவெடிப்புகளை மைய மாக வைத்து கதை அமைத்திருக்கும் படம். கடந்த ஆண்டு தமிழகத் தையே உலுக்கி அதிர வைத்த கோயம்புத்தூர் வெடிகுண்டு வெடிப்பே படத்தின் மையக் கரு எனலாம்.

சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் மனிதர்களை மனிதர்களே கொலை செய்வது கொடுமை. நாம் அனைவரும் இந்தியனாக ஒன்றுபட வேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார் கள்ளழகர்.

மதுரை அழகர்கோயில் திருவிழா வின்போது கோயிலுக்குள் புதிதாக சில குருக்கள் வருகிறார்கள். யானை யுடன் ஒரு பாகன் வருகிறார். அவர் களுடன் பிரச்சினையும் வருகிறது.

ஒரு முஸ்லிம் குடும்பம். அம்மா, அப்பா, அண்ணன், தங்கை என நான்கு பேர் கொண்ட அளவிலான அழகான குடும்பம். தங்கைக்குத் திருமணம் நடக்கிறது. திருமணத்திற் குப் பிறகு தங்கையின் கணவன் தீவிரவாதி என்பதை அறிந்து அவனைப் பின்தொடர்ந்து சென்று நான்கு பேர் கொண்ட ஒரு குழுவைக் கண்டுபிடித்து அவர்களை வீட்டுக் குள்ளேயே சிறை வைத்து விடுகிறான் அண்ணன்.

அந்த நான்கு பேர் மூலமாக மதுரை அழகர் கோயில் திருவிழாவின்போது குண்டுவைத்து மக்களைக் கொல்லும் திட்டத்தை அறிந்து அதைத் தடுக்க யானைப் பாகன் வேடமிட்டுப் போகிறான் அண்ணன். பல்வேறு சிரமங்கள், முயற்சிகளுக்குப் பிறகு குண்டுகளைக் கண்டுபிடித்து வெடிக்காமல் செய்து மக்களைக் காப்பாற்றுகிறார்கள்.

இதில் குண்டு வெடிப்பவர்கள் குருக்கள் வேடம் புனைந்து கொண் டும் அதைத் தடுக்க வருகிறவர் யானைப்பாகன் வேடம் போட்டுக் கொண்டும் ஊருக்குள் வருகிறார்கள்.

முஸ்லிம் இளைஞர்கள் பணத் துக்கு ஆசைப்பட்டு, காஷ்மீரை ஒட்டியுள்ள அந்நிய நாட்டினரிடம் பயிற்சி எடுத்துக் கொண்டு, உள் ளூரில் இருக்கும் முஸ்லிம் இளைஞர் களைச் சேர்த்துக் கொண்டு பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடும் ஒரு இந்துப் பண்டிகையின்போது குண்டுகளை வெடிக்கச் செய்து அவர்களை கொலை செய்யும் முயற்சியை ஒரு முஸ்லிம் இளைஞனே முன்னின்று தடுத்து நிறுத்துகிறார். அன்பான அப்பாவின் மரணச் செய்தி கேட்டும் அப்பாவின் இறுதிச் சடங்குக்குக் கூட வராமல் மக்களைக் காப்பாற்றும் பணி யிலேயே ஈடுபடுகிறார்.

சமுதாய சிந்தனைகள் கொஞ்சமும் அற்றுக் கண்டமேனிக்குப் படம் எடுப்பார்கள்; கவர்ச்சி காட்டுவார்கள்; இரட்டை அர்த்த வசனம் பேசுவார் கள். இதையெல்லாம் பார்த்து நொந்து போய் கொஞ்சம் சமுதாய அக்கறையுடன் படம் எடுக்கக் கூடாதா என்று கேட்டால், இதோ எடுக்கிறோம் என்று இது மாதிரியான சிக்கலான, உணர்வுப் பூர்வமான பிரச்சினையை அரைவேக்காட்டுத் தனமாகக் கதையாக்கி வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். இவர்கள் படம் எடுப்பதால் மத நல் லிணக்கம் ஏற்படுவதற்குப் பதிலாக வெறுப்பு மூளும் சூழலே அதிகம்.

நாட்டில் நடக்கும் அல்லது நடந்த ஒரு நிகழ்வினை மையமாக வைத்துப் படம் எடுக்கும்போது அந்நிகழ்வின் அடி முதல் நுனி வரை அலசி அதற்கு என்ன தீர்வு எனச் சொன்னால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக் கும். அதைவிட்டு விட்டு மொட்டை தாசன் குட்டையில் விழுந்தது போல ஒரு படத்தை எடுத்து வைத்திருக் கிறார்கள்.

படம் முழுவதும் இந்தியன் இந்தியன் என்ற பிதற்றல் வேறு. சகிக்க முடியவில்லை. முஸ்லிம் இளைஞர்கள் முழுவதும் வெடி குண்டைக் கட்டிக் கொண்டு சுற்று வதைப் போலவும் அதைத் தடுத்து நிறுத்த இது மாதிரி ஒரு படம் எடுத்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் படம் எடுத்திருக்கிறார்கள் போலும், முஸ்லிம் இளைஞர்களை முஸ்லிம் குடும்பத்தைவிட்டே திட்டித் தீர்ப்பது அவர்களுடைய புத்திசாலித் தனத்தைக் (!) காட்டுகிறது.

விஜயகாந்த் படங்கள் தொடர்ந்து தோல்வியடைந்து வரும் நேரத்தில் இது போன்ற இந்து பிரச்சாரப் படத்தில் நடித்து தன் சரிவு தொடர மேலும் வழிவகுத்துக் கொண்டார்.

படத்தின் இயக்குநர் பாரதி, நரிக்குறவராக நடித்து தன் நடிப்பு ஆசையைத் தீர்த்துக் கொண்டுள்ளார். பார்ப்பதற்குத் தான் பொறுமை வேண்டும்.

புதுமுகம் லைலாவும், மணிவண் ணனும் நன்றாகச் செய்திருக்கிறார்கள். மணிவண்ணன் பேசும் கத்தரி வசனங் கள் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டு கின்றன.

ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சானின் ஒளிப்பதிவுக்காகப் பாராட்டலாம். பாடல்கள் சுமார் ரகம்.

இது போன்ற சின்னச் சின்ன சிறப்பம்சங்களையும் தாண்டி படத் தின் கதை வந்து முன்னால் நின்று வெறுப்பை உண்டாக்குகிறது.

நீங்கள் பணம் பண்ணுவதற்காக இது போன்ற படம் பண்ணாமல் இருக்க வேண்டும் என்று திரைத் துறையினரைக் கேட்டுக் கொள்ள வைத்துள்ள படம்.

- இளவரசன்


# திரைச் சிதறல்கள்

பாக்யராஜ் நடித்த 'இன்று போய் நாளை வா' படம் இந்தியில் ரீமேக் செய்யப்படுகிறது. தமிழில் பாக்யராஜ் நடித்த வேடத்தை இந்தியில் ஏற்பவர் அப்பாஸ். இந்தப் படத்தில் கதாநாயகி யாக நக்மா நடிக்கிறார்.



வெள்ளித்திரையில் ஒரு காலத் தில் நம்பர் ஒன்னாக இருந்த ஐஸ்வர்யா (லட்சுமியின் மகள்) இப்போது சின்னத்திரையில் தன் கவனத்தைத் திருப்பியுள்ளார். சுரேஷ் மேனன் இயக்கும் 'சின்னச் சின்ன ஆசை' தொடர் உட்பட பல தொடர்களில் நடித்து வருகிறார்.

'ஹவுஸ்ஃபுல்' படம் முழுக்க முழுக்க திரையங்கில் படமாக்கப் பட்டது அல்லவா? அதே போன்று இன்னொரு படமும் முழுக்க முழுக்க



திரையரங்கில் எடுக்கப்பட்டு வருகிறது. படத்தின் பெயர் அமர்க்களம். இந்தப் படத்தில் அஜீத் ஹீரோவாக நடிக்கிறார்.

'பொண்ணு வீட்டுக்காரன்' படம் வர்த்தக ரீதியாக வெற்றி யடைந்ததைத் தொடர்ந்து பி. வாசு - சத்யராஜ் கூட்டணி மீண்டும் இணை கிறது. 'மலபார் போலீஸ்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கும் இந்தப் படத்தில் சத்யராஜ் பாலக்காட்டுக்காரராக மலையாளம் பேசி நடிக்கிறார்.

ஷங்கர் இயக்கும் 'முதல்வன்' படத்தின் நாயகியான மனீஷா கொய்ராலா, பேசியபடி கால்ஷீட் கொடுக்கவில்லை யாம். அதனால் லைலாவை இன்னொரு கதாநாயகியாக ஒப்பந்தம் செய்துள்ளார் ஷங்கர்.

சேரன் இயக்குவதாக அறிவிக்கப்பட்ட 'என் இனிய காதலர்களே' படம் படப்பிடிப்பு துவங்கும் முன்பே கைவிடப் பட்டு விட்டது. காரணம்? சேரனுக்கும், தயாரிப்பாளர் பிரமிட் நடராஜனுக்கும் ஏற்பட்ட தகராறுதான். அதனால் அதே படத்தை வேறு நிறுவனத்துக்கு இயக்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறார் சேரன்.

பார்த்திபன் நடித்த 'காக்கை சிறகினிலே', 'கல்யாண சுந்தரம்' படங்கள் இன்னும் வெளிவரவில்லை. இந்தப் பட்டியலில் மேலும் படங்கள் சேர்ந்துவிடக் கூடாது என்பதால் இனி அதிகப் படங்களை ஒப்புக் கொள்வ தில்லை என்று முடிவு செய்திருக்கிறார் பார்த்திபன்.

'கள்ளழகர்' படத்தின் படுதோல்வியினால் விஜய்காந்தை வைத்து எடுக்கவிருந்த புதிய படத்தை காலவரையின்றி

ஒத்திவைத்து விட்டார் தயாரிப்பாளர் சூப்பர்குட் ஆர்.பி. சௌத்ரி.

மணிரத்னத்தின் புதிய படத்தில் கதாநாயகன், கதாநாயகியாக புதுமுகங்கள் நடிக்க இருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்டதும் பிரபல இளம் கதாநாயகன்கள் மணிரத்னத்துக்கு தூதுவிட ஆரம்பித்திருக்கிறார்கள்.

'முதல்வன்' படத்தில் வொயிட் டி.வி. என்ற தொலைக்காட்சி நிருபராக நடிக்கிறார் அர்ஜுன். ரபிபெர்னார்ட் போல் அரசியல் தலைவர்களை சூடாக பேட்டி காணும் வேடம். படத்தின் பிற்பகுதியில் முதல்வராகிறார் அர்ஜுன்.

'படையப்பா' படம் திட்டமிட்ட படி தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் வெளிவர வேண்டுமே என்ற கவலை





யில் இருக்கிறார் ரஜினி. காரணம்... ஏ.ஆர். ரஹ்மான் குறித்த நேரத்தில் பின்னணி இசை சேர்ப்புப் பணியை முடிக்காமல் இருந்துவிடுவாரோ! என்ற பயம்தான்!

அகத்தியனும் சின்னத்திரைக்கு வர இருக்கிறார்! ரபிபெர்னார்ட் தொடங்கும் 'ஸ்கை டி.வி'க்காக இரு நூறு பகுதிகள் கொண்ட மகா தொடரை இயக்குகிறார். இத்தொடருக்கு கதை எழுதுபவர் ஜெயகாந்தன்.

'பூமகள் ஊர்வலம்' என்ற படத்தில் அடக்க ஒடுக்கமான வேடத்தில் நடிக்கிறார் ரம்பா. இந்தப் படம் வெற்றிபெற்றால் இனி தொடர்ந்து புடவை கட்டி நடிக்கவும் முடிவு செய்திருக்கிறாராம்.

நகைச்சுவை நடிகர் விவேக் இயக்குநராக வேண்டும் என்ற ஆசையில் முயற்சியை மேற்கொண்டார். உடனடி பலன் கிடைக்கவில்லை. எனவே இயக்குநராகும் ஆசையை மூட்டை கட்டிவைத்துவிட்டு நடிப்பில் கவனம் செலுத்தப் போகிறாராம்.

முன்னாள் கவர்ச்சி நடிகை டிஸ்கோ சாந்தி, ஸ்ரீஹரி என்ற தெலுங்கு நடிகரை திருமணம் செய்து கொண்டு ஹைதராபாத்தில் செட்டிலானார். இப்போது அங்கே நடனப் பயிற்சிப் பள்ளி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்.

- கோடம்பாக்கன்

'**கா**தல் கவிதை' படத்தின் மூலம் தமிழகம் வந்திருக்கும் மும்பை நடிகை... இஷா! முதல் படத்திலேயே முத்திரை பதித்தார்- நடிப்பில்! ரசிகர்களும், பத்திரிகைகளும் இஷாவுக்குப் பாராட்டுப் பரிவட்டம் கட்ட, இப்போது முன்னணி நடிகை வரிசையில் இடம்பிடித்திருக்கிறார்.

ஏவி.எம். ஸ்டுடியோவில் 'என் சுவாசக் காற்றே' படத்தின் பாடல் காட்சியில் ஆடிக் கொண்டிருந்த இஷாவைச் சந்தித்தோம்.

அப்போது நிகழ்ந்த உரையாடலின் தொகுப்பு இது...



# "தமிழில் நடிக்கவே விருப்பம்"

## இஷா கோபிகர்

''தமிழில் இப்படியொரு இடம் கிடைக்கும் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை. நாம் ஒன்று நினைக்கிறோம். நடப்பது வேறொன்றாக இருக்கிறது. மும்பையில் பிசினஸ் மேனேஜ்மெண்ட் படித்துக் கொண்டிருந்தேன். படிப்பை முடித்துவிட்டு ஏதாவது ஒரு கம்பெனியில் உயர் பதவியில் அமர வேண்டும் என்று நினைத்தேன். எதிர்பாராமல் நடந்த ஒரு சம்பவம் என் வாழ்க்கையையே மாற்றிவிட்டது. பெமினா அழகுப் போட்டியில் கலந்து கொண்டேன். மிஸ் டேலண்ட் பிரிவில் எட்டாவது இடம் கிடைத்தது. அது தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

அந்தச் செய்திகள்தான் என்னை மாடலிங் துறைக்குக் கொண்டு வந்தது. பெப்சி, கஜானா ஜுவல்லரி உட்பட ஏராளமான விளம்பரப் படங்களில் நடித்தேன்.

அதைப் பார்த்துவிட்டு ஹிந்திப் படத்தில் நடிக்கக் கூப்பிட்டார்கள். அப்புறம் 'சந்திரலேகா' என்ற தெலுங்குப் பட வாய்ப்பு வந்தது. அதில் நடித்துக் கொண்டிருந்தபோதுதான் இயக்குநர் கே.எஸ். ரவி என்னை அணுகினார். 'என் சுவாசக்காற்றே' படத்தின் கதையைச் சொன்னதுமே நடிக்க ரெடி என்று சொல்லிவிட்டேன்.

இன்னொரு காரணம்... அரவிந்த்சாமி. நான் அவருடைய ஃபேன். 'ரோஜா', 'பம்பாய்' படங்களைப் பார்த்துவிட்டு ஜொள்ளுவிட்ட அனுபவம் கூட உண்டு. அவருக்கு ஜோடியாக நடிக்கும் வாய்ப்பு என்றதும் உடனே சம்மதித்தேன்.

தமிழ்த் திரைப்படத்துறை பற்றி இங்கு வருவதற்கு முன் எனக்கு அவ்வளவாகத் தெரியாது. கமல்ஹாசன், அரவிந்த்சாமி, மணிரத்னம் போன்ற வெகு சிலரை மட்டுமே தெரியும். இங்கு வந்த பிறகுதான் எவ்வளவு பெரிய ஃபீல்டு என்றே தெரிகிறது.

இங்கு நிறைய திறமைசாலிகள் இருக்கிறார்கள். ஹிந்தியைவிட வேல்யூ உள்ள ஃபீல்ட் இதுதான் என்றும் தெரிந்து கொண்டேன். அதன் பிறகுதான் தொடர்ந்து தமிழில் நடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதற்கு முன் தமிழில் நடிக்க வேண்டாம் என்ற முடிவில்தான் இருந்தேன். அதன் காரணமாக தேடிவந்த பல தமிழ்ப்பட வாய்ப்புகளை மறுத்திருக்கிறேன். இப்போது தெளிவாகி விட்டேன். மற்ற மொழிகளைவிட தமிழில் கவனம் செலுத்தும் முடிவுக்கு வந்துவிட்டேன்'' என்று சொல்லும் இஷா, விஜய் ஜோடியாக 'தாலாட்ட வருவாளா' படத்திலும், ரவிச்சந்திரன் இயக்கும் புதிய படத்திலும் நடித்து வருகிறார். இவை தவிர மேலும் சில படங்களும் இஷாவின் கைவசம் உண்டு.

- கோடம்பாக்கன்

ரூட்டிங்கில் முதல் தரமான சாறிக் களஞ்சியம்

# GEETA SAREES

SPECIALISES IN
WEDDING
SAREES
PRINTED
SAREES
WOOLEN
SHAWLS
JEWELLERY ETC



பண்டிகையா!
திருமணமா!
நல்ல நாளா! என்ன
கோலம்!
என்னென்ன ஜாலம்!
இங்கு வந்தால்
கல்யாண மேளம்தான்!

## GEETA SAREES

231 Upper Tooting Road, London SW17

**Tel: 0181 672 0208**

இலண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை

# Western Jewellers

Jewellers
& Gem
Merchants
Specialist in
22ct Gold
Jewllery

CREATES
THE
NEW
WOMAN








230 Upper Tooting Road, Tooting, London SW17 7EW
Tel: 0181 767 3445 Fax: 0181 767 3753
Web:http://www.luxmi.com/western

அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 - 646 2885